

# புலம்பெயர் மனங்கள்

# புதுமைலோலன்

# சிறுகதைகள்

கமலம் பதிப்பகம்
யாழ்ப்பாணம், இலங்கை

# புதுமைலோலன் சிறுகதைகள்

கமலம் பதிப்பகம்
யாழ்ப்பாணம், இலங்கை

- முதலாம் பதிப்பு : மே, 2001


- © கமலா குணராசா, 82, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.


- அச்சுப்பதிவு :
- கணனி வடிவமைப்பு : ராம் கிராபிக்ஸ்
- விலை : 100/-

- Puthumailolan Kathaigal
  (Collection of Short Stories)
  By:
  V.K. Kandasamy
  (Puthumailolan)
  Press Lane, Thalaiyali,
  Kokkuvil, Jaffna.

- Published by: Kamalam Pathippakam
  82, Brown Road, Jaffna.

விற்பனையாளர்கள்:

**பூபாலசிங்கம் புத்தகசாலை**

யாழ்ப்பாணம் - கொழும்பு

# பொருளடக்கம்


| இல. | சிறுகதை | பக்கம் |
|---|---|---|
| 1. | அழகு மயக்கம் | 1 |
| 2. | வாழ்வின் துடிப்பு | 8 |
| 3. | அவளும் ஒரு பெண் | 13 |
| 4. | பிச்சைக்காரி | 17 |
| 5. | தியாகத்தின் சின்னம் | 21 |
| 6. | புகைந்த உள்ளம் | 24 |
| 7. | காதல் கனிந்தது | 30 |
| 8. | வாழ்க்கைச் சுழல் | 35 |
| 9. | கழுத்தில் மாங்கல்யம் | 44 |
| 10. | கௌதமி | 47 |
| 11. | உறவு பலத்தது | 57 |
| 12. | மிஸ் பாமா - 1956 | 63 |
| 13. | மிஸ் செல்லம் - 1956 | 67 |
| | முன்னுரை (i) - (vii) | |

# முன்னுரை

ஈழத்தின் சிறுகதை வரலாற்றில் 1950 - 1963 காலகட்டத்தில் புதுமைலோலனின் சிறுகதைகளைக் கணிப்பீட்டிற்குள்ளாக்காது விடுபடமுடியாது. அக்காலகட்டத்தில் ஈழத்துச் சிறுகதைத் துறையில் வீறு கொண்ட இளைஞர் கூட்டமொன்று பிரவேசித்தது. சமுதாயச் சீர்திருத்தக் காலம் ஈழத்து இலக்கியத்தில் நிறைவுற்று, முற்போக்கு இலக்கியக் காலமும் தமிழ்த் தேசியவுணர்வுக்காலமும் இலக்கியத்தில் முன்னெடுக்கப்பட்ட காலம் உதயமானது. வ.அ.இராசரத்தினம், புதுமைலோலன், நாவேந்தன், கே.டானியல், டொமினிக் ஜீவா, என்.கே.ரகுநாதன், நீர்வைப் பொன்னையன், ம.த.லோறன்ஸ் முதலானோர் சிறுகதைத் துறையில் அக்காலகட்டத்தில் புகுந்து சிறுகதைத் துறையைப் புத்திலக்கியமாக்கினர்.

புதுமைலோலனின் இயற்பெயர் வேலுப்பிள்ளை கந்தையா கந்தசாமி ஆகும். வி.கே.கந்தசாமி, வி..கே என்ற பெயர்களிலும் ஆரம்பத்தில் சிறுகதைகளை எழுதியுள்ளார். ஈழகேசரிப் பண்ணையும், சுதந்திரன் பண்ணையும் இவரை உருவாக்கிவிட்டன. ஈழகேசரி இராஜ அரியரத்தினமும் சுதந்திரன் எஸ்.டி.சிவநாயகமும் புதுமைலோலனின் சிறுகதைகளை விரும்பி வெளியிட்டு இந்தச் சிறுகதை எழுத்தாளனின் உருவாக்கத்திற்குக் காரணமாயினர். தொடர்ந்து புதுமைலோலனின் சிறுகதைகள் ஆனந்தன், புதினம், ஐக்கியதீபம், சமூகத் தொண்டன், காதல், விவேகி முதலான பத்திரிகைகளில் வெளிவந்தன. யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணையில் பிறந்த கந்தசாமி நாவலர் ஆரம்பப் பாடசாலையிலும் நாவலர் வித்தியாசாலையிலும் ஆரம்பக் கல்வியைக் கற்று பலாலி அரசினர் ஆசிரியப் பயிற்சிக் கல்லூரியில் கற்றுப் பயிற்றப்பட்ட ஆசிரியராகப் பத்தொன்பதாவது வயதில் வெளிவந்தார். கிங்கிராக்கொடை, வெலிகந்த பாடசாலைகளில் ஆசிரியராகக் கடமையாற்றிப் பின்னர் யாழ்ப்பாணம் மஸ்ரஉத்தீன் பாடசாலையின் ஆசிரியரானார். ஆனைக்கோட்டைத் தமிழ்க் கலவன் பாடசாலையின் அதிபராகக் கடமையாற்றி ஓய்வு பெற்றார்.

சிறுவயதிலிருந்தே நிறைய வாசிக்கும் பழக்கம் இவரிடமிருந்தது. பெரியாரின் பகுத்தறிவுக் கொள்கை இவரை அப்படியே ஆக்கிரமித்திருந்தது. கடவுள் நம்பிக்கை அற்றவர். கடவுள் பெயரால் நடத்தப்படும் மூடநம்பிக்கைகளையும் பகுத்தறிவுக்கு ஒவ்வாத செயற்பாடுகளையும் இவர் ஏற்றுக் கொள்ளவில்லை. கண்டித்தார். திராவிட முன்னேற்றக் கழகத்தில் இவருக்கு மிகுந்த ஈடுபாடு இருந்தது. அண்ணாத்துரை மீதும் அவரின் எழுத்தின் மீதும் அபார பிரேமை கொண்டிருந்தார். திராவிடக் கழக நூல்கள், சஞ்சிகைகள் அனைத்தையும் படித்தார். அவருடைய மேடைப் பேச்சுக்களிலும் சிறுகதைகளிலும் பெரியாரியத்தின் செல்வாக்கு நிறையவிருக்கும். ஈழத்தில் பேச்சுக்கலை கைவரப்பெற்றவர்களில் புதுமைலோலன் முக்கியமானவர். பேச்சுக்கலையை ஒரு கலையாக அவர் கைக்கொண்டார். ஆற்றொழுக்கான வார்த்தைகள் அழகு தமிழில் அவர் மேடையில் சொற்பெருக்காற்றும் போது பிரவகிக்கும். தமிழரசுக்கட்சியின் அரசியல் மேடைகளில் அவர் முக்கியமான பேச்சாளராக விளங்கினார். அவரைப் பேச்சாளராகத் தான் இன்றைய தலைமுறை அறிந்துள்ளது. ஆனால் அவர் கணிப்புக்குரிய எழுத்தாளர்களில் ஒருவரென்பதை அறியவில்லை.

புதுமைலோலனின் முதலாவது சிறுகதை 1952 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 30 ஆந் திகதி சுதந்திரனில் வெளிவந்தது. அப்பொழுது புதுமைலோலனுக்கு வயது 23 ஆகும். பகுத்தறிவுக் கொள்கையில் ஊறிய அவர் தனது பதினெட்டாவது வயதிலேயே கதைகளும் கட்டுரைகளும் எழுத ஆரம்பித்து விட்டார். 1946 ஆம் ஆண்டு சிரேஷ்ட தராதரப் பத்திர பரீட்சையில் சித்தியடைந்ததன் பின்னர் நூல்களையும் பத்திரிகைகளையும் நிறைய வாசிப்பதைப் பழக்கமாக்கிக் கொண்டார். அக்காலத்தில் அகிலனின் சிநேகிதி, துணைவி என்ற நாவல்களை ஒரு முறைக்கு இரு தடவைகள் வாசித்துள்ளார். அற்புதப் படைப்பாகவும் அரிய நாவலாகவும் அகிலனின் இந்த நாவல்கள் பட்டன. தொடர்ந்து கு.ப. ராஜகோபாலன் - புதுமைப்பித்தன் ஆகியோரின் கதைகள் அவரைக் கவர்ந்து கொண்டன. காண்டேகர், மாப்பசான், பாரதிதாசன், கலைமகள், மறுமலர்ச்சி, மு. வரதராசனின் நூல்கள் புதுமை லோலனை ஆக்கிரமித்தன. ஈழத்துப் பத்திரிகைகள் அனைத்தும் அவரால் வாங்கி வாசிக்கப்பட்டன. நூல்கள், பத்திரிகைகள்

வாங்குவதற்குப் பணம் வழங்குவதில் அவரது தந்தை கந்தையா எப்பொழுதும் தயங்கியதில்லை.

இந்த நிலையில் தானும் எழுதினாலென்ன என்ற எண்ணம் எழுந்தது. தனது முதலாவது சிறுகதைக்குக் கரு கிடைத்த விதத்தினை அவர் பின்வருமாறு கூறியுள்ளார். 'மாலையாகும், எங்கள் வீட்டு முற்றத்தில் மாதர் மாநாடு ஆரம்பமாகும். அயலவர்கள் பலரும் அம்மகாநாட்டின் உறுப்பினர்கள். கதைக் கச்சேரியும் கிண்டலும் சிரிப்பொலியும் என் வாசினையைக் குழப்பும். இவர்களது பேச்சில் அயற் பெண்ணொருத்தி பற்றிய விமர்சனம் அடிக்கடி நிகழும். அவள் ஏழை. இளமையுடன் கூடிய அப்பெண் இன்னொருவனின் ஆசைநாயகி ஆகியதாகப் பேச்சு. அவள் கணவன் கொழும்பிலிருந்தான். அவள் ஒரு குழந்தையைச் சொந்தக் கணவனுக்கு உரித்தாக்கவில்லை எனவும் பேசினர். தாசி என்று அந்த மகாநாட்டில் தீர்ப்பு வழங்கப்பட்டது. ஓரிரவு மேசை முன் இருந்து எழுதத் தொடங்கி விட்டேன். அந்தப் பெண் என் கதையின் கதாநாயகியானாள். கதை பின்னி விட்டேன். ஏழை தாசியா? என்ற பெயரைக் கதைக்கிட்டேன். திரும்பவும் நான் எழுதிய கதையைப் படித்தேன். மனம் ஆனந்தத்தால் துள்ளியது. ஒரு கதையைப் பிரசவித்து விட்டேன். சுதந்திரனுக்கு அக்கதையை அனுப்பி வைத்தேன். இரண்டு கிழமைகளில் அக்கதை சுதந்திரனில் இன்றைய சமுதாயக் கண்ணாடி என்ற குறிப்புடன் வெளிவந்தது. எத்தனை முறை சுதந்திரனைப் படித்தேன் என்பது நினைவிலில்லை. பத்திரிகை நைந்து போகுமளவிற்குப் படித்திருப்பேன். மனதிலே இன்ப மயக்கம். என்னாலும் எழுத முடியும் என்ற திட நம்பிக்கை குடிகொண்டது' என்கிறார்.

'சுதந்திரன், ஈழகேசரி, தினகரன் முதலிய பத்திரிகைகளில் அக்காலங்களில் அடிக்கடி எழுதினேன். எழுத எழுத எழுதவேண்டு மென்ற அவா மிகக் கொண்டேன். அப்போது முற்போக்கு பிற் போக்கு நற்போக்கு யதார்த்தம் என்ற விவகாரங்கள் கிடையாது. அன்று எழுத்தாளன் என்பதில் பெருமைப்பட்டேன். பெருமை மிக்க அக்காலத்தில் எழுதினேன். முதல் கதையையே பலரை எழுத்தாள னாக்கிய சுத்நதிரனில் எழுதினேன். தன்னம்பிக்கையும் உயர் கொள்கைகளும் கொண்ட சமுதாயமாக எங்கள் சமுதாயம் மாற வேண்டும். எண்ணப் புரட்சி கொள்ள வேண்டும் என்ற ஆவலினால்

எழுதினேன்' எனப் புதுமைலோலன் கூறுகிறார்.

எழுத்தாளன் ஓர் இலட்சியத்தின் அடிப்படையில் இருக்க வேண்டுமென்பதும் அவன் நிச்சயம் அரசியல் சார்ந்தவனாக இருக்க வேண்டுமெனப் புதுமைலோலன் கருதுவார். வாழ்வுடன் பிணைந்து விட்ட அரசியலும் கொள்கையாளனாக எழுத்தாளன் இருக்கவே செய்வான். வெளிப்படையாகக் கூறாவிடினும் அவனது உள்ளம் ஒரு கொள்கையில் பற்றுக் கொண்டேயிருக்கும். எந்த அரசியலிலும் சேராத பொது மனிதன் நான் எனக் கூறும் எழுத்தாளன் நடிக்கிறான். திட்டவட்டமான கொள்கையுடன் அரசியலில் ஈடுபடும் எழுத்தாளனே சமூகம் வளர உதவுபவன். அவனது பேனாவே வலிமையுடையதாக இருக்கும். ஒரு எழுத்தாளன் அரசியல்வாதியாக இருக்கும் போது சமூகச்சிக்கலின் அடிப்படைகளையும் மனித வாழ்வில் அரசியலின் பெரும் பங்கினையும் உணர முடியும். உயிரூட்டமுடன் எழுதும் எழுத்தாளர்கள் அரசியல்வாதியாகவுமிருப்பர்' என்கிறார் புதுமைலோலன். எழுத்தாளன் அரசியல் சார்ந்தவனாக விளங்க வேண்டும் என்பது அவரின் கருத்து.

புதுமைலோலன் பேச்சாளனாகவும் சிறுகதை எழுத்தாளனாகவும் மட்டும் இருக்கவில்லை. ஏமாற்றம் (கருகிய ரோஜா) என்ற குறுநாவலையும், தாலி, நிலவும் பெண்ணும் ஆகிய நாவல்களையும் படைத்துள்ளார். அத்துடன் மூத்த எழுத்தாளர் தி.ச. வரதராசன் (வரதர்) நடாத்திய ஆனந்தன் என்ற திங்கள் இதழின் இணை ஆசிரியராகவும் விளங்கியுள்ளார். ஒன்றரை ஆண்டுகாலம் தமிழரசு என்றொரு அரசியல் வாரப் பத்திரிகையை நடாத்தியுள்ளார். முற்போக்கு எழுத்தாளர் சங்கத்திலும் இலங்கை எழுத்தாளர் சங்கத்திலும் அங்கத்துவம் வகித்துள்ளார். தமிழரசுக் கட்சியில் அங்கத்துவம் வகிப்பதற்கு முன்னர் மு. கார்த்திகேசனின் மேடைகளில் அவருடன் இணைந்து அவர் புகட்டிய மார்க்சியத்தில் பெரும் ஈடுபாடு கொண்டிருந்தார். தமிழ்த்தேசியம் பற்றிய கருத்துநிலை அரசியலில் முதன்மை பெற்றபோது அதன் பாதையில் தந்தை செல்வாவின் வழியை ஏற்றுக் கொண்டார்.

புதுமைலோலனின் முதற் சிறுகதையைத் தொடர்ந்து பிச்சைக்காரி, சிந்தனை அவதாரம், புகைந்த உள்ளம், அப்பே லங்கா, கழுத்தில் மாங்கல்யம், மிஸ் செல்வம் 1956, உறவு பலத்தது, அழகு மயக்கம் முதலான சிறுகதைகள் சுதந்திரனில்

வெளிவந்தன. அதேவேளையில் ஈழகேசரியில் புதுமைலோலனின் பல சிறுகதைகள் தொடர்ந்து பிரசுரமாயின. 1953 இலிருந்து 1954 வரையிலான காலகட்டத்தில் இவரின் பதினைந்து சிறுகதைகள் ஈழகேசரியில் வெளிவந்தன. 1953 இல் அவரின் ஈழகேசரி முதற் சிறுகதையாக புத்தன் பரிசு வெளிவந்தது. அதனைத் தொடர்ந்து பத்மா, மாகந்தி, வாழ்க்கைச் சுழல், அவளும் பெண், தியாகத்தின் சின்னம், வாழ்வின் துடிப்பு, காதல் கனிந்தது, அவள், அவன், அவர், இந்திரா, அவள்-அவன்-அவர், கௌதமி, முதலான சிறுகதைகள் வெளிவந்து புதுமைலோலனைச் சிறுகதை எழுத்தாளனாக அங்கீகாரம் பெற வைத்தன. தினகரனில் இவர் பல சிறுகதைகளை எழுதியுள்ளார். சமூகத்தொண்டனில் சில சிறுகதைகள் வெளிவந்துள்ளன. ஐக்கியதீபம், ஆனந்தன் ஆகிய பத்திரிகைகளில் இவருடைய சிறுகதைகள் வெளிவந்துள்ளன. அவை பற்றிய தகவல்கள் கிடைக்கவில்லை. புதினத்தில் பிள்ளைக்கனியமுது என்றொரு சிறுகதை வெளிவந்துள்ளது. அவர் எழுதிய ஆக்கங்களில் எதுவும் அவரிடமில்லை. அண்மையில் அன்னாருடைய சிறுகதைகளைத் தேடிப் பெற்று அவரிடம் வழங்கியுள்ளேன்.

புதுமைலோலனின் சிறுகதைகளின் இலக்கு வெகு தெளிவானது. சமூகத்தில் தான் கண்ட கேட்ட அனுபவித்தவற்றினைத் தான் உணர்ந்தவாறு சமூகத்திற்கு எடுத்துக் கூறிவிடல். சமூக விமர்சனத்தின் மூலம் சமூகத்தின் இழிநிலைகளைச் சுட்டிக்காட்டுதல். கருத்தினைப் பிரச்சாரம் செய்வது அவர் நோக்கமல்ல. சமூகத்தின் பல்வேறு உணர்வு நிலைகள் அவர் சிறுகதைகளின் உள்ளடக்கமாகியுள்ளன. வறுமையின் கொடூரங்கள், பெண்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகள், காதல் ஏமாற்றங்கள், பணக்காரர்களின் பண்பற்ற நடத்தைகள், வர்க்கியச்சிந்தனைகள், குடும்ப உறவுகள் முதலானவை இவரது கதைகளின் பொருளாகும். சிறுகதைக்குரிய வடிவம் அவருக்கு நன்கு கைவந்துள்ளது. முரண்படாத பாத்திரவார்ப்பும் யதார்த்தமான சித்திரிப்பும் எளிமையான நடையும் அவரின் சிறுகதைகளிற் காணப்படும் சிறப்பம்சமாகும்.

புதுமைலோலனின் சிறுகதைகளில் ரொமாண்டிசப் பண்பு மிகத் தூக்கலாகவே இருக்குமென்பது மறுப்பதற்கில்லை. அதனை விட தமிழ்த் தேசியம் பற்றிய சிந்தனைகள் கொண்ட சிறுகதைகள் முக்கியமானவை. 1956 ஆம் ஆண்டின் தனிச் சிங்களச்சட்டத்தின்

விளைவாக ஏற்பட்ட அரசியல் நிலைமைகள் இனவொடுக்கல்கள் தமிழ்த் தேசியச் சிந்தனைகளை உருவாக்கிவிட்டது. காலி முகத்திடலில் சாத்வீக சத்தியாக்கிரகமிருந்து சிங்களக் காடையரால் தாக்கப்பட்டவரில் புதுமைலோலன் ஒருவர். மூட்டுடன் அவர் வலக்கை கழன்ற நிலையில் பெயிரா ஏரிக்குள் தூக்கி வீசப்பட்டார். யாழ்ப்பாணம் கச்சேரி முன் சத்தியாக்கிரகம் இருந்தமைக்காகத் தமிழ்த்தலைவர்களுடன் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டார். அவ்வேளை எழுதிய நூல்தான் அன்பு மகள் அன்பரசிக்கு என்பதாகும். இனவொடுக்கலின் பல்வேறு நிலைகளிலும் பாதிக் கப்பட்ட பங்காளனாக விளங்கிய புதுமைலோலன் தமிழத்தேசிய உணர்வுகளைப் பிரதிபலிக்கும் சிறுகதைகளை எழுதியுள்ளார். 1956 இல் அவர் எழுதிய அப்பே லங்கா என்ற சிறுகதை சுதந்திர னில் வெளிவந்தபோது அவரை மார்க்சிய முற்போக்கு வாதிகள் இனவாதி என ஒதுக்கி விட்டனர். புதுமைலோலன் மட்டுமல்ல. அவர் போன்று தமிழ்த் தேசிய வாதக் கதைகள் எழுதிய பலரும் ஒதுக்கப்பட்டனர்.

புஞ்சிசிங்கோ சிறையிலிருந்து வெளியே வருகிறான். நினைவுகள் பின்னோக்குகின்றன. வறுமையால் பக்கத்து வீட்டுப் பலாக்காயைத் திருடிச் சாப்பிடும் பிச்சைக்காரியான மெனிக்காவை பிக்பொக்கட் காரனான புஞ்சி சிங்கோ மணந்து கொள்கிறான். திருடும்பொழுது பிடிபட்டு ஆறு மாதம் சிறை வாசத்தை அனுபவித்து விட்டுத் திரும்பி வருகிறான். காலிமுகத்திடலில் தமிழ் உரிமைக் கான சத்தியாக்கிரகம் நடக்கப் பாராளுமன்றத்தில் தனிச்சிங்களச் சட்டம் நிறைவேற்றப்படுகின்றது. சத்தியாக்கிரகிகளைத் தாக்கும் காடையர்களில் புஞ்சிசிங்கோ ஒருவனாகிறான். அவனுக்கு ஒரு கைக்கடிகாரம் இரண்டு மணிப்பர்ஸ் பணத்துடன் கிடைக்கின்றன. இனவுணர்விலும் பார்க்க வறுமைதான் புஞ்சி சிங்கோவைக் காடைய னாக்குகின்றது என்பதும் நோக்கத்தக்கது.

புதுமைலோலனின் சிறுகதைகளில் பல கௌதம புத்தரோடு சம்பந்தப்பட்ட ஒழுக்க விசாரமாக இருக்கின்றன. புத்தரின் கருத்துக்க ளில் அவருக்கிருக்கின்ற பற்றுதலை அச்சிறுகதைகளி லிருந்து உணர்ந்து கொள்ளலாம். சிந்தனை அவதாரம், அழகு மயக்கம், புத்தன் பரிசு, மாகந்தி, கௌதமி என்பன இவ்வாறான சிறுகதைகளா கும். இச்சிறுகதைகளில் அவர் கையாண்டுள்ள உரை நடை

வெகு கம்பீரமானது. அரண்மனை வாழ்வு, அழகிய மனைவி, ஆளணிகள், அனைத்தையும் துறந்து புத்தன் வெளியேறுகிறான். ஞானத்தைத் தேடி சிந்தனை அவதாரமாகிறான். 'கடவுள் ஆலயத்தி லுள்ள சிலையல்ல' என்றான் அறிவுடன். 'பிராமணன் மட்டும் உயர் ஜாதியல்ல' என்றான் பகுத்தறிவுடன். 'கடவுளைப் பற்றிக் கவலைப்படாதே' என்றான் ஆராய்வுடன். மனிதனுக்கு உதவி புரிந்து வாழ். மனிதனுக்கு மனிதன் துன்பம் கொடுப்பவனாக இராதே. அகிம்சை தான் நல்லாயுதம் என்றான் புத்தன். புத்தனை அவதார மூர்த்தியாகக் காணாமல் சிந்தனையும் பகுத்தறிவுங் கொண்ட அறிஞனாக ஆசிரியர் இச்சிறுகதையிற் காண்கிறார்.

புதுமைலோலனின் மாகந்தியும், கௌதமியும் கௌதமனிடம் உலகியல் ஆசை கொண்ட பின்னர் அவனின் போதனையால் அவன் அடியார்களாகின்றனர். புத்தன் பரிசு வேறுபாடான மனதைக் கவரும் ஒரு சிறுகதை. தந்தையிடம் பரிசு பெற கௌதமனின் மகன் ராகுலன் வருகிறான். பரிசு கேட்ட மகனுக்குப் புத்தன் வழங்கும் பரிசு வித்தியாசமானது. இவ்வகைக் கதைகளில் அழகு மயக்கம் உருவம் உள்ளடக்கம் அனைத்திலும் நல்லதொரு சிறு கதைக்குரிய பண்பினைக் கொண்டுள்ளது. இச்சிறுகதை முதலில் சுதந்திரனில் வெளிவந்தது. பின்னர் அரு.இராமநாதன் நடாத்திய காதல் சஞ்சிகைகளில் மறுபிரசுரமாகியது. அதன் பின்னர் விவேகி சஞ்சிகைகளில் மீளவும் பிரசுரமாகியது. இச்சிறுகதையில் ஆசிரிய ரின் கம்பீரமான உரை நடையைக் காணலாம். சகல சௌபாக்கி யங்களையும் அழகு மனைவியையும் துறந்து ஞானம் தேடும் புத்தனைத் தம் அழகால் வெற்றி கொள்ள முயலும் மூன்று அழகிகள் அடையும் ஏமாற்றத்தை அழகு மயக்கம் சித்திரிக்கின்றது.

புதுமைலோலனின் சமூகக் கதைகளில் காதல் தூக்கலாகவே இருக்கும். எனினும் அவற்றில் சமூகப் பிரக்ஞை இருக்கும்.

ஈழத்தின் சிறுகதை இலக்கியத்திற்குப் புதுமைலோலனின் பங்களிப்பு ஒரு காலகட்டத்தின் சிறுகதை வரலாற்றில் முதன்மை யானது. நமது சிறுகதை இருப்பினை வரலாற்றடிப்படையில் மதிப்பிட்டறியப் புதுமைலோலனின் சிறுகதைகள் உதவும்.

பிரதேசச் செயலாளர் கலாநிதி க. குணராசா
சங்கானை
28.05.2001

# அழகு மயக்கம்

போதி மரத்தடியில் சித்தார்த்தன் உட்கார்ந்திருந்தான். உளம் ஓடியது. உண்மை காணும் அவாவுடன் ஓடியது.

அரசபோகம் துறந்து, அருமை மனைவி யசோதராவைப் பிரிந்து, தன் இன்பத்திற்காக முழு வாழ்வையும் தந்த தந்தை சுத்தோதனனைப் பிரிந்து, நாட்டைத் துறந்து, தன் நாமம் கூற உற்பவித்த தன் மைந்தன் இராகுலனையும் விட்டு விலகி மூன்றாண்டுகள் கடந்து விட்டன.

காலமாற்றம் சித்தார்த்தன் உள்ளத்தில் எத்தனையோ உண்மைகளை, வாழ்வு நேர்மைகளை, இயற்கையின் தன்மைகளை கற்பித்து இருந்தது. அதற்காக உடலை உளத்துக்கு ஏற்க அமைத்து வாடியிருந்தான். அந்த வாட்ட நேரத்திலும் அழகு உடையில்லாத போதிலும் அவன் அழகு சுடர்விட்டது. இராசகுமாரனுக்குரிய கம்பீர அழகு விட்டு விலகாது மின்னலிட்டது.

பிணி... மூப்பு... சாக்காடு... அவனுள்ளத்தில் சுழன்ற பிரச்சனைகள். உண்மைகாணும் அவா அழைக்க காடு நோக்கிப் பறப்பட்டான். வனாந்தரம், மலைநாடு, அழகுநதி எல்லாம் வந்து வந்து போனது. கால் நடந்தது. கிடைத்ததை உண்டு உளம் ஆராய்வு வீறிடப் போனான். போய்க்கொண்டே யிருந்தான். மூன்று ஆண்டுகளையும் இப்படிக் கடத்தினான். அற்புத உண்மைகள், மனித வாழ்வின் மையம், தேவை, மனிதன் செய்யவேண்டியன... யாவும் அவன் அறிவில் திரண்டது. ஞானம் வந்தது.

அவனைப் பின்தொடர்ந்த பல சிஷ்யர்கள் நாடுபல சுற்றிக் கடைசியாக தன் சொந்த நாட்டுக்கு அருகில் சில மைல்கள் இடைத் தூரத்தில் உள்ள காட்டில் இயற்கை சூழ போதிமர நிழலில் உட்கார்ந்திருந்தான்.

இயற்கையின் ஆசிரியன், அழகின் கூட்டுப் பொருள், கதாசிரியனை, கலைஞனை, ஓவியனை, ரசிகனைப் பைத்தியமாக்கி விளையாடும் அழகுமதி, ஆகாயத்தில் பவனி வந்தாள். சிஷ்யர்கள் யாவரும் தங்குமிடக் குடிசையை அடைந்தனர். சிலர் தூங்கினர். சிலர் படித்தனர். ஆனால் சித்தார்த்தன் சிந்தனை வயப்பட அரச மரத்தின் கீழ் மதியைப் பார்த்தபடி உட்கார்ந்திருந் தான். தனிமையில் இப்படி எத்தனையோ இரவுகளைக் கடத்துவது அவன் வழக்கம்.

மதி பேசியது. இயற்கை கதை கூறியது. மனம் முன் ஓடியது.

மன அரங்கம் ஆடியது. அங்கே, இராகுலன் வந்தான். பின் அவன் மறைய யஸோதரா வந்தாள். ஆரம்பகால வாழ்விலே காதல் உலக மனவிருப்பு இன்பத்திலே இனிமையைக் கூடாக்கி உண்டு கிரங்கிய அந்த மதிவேளைகள்.

உளமெல்லாம் உருண்டது.

அன்றொருநாள்....

ஆரம்பகாலம் யசோவுடன் வாழ்க்கையைச் சித்தார்த்தன் ஆரம்பித்த காலம்.

மதி வானச் சோலையில் அழகுப் பூவாகியிருக்கும் இராப் பொழுது. அரண்மனையுள்ளே ஒரே நிசப்தம். அதைக் கலைக்கும் முகமாக யாழ் ஒலி ஒன்று எழுந்துகொண்டிருந்தது. 'ஓடிவா, ஓடிவா' என யாழ் ஒலித்தது. யாரையோ அழைத்தது அவ்வொலி. அதில் அவசரம், தேவை கிடந்தது.

நிலவு ஒளி வீசும் மேல் மாடியிலே தங்க இழை பின்னிய அழகு மஞ்சத்திலே, மனமயக்கம் மனமெல்லாம் கொடுத்த போதையிலே யஸோதராவின் வெண் விரல் மீட்டிய யாழ் ஒலிதான் அது.

ஒரு அழகு யாழ் இன்னொரு அழகு யாழை மீட்டியது. யாழ் மீட்டிய யாழை மீட்ட 'சித்தார்த்தன்' ஓடோடி வந்தான். சித்தார்த்தன் வந்ததை அறியாது யஸோ யாழை மீட்டினாள். அந்த யாழ் ஒலியிலே தென்றல் வீசியது. சுகம் கிடந்தது. மென்மையாயிருந்தது. 'கலை' கட்டிப் புரண்டது.

சித்தார்த்தன் சிந்தையெலாம் யாழ் ஒலி. அதைத் தொடர்ந்து 'யஸோ' பிம்பம். மௌனமாகப் பினனே நின்ற சித்தார்த்தன் கரம் யஸோ கண்ணைப் பொத்த யாழ் நாதம் படாரென நின்றது.

யஸோ திரும்பினாள். திகைக்கவில்லை. தன் உள்ளம் தடவிய சித்தார்த்தனே உடல் தடவ முடியும். பழகிய கரங்கள். அவள் வேண்டிய கரங்கள். அவள் இன்பக் கரங்கள். ஸ்பரிச இன்பத்திலே இனிமை காட்டும் வலிமைக் கரங்களை அவள் அறிவாள்தானே.

பின் விட்டகன்றாள்.

ஊடல் அவளுக்கு. சித்தார்த்தன் நேரஞ்சென்று வந்த ஒரே காரணந்தான்.

ஜன்னலூடே வானத்துச் சந்திரன் ஓடுவதை அண்ணாந்து பார்த்தபடி நின்றுகொண்டிருந்தாள்.

யாழைச் சித்தார்த்தன் எடுத்தான். மீட்ட ஆரம்பித்தான். சிருங்கார ரஸத்தை யாழ் மீட்டியது. இல்லை. சித்தார்த்தன் சிந்தையின் படப்பிடிப்பு அது. கொஞ்ச நேரந்தான் இப்படி. எழுந்தான் சித்தார்த்தன்.

'யஸோ... யஸோ... ய...ஸோ'

யஸோ வாய் நாதம் எழவில்லை. மௌனம் சில நிமிடங்கள்.

யஸோ மஞ்சத்தை அடைந்தாள். யாழை எடுத்தாள். மீட்ட ஆரம்பித்தாள். ஆனால் கை சிறு நடுக்கம் கொண்டிருந்தது.

யாழை மீட்ட சித்தார்த்தன் தடுத்தான். மீட்ட விடவில்லை.

'ஏன்' எனப் பார்த்தாள் பொய்க் கோபத்துடன்.

'நீயே ஒரு யாழ். பின் ஏன் இந்த யாழ்' இப்படிப் பேசியது சித்தார்த்தன் வாய்.

'அப்படியா, இந்தாருங்கள். இதுதான் யஸோதரா' என்றபடி அவனிடம் நீட்டினாள் யாழை யஸோதரா.

யாழை வாங்கப் போன சித்தார்த்தன் யாழைத் தொட்டான். 'டிங்' என ஒரு நாதமெழ யாழ் பக்கத்தே வைக்கப்பட்டது. யஸோவின் அழகுகை அவன் கையுள் அமுங்கியது.குழைந்து கிடந்தது. யஸோவின் முகத்தை நிமிர்த்தியபடி 'ஏன் யஸோ கோபம்' என்றான்.

'உங்களால் தான்...' என்று ஆறுதலாகப் பேசினாள் யஸோ.

'என்னாலா' எப்படி'

'என்னைத் தனிமையில் விட்டு இத்தனை நிமிடங்களும் எங்கே போயிருந்தீர்கள்?'

'அட அதுவா, உடனே உன் ஒலி கேட்டதும் ஓடோடி வந்தேனே யஸோ. அதற்காகவா...'

'ம்' என்றாள் குழந்தையாகி.

பின் ஊடலா, உடல் குதூகலமிட்டது. இவன் நாதமெழுப்பினான். யஸோவெனும் அழகு யாழில். இக்கீத இசை உலகத்துக்குக் கேட்டவில்லை. இதயத்துக்குக் கேட்டது. அதுவும் இரண்டே இதயத்துக்குக் கேட்டது. இன்பம் பிறந்தது. வாழ்வு அருமை அங்கே உலாவியது.

இப்படியாகச் சில நிமிடமே பிரியாத, முடியாத காதல் சிட்டுக்கள் தான் யஸோவும் சித்தார்த்தனும். நித்திரை செய்யும் போது கூட யஸோ சித்தார்த் தனின் அணைப்பிலேயே கிடப்பாள். எப்போதும் இருவரும் ஒட்டியபடியே இருப்பர். கொஞ்ச நேரம் பிரிந்து விட்டால் யஸோ உளம் புயல் ஆகிவிடும். சித்தார்த்தன் சிந்தை அலையாகிவிடும். ஓடிச்சேர்ந்து விடுவர்.

யஸோ சித்தார்த்தனின் உலகம். சித்தார்த்தன் யஸோவின் இன்ப வையம். உலகமே ஒரு இன்பப் பூங்காவாகவே அவர்களுக்குத் தெரிந்தது. அன்பு, அணைப்பு, தொடு இன்பம், முத்தமாரி, இதயச் சேர்வு இப்படி ஒரே இன்ப விளையாட்டில் உலகம் மறந்து உளம் மகிழவிருந்த சோடிகள் அவர்கள்.

ஆனால்... இதுவெல்லாம் அப்போது கடந்த விடயம். இளமையை இன்பமொன்றுக்கு இரையாக்கிய நேரம்.

ஆனால்... இப்போது அதே யஸோவை விட்டுப் பிரிந்து மூன்று ஆண்டுக ளைக் கடத்திய உறுதி உளச் சித்தார்த்தன். சிலநிமிடமே பிரியாத அவர்கள் மூன்று ஆண்டுகளைக் கடத்தி விட்டனர். இப்போதும் யஸோ ஞாபகமுண்டு, ஆனால் அந்த ஞாபகத்தில் போதையில்லை. தேவை கிடையாது, ஆசை

தளிர்விடுவதில்லை. அவளும் உலகத்திலுள்ள பெண்களிலொன்று. தசை, தோல் சேர்த்த ஒரு பெண் எனத்தான் சித்தார்த்தனைப் பொறுத்த மட்டில் தோன்றியது.

அழகுமதி, முன் மயக்க 'மது' அவனுக்கு. போதை ஆசிரியன் சித்தார்த்தனுக்கு. அதேமதி இப்போது இயற்கை ஆசான். விடுகவி போன்ற பல பிரச்னை போக்கும் நல்ல குரு பழைய இன்ப அலை உள்ளக்கடலில் மோதும். வருந்தியதும் உண்டு. ஆரம்பகாலப் பிரிவில் அதே இன்ப அலை அறிவு தருகிறது இப்போது. இயற்கையைக் கற்பிக்கிறது. மன சாஸ்திரம் போதிக்கிறது. அழகு மயக்கம் மனிதனை ஒரே அமுக்கில் தன்னுள் அடக்கி விடக்கூடிய ஒரு பூட்டு என அவனுக்குத் தெரிகிறது. அது அவன் மன முடிபு. முகமெல்லாம் மயிர்க் கற்றை. அகமெல்லாம் அறிவுக்கற்றை. தேகமெல்லாம் மெலிவுத் தோற்றம். தேவையெல்லாம் 'உலகம் வாழ' உண்மையைக் காணல். கண்டதை, அறிந்ததை பிரத்தியட்சமாகக் காட்டியே புத்தன் பேசுவான். சித்தார்த்தன் புத்தன் ஆன பிறகு எதையும் ஆலோசனையில் புடமிட்டு ஆராய்ச் சியில் முடிவிட்டுத்தானே அதில் நடமாடிப் பின்பு பேசுவான். காணாததைப் பேசான். தெரியாததை மழுப்பான். கூற இயலாததைத் தொடான். பின்னும் பின்னும் ஆராய்வான். 'பிருதிவி' அவனது ஆசான். 'அப்பு' அவனின்குரு. 'தேயு' அவனின் ஆசிரியன். 'வாயு' அவனின் உபாத்தியாயன். 'இயற்கை' அவன் ஆராய்வுக் கூடம். அங்குள்ள செயல்கள் அவனது ஆராய்ச்சி விடயங்கள்.

க-ட-வு-ள்... கடந்த நிலையில் உள்ளோருக்குத் தோன்றியதாம். ஆனால் புத்தன் தேடினான். முயன்றான். முடியவில்லை. இயற்கையின் இயல்பு 'கடவுள்' போதனை செய்தது.

ஒருவன் கூறியதை அப்படியே செவியேற்று வெளியே அப்படியே உரைக்கும் பான்மை அவனிடம் கிடையாத ஒன்று. ஆதலால் அவன் சிந்தனைவாதியானான். சிந்தனையின் ஒரு அவதாரமானான். உண்மையின் பிறப்பாளன் ஆனான்.

இந்தப் புத்தன் தனிமையில் சிந்தனைத் தோழனாகி உட்கார்ந்துள்ளான்.

மதி மேகத்தில் மறைந்து, மறைந்து கண்ணாமுச்சி விளையாடினான். நேரம் ஓடிக்கொண்டிருந்தது.

நகர்ந்தது இரவு. புத்தன் போதி மரத்தின் கீழ் அப்படியே இருந்தான்.

◆ ◆ ◆ ◆ ◆

யாழ் கீதம் காட்டு அமைதியைக் குலைத்தது. சிருங்காரம் பரக்க ஒலி நாதமாகிப் பறந்தது. சலசல சல்சல் என்ற சலங்கை ஒலியும் கலீரிட்டது. சுகந்தம் வாசனை காற்றில் பரந்து புத்தன் நாசியுள்ளும் புகுந்து சென்றது. ஆனால் அந்த ஒலியோ, சுகந்த மணமோ புத்தனை அணுகிய அவனுக்குத் தெரியாது.

மனதை ஒன்றிலேயே பதித்து அதிலேயே முழுச் சக்தியையும், புலனையும் யாவையும் செலுத்தி வைக்கும் ஆற்றல் கைவந்துவிட்டது பத்தனிடம். ஐந்து அவா அவனுக்கு நிலையது. ஆதலால் பிணி - மூப்பு - சாக்காடு இம்மூன்றையும் திரட்டும் துயர்போக்க வழியைத் தேடினான். சிந்தனையைப் பலகோணப் படுத்தி ஒரே விடயத்தை ஆராய்கிறான். ஆதலால் ஒரே நேரிய புலன் மாறாத மேலான சிந்தனை, ஆதலால் வெளியுலகு மறந்தான். அகவுலகில் ஆழமாகப் போய்க்கொண்டிருந்தான் உண்மையை நாடி. அப்போதுதான் யாழ் ஒலி எழுப்ப, சதங்கை சப்தமிட மூன்று அழகுகள் வந்துகொண்டிருந்தன.

தண்ஹி, ரதி, ரங்கா என்ற மூன்று பெண்களும்தான் வந்தனர். நடனமாடிய படி, போதையேற்றியபடி வந்தனர். புத்தன் இருந்த போதி மர நிழலை அடைந் தனர். மேலே அழகு சந்திரன். காட்டிலே குளிர் தென்றல். போதிமர நிழலில் அழகிகள் மூவரும். 'அழகு' தரும் சாதனங்கள். ஒருவரையொருவர் தாளாத ஒப்புவமையில்லாத அழகிகள். ஆடம்பர மாதுக்கள். ரசம் சூழ் செல்விகள். புத்தனைச் சூழ்ந்தனர்.

'தண்ஹி' வந்த மூவருள் மூத்தவள். ஆசையின் கூடு ஆவலின் திரட்சி. கண்டவர் மனம் பம்பரமாக ஆட்டும் அழகுப் புதையல். தேனார் மேனி. இளமைக்குளிர்வு, அதர நெளிவு, போதை தரும் கோதை. காமக்கலை பயிற்றும் மேதை. ஆனந்த உலகு கூட்டும் பூவை. அவள் கண் ஒரு கலைக் காட்சி மண்டபம். அங்கு நடனமுண்டு, பாட்டுண்டு, காவியமுண்டு. ஓவியமுண்டு. யாவுமே உண்டு. அழகை அழகு செய்வது போல மென்மையுடை அழகை வெளிக்காட்டும் உடலுடன் ஒட்டிய உடை. உடை உடுத்தியுள்ளாளா இல்லையா உன்பதைக் கண்டுகொள்ள முடியாத உடையால் மேனி சுற்றி உளமெல்லாம் ஆசை சற்ற, கண்ணெல்லாம் போதை சுற்ற நின்றாள். மார்பு படபடக்க, கைகுழைந்து சாய, கால் நடனமிட்டது. நாட்டியம் தொடங்கியது. சிருங்காரம் உடையாகி, உடலாகி, நாதமாகி நாட்டியமாகிப் பரந்தது.

ரதி கோபம் மிக்கவள். அவள் கோபம் கொள்ளும்போது உண்டாகும் அழகு உண்டே ஒப்பாரற்றது. தனிநிகரானது. அழகி. கடைந்தெடுத்த அழகி. உலக அழகு சேர்ந்த கூட்டு அவள். தண்ஹி போன்று உடல் தெரிய உடையும், உடல் லாவக நடையும், குழைந்து நோக்கும் போதை நயனமும், கட்டியம் கூற நடனமாடினாள். அறுபத்து நான்கு கலையும் கட்டிப் புரண்டது.

ரங்கா உலகை ஆட்டும் உடல் தேவயரசி. காமத்தின் பிறப்பிடம். காமம் பயில வேண்டியவர்கள் ரங்காவை நாடவேண்டும். அவள் உடல் நெளிவில் மது. கண்ணில், குழல்வில், பார்வையில், மது. உறுப்புகளே மதுக்குடம். அவளே ஒரு மது. வெறி தரும் பெண் அவள். போதைதரும் அரசி அவள். ஆடினாள் காமம் பரக்க ஆடினாள். உளம் வீச ஆடினாள். வெறி வட்டமிட ஆடினாள்.

அவர்கள் ஆசையும், அழகும், காமமும் உருவாகி வந்த அழகு உருக்கள். கலை பயிற்றும் காவிய உறுப்புக்கள். அழகு முடிபுகள். ஆடினர். பாடினர் பலரச

பாடல்களை யாழில் கீதமாக்கினர். தமது உடல் நெளிவில் உலகம் மறக்க ஆடினர். வெட்கம் விட்டு உறுப்புகள் வெளியாகித் தெரிய ஆடினர். பம்பரமாகச் சுழன்றனர். புத்தனை அழகு நாமம் இட்டு அழைத்தனர். 'மதனா, மாமன்னா, அழகா, உயிரே சித்தார்த்தா' என்றெல்லாம் கூவினர். அவர்கள செயல் எதுவுமே புத்தன் உள்ளத்தின் வாயிலையுந் தட்டவில்லை.

அவனிடம் ஒரு புன்சிரிப்பு. அது அறிவுக் கடலில் எடுத்த ஞானச் சிரிப்பு. புத்தன் உடல் அப்பெண்கள் முன்தான் உட்கார்ந்திருந்தது. கண் திறந்து கிடந்தது. ஆனால் உள்ளம் உணர்ச்சியங்கில்லை. அது மோன நிலையில் எங்கோ அதி தூரத்தில். சிந்தனை ஒரே நேரிய பாதையை நாடக்கிடந்தது. அந்த மோனத்தைப் பாட்டோ, நடனமோ, அழகோ எதுவுமோ இவ்வுலகு கொணர முடியவில்லை.

அப்பெண்கள் களைப்பால், நாடி வந்தமை முடியாததால் சாய்ந்தனர். நித்திரையாகி விட்டனர், அதே இடத்தில்.

அம்மூவரும் 'வசவர்த்தி' என்னும் பெரிய பிரபுவின் மக்கள். வசவர்த்தி சுத்தோதனனின் சிறந்த நண்பன். அரசியல் உதவியாளன். சுத்தோதனனின் கேள்விப்படி, சித்தார்த்தனை வசவர்த்தி ஒருநாள் நாடிவந்தான். சாக்கிய குலப் பெருமையை நெறியை, அரச போகத்தை, தந்தைப் பாசத்தை எடுத்துக் கூறினான். கெஞ்சிக் கேட்டான் அரண்மனையை அடைந்துவிடுமாறு. ஆனால் சித்தார்த்தன் சிந்தையில் இவை தட்டிப் பார்க்கவும் முடியவில்லை. அதனால் வசவர்த்தி கோபத்துடன் வெட்கம் மீக்குற வீடடைந்தான்.குப்புறப் படுத்தான்.

எது கூறினாலும் யாருமே அந்த நாட்டில் அவனைத் தடுத்துப் பேச முடியாது. ஆனால் இந்தப் பொடிப்பயல் சித்தார்த்தனா முந்தாநாள் தோன்றிய சிறுவனா மறுப்பது. சாக்கிய வம்சத்திற்கே ஒரு பெரிய கறை இவனால். என மனம் ஆத்திரமாகப் பேசினான். படுத்தபடியே கிடந்தான். அவனது அன்புச் செல்விகள் ஆய தண்ஹி, ரதி, ரங்கா கண்டனர். தந்தைக்கு மகிழ்வு தரக் கங்கணம் கட்டினர். சித்தார்த்தனின் மன வைராக்கியத்தைக் குலைத்தே ஆவத எனப் புறப்பட்டனர். ஆனால் அவர்களும் தோற்றனர். தோல்வியால், களைப்பால் அப்படியே உறங்கி விட்டனர். இன்னும் பலன் காணும் நோக்குடன்.

மோன தவத்திலே, முற்றுந்துறந்து கடவுளையடைய நாட்குறித்தபடியிருந்த கௌதமனை மேனகா குலைத்தாள். கூடினாள். மகவும் பெற்றாள் புராணத்தில். ஆனால் புத்தன் சிந்தையைச் சிதறடிக்க - புத்தனைக் கௌதமனாக்க எத்தனை மேனகாக்களாலும் ஆகாது. இயலாது.

நேரம் ஓடிக்கொண்டிருந்தது. விடியும் நேரம். இரவு ஓட பகல் நாடும் அந்த நேரம். சித்தார்த்தன் உளம் சிறிது ஆறுதல் தேட நாடியது. எழுந்தான். அங்கே மூன்று பெண்களும் நித்திரையாகிக் கிடந்தனர்.

அழகு உடையுடன் சுத்தமாக சுகந்தமிட வந்த அவர்கள் அசுத்தமாக அவலட்சணமாகப் படுத்துக் கிடந்தனர். நித்திரையில் அவர்கள் அழகை சேலையின் குலைவு, கேசத்தின் ஒழுங்கின்மை கெடுத்தது. சாந்துப் பொட்டுக் கரைந்து காதெல்லாம் ஓடிக்கிடந்தது. கண்ணில் நீர் வடிந்து முகமெல்லாம் கறுத்துக் கிடந்தது. வாயிலிருந்து நுரைபோல் நீர் பரந்து நாற்றம் தந்தது.

இரவு 'அழகு'ப் புதையல்கள். விடியும் நேரம் நாற்றப் பொருட்கள். அவலட்சண ரூபங்கள். அவலட்சணமெல்லாம் திரண்ட பொருள்தான் அழகா. நாற்றமெல்லாம் மறைக்கப்படுவதுதான் அழகா? அழியும் போலியழகு. தோல் உண்டாக்கிய சிறு நிமிட அழகு. பொய்யின் திரட்சிதான் அழகு. அழகு மயக்கம் ஒரு வெறி. மதுப்போதை. அங்கு உண்மை கிஞ்சித்தும் கிடையாது.

அழகு தோல் தரும் மறைப்பு. மாயை போல. ஆனால் தோலை விட்டால் ஏன் தோலிலுள்ள ஒரே நீண்ட கொடிகள் - குடல்கள் நாறும் பல நீர்த் திராவகங்கள். எலும்புக் கோர்ப்புகள். ஆனால் தோல் மூடிமறைப்பிட்டு 'அழகு' என ஏமாற்றுகிறது. அதுபோல் தான் அழகு மயக்கமும். மனிதனின் சிந்தனையை மறைத்து வேறோர் வெறியை ஊட்டி வாழ்வைக் குழப்பி விடுகிறது. சிந்தனை தடம் புரண்டு அழமாகப் போனால் அழகுதான் உலகத்தின் குற்றத்தின் காரணம். அழகுதான் பிணியின் ஆரம்ப கருத்தா. அழகுதான் மூப்புத்தந்து வருத்தும் வைரி. அழகுதான் சாக்காடு கொணரும் காலன்.

ஐந்தவித்தானாற்றல் வரவேண்டின் உண்மை காண வேண்டின் வையத்துள் வாழ்வாங்கு வாழ வேண்டின் 'அழகு' மயக்க வஸ்துவாக இருத்தலாகாது. கலை எனக் கூறியும் அழகு போதை தர ஏதுவாக அமையக் கூடாது. 'அழகு' ரசிக்கப்பட வேண்டியதல்ல. ஆற்றல் தர ஏதுவாக வேண்டும். அன்பு உலகு தர ஏதுவாக வேண்டும். அங்கே வெறி மறைய வேண்டும். அப்படியானால் வாழ்வு வெற்றி பரவக் காணலாம். ஆதலால் அழகு மயக்கம் போதையாகாது. அறிவு ஆசானாக வேண்டும்.

அந்த அழகின் பெண். அப்படி மாற வேண்டும். நாட்டுநிலை மாற்றியமைக்கப்பட வேண்டும்.அவள் துயர் தரவே கூடாது. துயர் துடைக்கும் அமுதாக வேண்டும். அப்படியானால் 'ஒழுக்கம்' நாடெல்லாம் பரவும்.

இப்படியாகப் புத்தன் உளம் சிந்தையிட்டது. முடிவு... அட்ட சீலங்களில் ஒரு சீலம் வெளியாகியது. அடக்கத்தால் அழகு மயக்கந் துறந்த அவனால் வைரமனப் புத்தனால், சிந்தை கலங்கா அவனால்தான் 'சீலம்' காட்ட புரிய செய்ய முடிந்தது. அட்டசீலம் எழுதவும் முடிந்தது. புத்தன் ஒரு 'அட்டசீலம்'

(சுதந்திரன் 24.7.1955)

# வாழ்வின் துடிப்பு

மணிக்கூடு 'டக்டக்' என அடிப்பது போலவே மனிதனின் இருதயமும் அடிக்கின்றது. எப்போது அந்தத் துடிப்பு நிற்கிறதோ, அப்போது மனிதன் மரணமடைகின்றான்... என மிஸ் சியாமளா ஆறாம் வகுப்புச் சுகாதார பாடம் படிப்பித்துக் கொண்டிருந்தாள். சியாமளா இருதய பாடம் நடத்திக் கொண்டிருக்கும் போது அவளது இருதயம் ஆடியது. அதில் பல சிக்கல்கள் ஊசலாடி ஒலி செய்தன.

சியாமளா இருபது வயது நிறைந்த பயிற்றப்பெற்ற ஓர் ஆசிரியை. கறுப்பு நிறமெனினும், புது அழகு ஒன்று அவள் உடலிற் படிந்திருந்தது. பேசும்போது கன்னங்களிற் சிறுகுழியொன்று தோன்றி மறையும். அவளுடைய கழுத்துடன் தலைமயிர் சுருண்டு கிடப்பதிலும் ஒரு தனிக் கவர்ச்சியிருந்தது. யாழ்ப்பாணக் கிராமத்தப் புகையிலைத் தோட்ட வருமானத்தால் வந்த பணமே சியாமளாவை ஓர் ஆசிரியை ஆக்கியிருந்தது. அவளது தந்தை வைரமுத்துவுக்குப் புகையிலைத் தோட்டந்தான் கதி.

சியாமளா அநுராதபுரத்தில் ஒரு கல்லூரியில் ஆசிரியையாகக் கடமை யாற்றி வந்தாள். வைரமுத்து, மகளைப் பிறநாடு அனுப்ப மறுத்தார். மகளின் மனஉறுதியின் பேரிலே கொண்ட நம்பிக்கை சம்மதம் கொடுக்கச் செய்தது. இன்றைய படித்த உலகம் தானே படியாதவர்களிலும் மோசமாக நடந்துகொள் கின்றது. இத்தனைக்கும் படிப்புத் தந்த பதட்டத் தன்மையா அல்லது சுதந்திர த்தை உபயோகிக்கத் தெரியாத படித்தோரின் 'ஆசை' தரும் நிலையில்லாப் போக்கா என்பது ஆராயப்பட வேண்டியது. மணியடித்தோய்ந்த தும் சியாமளா அடுத்த பாடத்துக்குப் போய்க்கொண்டிருந்தாள். அங்கு நுழையும் போது, தபாற் காரன் பாடசாலைக்குள் நுழைவது தெரிந்தது. அப்படியே தாமதித்து நின்றாள். ஒரு தபால் - அவளிதயம் விரும்பிய தபால் - இதயம் பற்றிப் படிக்கும் போது அடிக்கடி நினைவலைகள் எழுப்பிய அந்தத் தபால் கிடைத்தது. உளமெல்லாம் ஒரே இனிப்பு. உடலிற் கூட ஓர் இளம் துடிப்பு. வகுப்புள் நுழைந்தாள். பாடத் தைக் கொடுத்து மாணவர்களை எழுதச் சொன்னாள். கடிதத்தைப் பிரித்தாள்.

கொழும்பு,
5-6-50

என் இதயமே,

வாழ்வில் வளம் எது எனத் தெரியாது குழந்தைபோல் வாழ்ந்தேன். ஆனால் அதில் இனிமை உண்டுதான். அதுதான் இதயக்காதல் என்பதை உன்னை என்று சந்தித்தேனோ அன்றே உணர்ந்தேன். நினைவெல்லாம் நீயேயாய், கனவெல்லாம் உன் உருவேயாய்... இனி என் ஓவியமே, உதய சுகம்

தரும் என் இதய சொரூபமே, நான் என்பதில் நீஉள்ளாய். நீ என்பதில் நான் உள்ளேன். நீ - நான் இரண்டல்ல. ஒன்று. அந்நிலைதான் உயிர்க்காதல். இந்த உண்மையும் தெய்வீகமும் பொருந்திய காதலைக் கண்டு விட்டோம். சந்தித்து விட்டோம். இனி நாம் வாழ்ந்தவர்கள் தானே.

என் சியாமளா, என் வாழ்வு வளமடைவது உன்னில் தங்கிய விடயமாகி விட்டது. எப்போது நாம் சேர்ந்து ஒன்றாகி வாழும் நாள்... எழுது. பிற பின்.

உனது தேவராஜன்.

கடிதத்தைப் பலமுறை படித்தாள். படிக்கப் படிக்கப் புதிய உணர்ச்சிகள் மாறி மாறி எழுந்தன. உளம் துள்ளி விளையாடியது. அவளையே அறியாது முறுவல் வந்து வந்து போயிற்று. 'நீ - நான் இரண்டல்ல ஒன்று' எத்துனை உயிர்க்காதல் என்மேல் வைத்துள்ளார், என் ராஜன்' என்றபடி கடிதத்தை மார்புடன் அணைத்தாள்.

சியாமளா வகுப்பறையிலிருந்த போதிலும் அவள் உள்ளம் எங்கோ எல்லாம் பறந்துகொண்டிருந்தது. வகுப்பில் மாணவிகள் பாடு ஒரே கொண் டாட்டம். ஒரே சத்தம். அதுவும் இரண்டாம் வகுப்பு மாணவிகள். வகுப்பு சந்தை யாகிக்கொண்டிருந்தது. இடையில் ஒரு மாணவி. இன்னோர் மாணவிக்கு 'நரியும் நண்டுகளும்' என்ற கதையைச் சொல்லிக்கொண்டிருந்தாள்.

'பாவங்கள் நண்டுகள். நரியின் குணம் தெரியாது நம்பி விட்டதால் தானே குளத்து நண்டெல்லாம் மாண்டன' என வேறொரு சிறுமி கூறினாள். இது சியாமளாவின் காதிலும் நுழைந்தது. ஆனால் அது ஒரு சிறுவர் கதை என்ற மட்டில் அவளை எதுவும் செய்யவில்லை.

அந்த நேரம் பார்த்துத்தான் பாடசாலைத் தலைவியும் உள்ளே நுழைந்தார். மாணவிகள் எழுந்து வணக்கம் தெரிவித்தனர். படபடவென விழி சுழல சியாமளாவும் எழுந்து வணக்கம் தெரிவித்தாள். தலைவி ஒரு தந்தியைக் கொடுத்துவிட்டுப் போனாள். சியாமளா தந்தியைக் கண்டதும் வேதனை யடைந்தாள். அச்சத்தால் உடல் நடுங்கியது. இதயம் வேகமாக மேலெழுந்து தாழ்ந்தது. தந்தியை நடுங்கும் கரங்களால் பிரித்தாள்.

'தந்தைக்கு நோய் கடுமை' உடனே புறப்படு.- திருமதி வைரமுத்து.

தாயார் அனுப்பிய தந்தி அது. உடல் ஆடியது. அப்படியே கதிரையில் உட்கார்ந்தாள். மூச்சொலி வேதனைச் சுழியிட்டு வெளியேறியது. அப்போதும் தேவராஜனின் நினைவு வந்தது. அதில் ஆனந்தம் கட்டிப் புரளவில்லை.

அன்றைய இரவு மெயிலிற் போக ஆயத்தமானாள் அவள்.

✦ ✦ ✦ ✦ ✦

கொழும்பு. இது இலங்கையில் தலைநகர் மட்டுமல்ல. ஆடம்பர விரும்பிகளின் தலையாய இடமுமாகும். அங்கே கண்ணைப் பறிக்கும் மின்சார ஒளியுண்டு. வீட்டுக்கு வீடு ரேடியோ உண்டு. காருண்டு, கனதனவான்களின்

ஆங்கிலப் பேச்சுண்டு. அவசரமே எங்கும் எதிலும் கட்டிப் புரளும். அதனுள் முடிச்சுமாறிகளுமுண்டு. எல்லாவற்றையும் விட எல்லோரிடமும் ஒரு பெரும் பொருள் - கொழும்பு பழக்கிய அரும் பண்பு - பாசாங்கு உண்டு. இல்லாதவன் பணக்காரன் போல நடமாடுவான். கடன்வாங்கி நாகரீகமாய்ப் பெரிய புள்ளி போல் உலாவுவான். அப்பப்பா அது கொழும்பு. அந்த நகரிலே நாகரீகம் பழக்கிய எல்லாப் பழக்கமும் கொண்டவன் தேவராஜன். ஒரு சாதாரண லிகிதர். நூற்றைம்பது ரூபாய் மாத வருமானம். ஆனால் மாசம் ஐந்நூறுக்கு மேல் அவனுக்குச் செலவுண்டு. சொந்த ஊர் யாழ்ப்பாணம் எனினும் பிரான்ஸ் நகர மனிதன் போலக் காட்சியளிப்பான். அழகு 'சூட்டும்' கண்ணிற் புகைக் கண்ணாடியும், கையிலே கைக்கடிகாரமும், சுருட்டிய கேசமும், கைகளைக் காற்சட்டைப் பைக்குளிட்டு நடை பயிலும் பவிசும், நவநாகரீக யுவதிகளுக்கு அரிய காட்சி. அர்த்த புஷ்டியுள்ள தோற்றம்.

தேவராஜன் உன்னத உடையில் திரிவான். பெண்மணிகள் பலர் அவனுக்கு நண்பர்கள். ஹோட்டலும், சினிமாவும் அவனது இராப் பொழுது போக்கு. இதனால் அவன் ஓர் 'ஆப்கானிஸ்தபாய்' க்குக் கடன்காரனானான். ஒன்றுக்கு இரண்டு வட்டி வாங்கும் அவன் பணம் கொடுத்தனன். தேவராஜன் படாடோபம் பயின்றான். ஆனால் கடன் வளர்ந்துகொண்டெயிருப்பதை மறந்தான்.

ஒருநாள் ஊரிலிருந்து கொழும்பு போகும் மெயில் வண்டியில் இரண்டாவது வகுப்புப் பெட்டிக்குள் நுழைந்தான். அங்கே சியாமளா உட்கார்ந்திருந்தாள்.

பார்த்தான், பார்த்தாள். சியாமளாவுக்கு முன்னுள்ள இடத்தில் உட்கார்ந்தான் தேவராஜன். சியாமளா புகையிரதத்திற் படிப்பதற்காகக் கையில் வைத்திருந்த புத்தகத்தைக் கேட்டான். கொடுத்தாள் சியாமளா. நன்றி கூறினான் ஆங்கில மொழியில். நேரம் ஓடியது. சியாமளாவும் தனிமையில் விடுமுறை விட்டுத் தொடக்கத்துக்கு பாடசாலை போய்க்கொண்டிருந்தாள். எனவே சந்தர்ப்பம் இருவரையும் கலந்துரையாடச் செய்தது. தேவராஜன் பேசினான். பணத்திற் புரளும் செல்வச் சீமான் போல. பெரியதோர் உத்தியோகஸ்தன் போல. உலகம் புரியாத அனுபவம் அடையாத சியாமளா நம்பியே விட்டாள். அந்த நம்பிக்கை ஆசைக்குத் தூபமிட, அன்பு உண்டாக அதைக் கடிதமூலம் வளர்த்தான் தேவராஜன். சியாமளாவின் புது அனுபவம். எனவே விஷயங்களை அறியும் திறன் கிடையாது. அவனை நம்பினாள். கடிதம் தீட்டினாள். காதல் காதல் என அவர்களின் பேனா எழுதித் தீர்த்தது. ஆனால் தேவராஜன்?

✦ ✦ ✦ ✦ ✦

தந்தி பற்றிய யோசனை உளமெல்லாம் சுழியிட இரவு மெயிலுக்காக அநுரதபுர ஸ்டேசனிற் காத்திருந்தாள் சியாமளா.

கூவிடும்குரலொலி வண்டியினண்மையைத் தெரிவித்தது. வண்டியும் வந்து மேடையில் நின்றது. பரபரப்புடன் இரண்டாவது வகுப்புப் பெட்டியில் ஏறினாள். சனநெருக்கடியோ அன்று இல்லை. ஒரு பெட்டிக்குட் புகுந்தாள்.

அங்கு ஓர் ஆடவனும் பெண்ணுமிருந்தனர். வேறு இடம் பார்த்தாள். ஆனால் அந்த ஒருவன் யாருமே இல்லை. அவன் தேவராஜனே தான். அவன் பக்த்தே நெருங்கி உட்கார்ந்திருந்தாள் ஒரு பறங்கிப் பெண்.

இமயச் சிகரத்திலிருந்து தவறினால் ஓடும் ரயிலில், இருந்து வீழ்ந்தால், இல்லை. சியாமளா கற்சிலைபோல் அப்படியே சில நிமிடங்கள் நின்றாள். ஏதோ காணாததைக் கண்டவள் போல் அசையாது அப்படியே நின்றாள். அவன் உள்ளத்தில் நினைவு தொழிற்பட மறுத்தது. அவயவங்கள் தொழில் செய்ய மறுத்தன. இப்படி இரண்டு நிமிடங்கள் கடந்தன.

‘ஹலோ’ என்றபடி இடம் கொடுத்தான் தேவராஜன். ‘யாரது’ என்றாள் ஆங்கில மொழியில் அந்தப் பறங்கிப்பெண். ‘என் அயற்பெண்’ என்றான் தேவராஜன்.

உடனே படாரென யந்திரவிசையில் சியாமளா திரும்பினாள். மறுகணம் அந்தப் பெட்டிக்குள் நுழைந்தாள். அங்கே படுக்கையாக்கியபடி இடத்தை மூடிப் படுத்திருந்தனர் இரண்டு வாலிபர்கள். அப்பாலும் போனாள். பெட்டியை வைத்துவிட்டு யன்னலால் வெளியே பார்த்தாள் வெறிச்சென. ஒரேகும்மிருட்டு. எந்த ஒளியுமில்லை. மெல்லிய குளிர் காற்றும் சேர்ந்து இருளுக்குப் பின்னணி செய்தது. அவளது உளம் போல இருள் கிடந்தது. அவளது கண்ணீரும் குளிர் காற்றுடன் சேர்ந்து தெறித்துப் பறந்தது. புகையிரத ஓட்டத்துக்கும் வேகமாக அவள் மன ஓட்டம் ஓடிக்கொண்டிருந்தது.

‘அயற்பெண்’ என்ன உலகமடா. ஆண்களே ஏமாற்று உருக்கள் தானா? அன்று வந்த கடிதத்தில் தானே ‘நீ - நான் இரண்டல்ல ஒன்று’ என வரைந்துவிட்டு அன்றே வேறோர் பரத்தையுடன் உல்லாசப் பிரயாணமா. இதயம் என்ன இரும்பா? கற்பாறையா? அல்லது இன்றைய ஆண்கள் உள்ளத்தின் தன்மை இதுதானா? அதுதானே பல பெண்கள் வயசு சென்றும் மணம் முடியாதிருக்கின்றனர். ஆண்கள் செய்த வகையற்ற செயல்கள்தானே. நம்பிக்கையை மிதித்து விட்டு மிருகமாக மாறினால், எப்பெண்தான் இதயமுடன் வாழ முடியும். படித்தவர்கள். இவர்கள் படியாதிருந்தாற்கூட நாட்டுக்கு எத்துனை உதவி. துரோகி, என்றபடி அவள் எண்ணம் சுழியிட்டு மறைய தந்தியோடு தகப்பனின் நினைவு வந்தது. அப்பொழுது அவர்கள் இருவரின் காட்சி சியாமளாவின் கண்ணை வட்டமிட்டு வாதை உண்டாக்கியது.

நேரே போய்ப் பேச நினைத்த சியாமளாவின் உள்ளம் பின்பு மனம் ஒப்பவில்லை. உண்மையாகக் காதலித்தற்குப் பரிசு இதுதானா? இனியேன் வாழ்வு. ஓடும் வண்டியிலிருந்தே தவறினால் மரணம். பின்பு எதுவும் தெரியாதே. இப்படியெல்லாம் எண்ணி ஏங்கியது அவள் உள்ளம்.

தந்தையின் கடுஞ்சுகவீனம் ஞாபகம் வர எதையுமே மனம் வெறுத்து தந்தையின் நிலையைப் பொய்ப் பார்ப்போம் என முடிபு கட்டினது உள்ளம். ஆனால் கண் நீர் மல்கியபடியே இருந்தது. அவள் உள்ளம் எரிந்தபடியே

இருந்தது. சியாமளாவுக்கு வாழ்வு கசந்தது. நம்பிக்கை பாறி வீழ்ந்தது.

விடிந்து பலமணி நேரமாகி விட்டது.

பனங்கூடல்களைக் கடந்து மெயில் வண்டி போய்க்கொண்டிருந்தது. சியாமளா வீடு நோக்கிச் சென்றாள். 'மனிதனே' மரணம் வந்தே தீரும். இதை அறிந்தும் நீ ஏன் தீமை புரிகிறாய். என்பதுபோல பறையொலி சப்தித்தது. சியாமளாவின் உளம் புயலாகி வீசிக்கொண்டிருந்தது. இரவு முழுவதும் அழுததால் அவள் முகம் வீங்கியிருந்தது. நடமாடும் பிணத்தைப் போல வீட்டுப் படலையைத் திறந்தாள். அங்கே ஒரே கூக்குரல். ஒப்பாரி. மயங்கி வீழ்ந்து விட்டாள் சியாமளா.

பின் கண் விழிக்கும்போது பாடையிலே பிணத்தை ஏற்ற ஆயத்தங்கள் நடைபெற்றுக்கொண்டிருந்தன. எழுந்தாள். 'அப்பா' என்றபடி பிணத்தின்மேல் வீழ்ந்து கதறினாள். 'கடைசி காலத்திற்கூடச் சந்தியாது போனேனே' எனப் பிதற்றினாள். வேதனையுருவானாள்.

அவள் மனம் புரண்டது. ஒரே முடிபு. அது கல் போல உறுதியாயிற்று. தலையைக் கோதி முடித்தாள். போனாள், பாய்ந்தாள் கிணற்றுள். பின்பு அடுத்ததொரு பிணத்தை அவ்வீடு கண்டது.

தகப்பனிறந்த துயரமென ஊரார் பேசிக்கொண்டனர்.

✦ ✦ ✦ ✦ ✦

தேவராஜனுடன் வந்த பறங்கிப் பெண்ணின் பெயர் ஸ்டெலா. அவள் கொழும்பு தந்த பண்புகள் நிறைந்த யுவதி. நண்பனுடன் யாழ்ப்பாணம் பார்க்க வந்திருந்தாள்.

இருவரும் கீரிமலையில் நீராடினர். அப்பொழுது ஒரு பெரிய புள்ளியின் கார் ஒன்று அங்கு வந்தது.

'ஹல்லோ, ஸ்டெலா' என ஆசையுடன் ஒருகுரல் காரிலிருந்து ஒலித்தது.

ஸ்டெல்லா திரும்பினாள். கைகுலுக்கினர். பின் அந்தப் பெரிய புள்ளியின் காரில் ஸ்டெல்லா போய்க்கொண்டிருந்தாள். அணிலை ஏறவிட்டு ஏமாந்து பார்க்கும் நாய் போன்று தேவராஜன் கீரிமலைக் கடற்கரையில் நின்று கார் போவதைப் பார்த்தான். அவள் உள்ளம் விரிந்தது. சியாமளா வீடு நோக்கி ஓடினான். அங்கே பிணம் தான் சியாமளா உருவிற் கிடந்தது. அவன் இதயம் உண்மையை உணர்ந்தது. நான் துரோகி என அவன் உள்ளம் பேசியது.

அடுத்தநாள் தனியிடத்தில் உள்ள மரமொன்றில் தேவராஜனின் பிணம் தொங்கிக்கொண்டிருந்தது.

இதயம் மிகமிக மென்மையானது. வாழ்வில் துடிப்பு ஸ்தம்பித்தால் அன்பினூற்றுத் தடைப்பட்டால் இதயத்துடிப்புக்கு இடமில்லை என அறிஞர் ஒருவர் சொல்லிச் சென்றார்.

(ஈழகேசரி)

# அவளும் ஒரு பெண்

என் நண்பன் வெகுநாட்களுக்குப்பின் என்னைச் சந்தித்தான். அவனைக் கண்டதும் மனமெல்லாம் மகிழ்ச்சி நிறைந்து பெருகியது. பழைய அன்பு மாறாமல் என்னைத் தேடி வந்திருக்கிறான். அது இளமைக்காலத்து அருமை நண்பன்.

ஆனால் முகமெல்லாம் ஏக்கம். தலை சீவப்பட்டும் சுருண்டு அடம்பிடித்து இருந்தது. முகத்தில் ரேகை பல ஓடிக்கிடந்தது. அழுக்கு உடையுடன் பரிதாபமாக வந்திருந்தான். 'என்ன சங்கதி மிகவும் மாறி விட்டாயே' எனக் கேட்டேன் பரிவோடு. அவன் பதில் தரவில்லை.

'ஏன் நோய் ஏதாவது பல பிடித்து விட்டதோ' தலையசைத்தான். 'என்ன வியாதி'

'உற்சாகத்தை ஒரேயடியாகப் பறிக்கும் வியாதி.'

'என்னப்பா புதிர் போடுகிறாய்?'

'புதிரா' என்று சொல்லிச் சிரித்தான். அச்சிரிப்பில் அழகு கிடையாது. சோகங்கிடந்தது. அனுபவ இழப்புக்கிடந்தது.

'அருள், சொல்லித்தான் புரிய வேண்டும். எப்படி வந்தது'.

'பெண்' என்றான் சுருக்கமாக.

'அடடா அதுதானே நாட்டிலுள்ளோர் பலரது தொற்றுவியாதி' என்றேன்.

'போடாபோ சிரிப்பதற்குரிய விஷயமல்ல இது'

'அப்படித்தான் ஒவ்வொருவனும் கூறுகிறான். என்னைக் கேட்டால் நானும் அப்படித்தான் சொல்வேன். முழுவதையும் கேட்டாயானால் இப்படிக் கூறமாட்டாய' என்றான்.

'அப்படி பெரிய விடயங் கொண்டதா' என்றபடி ஹோட்டலுக்கு அழைத்துப் போனேன். இருவரும் தேநீர் பருகினோம். அவனுக்கும் நல்ல பசியாயிருக்க வேண்டும். நன்றாகச் சாப்பிட்டான். அவனும் யானும் ஒன்றாகக் கலாசாலை யில் பயின்ற காலத்தை எண்ணினால் இப்பொது உள்ள நெகிழ்ச்சியடைகிறது. அக்காலத்தை எண்ணியது. கலாசாலைக் காலம். களிப்பு மிகு நாட்கள் வாழ்வில் இனி எப்போது வரும் அவனை 'அருள் அருள்' எனவே கூப்பிடுவேன். என்றும் இணைபிரியாத நண்பர்கள்.

உத்தியோக காரணமாக பத்து ஆண்டுகள் வரை நாங்கள் சந்திக்கவில்லை. இப்போது கண்டதும் களிப்பெய்தினோம்.

இருவருமாகத் தனிமை விரும்பி கடற்கரையையடைந்து அங்கோரிடத்தில்

இருந்தோம். அந்தி வானம் செக்கச்செவேல் என்றிருந்தது. ஆண்களும் பெண் களும் கலகலப்பாக சிரித்துக்கொண்டு கைகளை வீசி நடந்து சென்றனர். யாவற்றையும் பார்த்தபடி உட்கார்ந்திருந்தேன். ஆனால் நண்பன் குனிந்தபடி, மண்ணைக் கையாற் கிளறியபடி சிந்தனையோடு உட்கார்ந்திருந்தான்.

'அருள் நீ ஆணாகவிருந்தும் தளர்ச்சியடைந்து விட்டாயே?' என்றேன்.

'என்றோ ஒருநாள்...'

அவள்... பெண் தன்மைதானா...

இருள் கவர நண்பன் பேசலானான்.

அவள் யார் என்பதை இன்றைவரை நான் அறியேன். இருந்தாலும் அவளை உண்மையுடன் காதலித்தேன். யான் தெருவாற் போய்க்கொண்டிருந் தேன். நேரெதிரே அவள் வந்துகொண்டிருந்தாள். இளமையும் அழகும் நாகரீகமும் சேர்ந்த - குழம்பால் கலையறிந்த சைத்ரீகன் உண்டாக்கிய சீனத்துப் பொம்மை போலஇருந்தாள். அவள் மேனிப்பிரகாசம் எனக்குக் கலை காட்டிற்று.

உவப்புடன் ஆசையுடன் பார்த்தேன்.

அவளும் பார்த்தாள். அவளது கருவிழிகள் அகல ஆச்சரியத்துடன் பார்த்தாள்.

ஒரு கணந்தான். பின்பு குனிந்தபடி மேலே நடந்தாள். பக்கத்துத் தெருவாற் சென்று திரும்புவதற்குள் சொல் வைத்தது போல் மூன்று முறை திரும்பித் திரும்பிப் பார்த்தாள்.

அந்தக் கண்கவர்ச்சி என் மனக் கவர்ச்சியாகிவிட்டது.

மூன்று நாட்கள் அதே தெருவால் வளைய வளைய வந்தேன்.சந்திக்க முடியவில்லை.

அன்று....

பட்டினத்திலுள்ள சந்தையிற் சில சாமான்கள் வாங்கிக்கொண்டிருந்தேன். 'இதை மாற்றித் தருவீர்களா' என்று பத்து ரூபாயை நீட்டியபடி கேட்டாள் ஒரு பெண். திரும்பினேன். என்னிடம் சில்லறை கிடையாது. ஆனால் அவள் கடைக்காரனுக்குக் கொடுக்க வேண்டிய தொகையை நானே கொடுத்து, பின்பு மாற்றித் தாருங்களேன் என்றேன்.

இருவரும் நடந்து சென்றோம். அவளுடன் பேசியதிலிருந்து அவள் ஓர் ஆசிரியை எனத் தெரிந்தது.

✦ ✦ ✦ ✦ ✦

பின்பு பலமுறை சந்தித்தோம். கட்டுப்பாடின்றித் திரிந்தோம். மூன்று மாசங்கள் பறந்தன. இந்த மூன்று மாசமும் என் வாழ்க்கை இன்பமாகவே இருந்தது. அதற்குப் பின் ஒரே துன்பந்தான். நான் உறுதியுடன் அவளைக்

காதலித்தேன். அவளும் என் மனைவி போலத்தான் உறவாடினாள். ஆனால் கலியாணம் பற்றி நான் கேட்டதுமில்லை. அவள் சொன்னதுமில்லை.

இருந்தாற்போல் நான்கு நாட்கள் அவள் என்னைச் சந்திக்கவில்லை. அவளது வீடு தேடிப் போனேன்.

வெளிவிறாந்தையில் யாரோ ஓர் ஆடவனுடன் பேசிக்கொண்டிருந்தாள்.

என்னைக் கண்டதும் 'வாருங்கள், வாருங்கள்' என்றாள் வழக்கம்போல்.

'இவர் எனது நண்பன்' என என்னை அந்த ஆடவனுக்கு அறிமுகம் செய்தாள்.

'இவர் யார்' என என் முகம் வினா எழுப்பியது. அவள் பேசினாள்.

'அரசினர் உதவியச் சம்பளத்தில் அவுஸ்திரேலியா போயிருந்த என் கணவர். இன்று காலை விமானத்தில்தான் வந்தார்' என அறிமுகம் செய்து வைத்தாள். அப்போது மின்னல் வீசியது. இடிகள் முழங்கின. எரிமலைகள் வெடித்தன. புலிகள் உறுமின. வெள்ளம் கரையுடைத்து ஓடியது. சூறாவளி சுழன்று அடித்தது. இப்படி என் உள்ளம் புரண்டது.

'மானங் கெட்டவளே' என என் மூச்சு மட்டுமல்ல உயிரே ஓசை எழுப்பியது. பின்பு சந்திக்கிறேன் என்றபடி புறப்பட்டேன். நேரே வீடு வந்து என் அறையில் படுத்துக்கொண்டேன்.

அன்று மாலை -

சந்தித்தாள் வழக்கம் போல். 'ஏன் ஒரு மாதிரி' என்றாள்.

'துரோகி' என்றேன்.

சிரித்தாள். 'ஏன்' என்றாள்.

'ஏமாற்றி விட்டாயே' என்றேன்.

'எங்கே எப்படி எதற்காக' என்றாள்

'கணவனிருக்கும் போதா கள்ளக்காதல்' என்றேன்.

'அடப்பாவமே காதலா, நீங்கள் என் நண்பன் அல்லவா?'

'நண்பனா, நண்பனுடன்.....'

'ஐரோப்பிய தேசத்திலெல்லாம்....' என ஏதோ கூறத் தொடங்கினாள்.

ஐரோப்பிய தேசத்திற் கணவனுக்கு துரோகம் செய்கிறார்களா. நல்ல நாகரீகம். எங்கள் நாட்டில் நாகரீகத்தில் புது நாகரீகம். போ. என் முன் நில்லாதே' எனக் கத்தினேன்.

சிரித்தபடி போய்விட்டாள். அன்று தொடக்கம் நான் உலகை உணர்ந்தேன்.

ஆனால் அவளை மறக்கவே முடியவில்லை. என்றான தோழன் அருள்.

யான் எழுந்து உட்கார்ந்தேன். 'அந்த ஆசிரியை யார்' என ஆவலுடன் கேட்டேன்.

'வள்ளிநாயகி' என்றான்.

'வள்ளிநாயகியா' என்றேன். நான் அறியாத பெயரது.

'அருள் இதற்காக விரக்திப்படுவதா? போடாபோ. அவள் ஒரு நச்சுக்காற்று. எத்தனையோ தென்றல்கள் வந்தும்... ஒரு பெண்ணாகிய இவள் உலகையே மாற்றினாள்' என்று சொல்லி எழுந்தேன்.

இருவரும் பாதையால் நடந்துகொண்டிருந்தோம். சினிமாத்தியேட்டர் ஒன்றுகுறுக்கிட்டது. ஏதோ ஓர் ஆங்கிலப்பட இரண்டாவது ஆட்டம். ஆரம்பிக்க இன்னும் சில நிமிடங்கள் இருந்தன. உட்புகுந்தோம்.

படம் ஆரம்பித்தது.

காதலனும் நண்பனும் அவர்களிடையில் ஒரு மங்கை. காதலன் மகிழ்கிறான். அதனால் நண்பனையவன் சுட்டு விடுகிறான். அதற்காகக் காதலி காதலனையே கொன்று பழிக்குப்பழி வாங்குகிறாள். இதுதான் கதை.

நாங்கள் இருந்த பின் வரிசையில் ஒரு பெண் படத்தை நன்றாக இரசித்துக் கொண்டிருந்தாள். அவள் யாராயிருக்குமெனப் பார்க்க ஆவலாயிருந்தும் கௌரவம் மறுத்தது.

படம் முடிந்தது.

எழுந்தோம். நான் பின்பக்கம் நோக்கினேன். நண்பனும் பார்த்தான்.

அவள் புன்முறுவல் பூத்தாள்.

ஓர் ஆடவனுடன் போய்க்கொண்டிருந்தாள்.

அவள் என் வீட்டிலிருந்து சிறிது தூரம் தள்ளி வசிக்கும் ஒரு பெண்.

'இவளையுனக்குத் தெரியுமா' என நண்பன் கேட்டான்.

'ஆம்' என்றேன்.

'வள்ளிநாயகி' என்றான்.

'போடா இவள் பெயர் தங்கரத்தினம்' என்றேன். அவளது பெயரா எனக்கு நன்றாகத் தெரியுமே.

'அவள் தானடா எனக்கு வாழ்க்கையில் வெறுப்பு ஊட்டியவள்' என்றான் அருள்.

'அட உனக்குப் பெயரைக்கூட மாற்றிக் கூறிவிட்டாளே' என்றான். இருவரும் மறுபேச்சின்றி அடிமேல் அடி வைத்துச் சென்றோம்.

(ஈழகேசரி - 1953.10.04)

# பிச்சைக்காரி

அந்தி மயங்கும் நேரம். செவ்வானம் அச்சிறுமியது கொவ்வைப்பழம் போன்ற இதழ்களை ஞாபகமூட்டியது.

அச்சிறுமி யார்? - அவள் ஞாபகம் எனக்கேன் வந்தது?

'ஐயோ பாவம்... ஏழ்மை' இது தான் மனிதனை அல்லலுறுத்தும் கரு நாகம். ஆ! அந்தச்சிறுமி - ஏழ்மை - இந்தச் சொல்லின் உச்சஸ்தானம்.

பொருளிலார்க்கிவ்வுலகமில்லை - என்பதற்கு அவள் தான் சாட்சிப் பொருள்.

அன்று காலை ஒன்பது மணிக்குக் கந்தோர் செல்வதற்காகப் பஸ்ஸைக் காத்திருந்தேன் நாற்சந்தியில்.

'ஐயா! மவராசனாயிருப்பீங்க! இந்த ஏழைக்கிரங்கி ஒரு ஐந்து சதங் கொடுங்கள். தேத்தண்ணீர் குடிக்க. ஆருமற்ற பாவி - ஐயா - ஐயா' என்று இரக்க பாவமான எத்தனை ஐயாக்கள். இதன் பின்பும் தர்மஞ் செய்யாதவன் மனிதனாயிருப்பது கஷ்டமல்லவா? எடுத்து நீட்டினேன் பத்துச்சதம். ஆகா! அவள் முகம் - ஒளி பெற்றது. தேகம் - உற்சாகத்துடன் நிமிர்ந்தது. மகிழ்ச்சி கரைபுரண்டது. காரணம்.... ஒரு சதம் ஒரு சதமாக வாங்கி அத்துடன் திட்டுகளும் ஏச்சுக்களும் பெற்ற அவள், பத்துச் சதத்தைக் கண்டால் உள்ளம் மகிழாமல் - ஆச்சரியப்படாமல் இருக்க முடியுமா?

பார்த்தாள் .... பார்த்தாள்.... திரும்பித் திரும்பிப் பார்த்தாள் காசை. அந்த ஏழையின் கருத்துப் பொருள். பாவம் இந்தச் சிறுவயதிலேயே பிச்சையெடுத்து உண்கிறாள். நல்ல ஊர். பல கோயில்களுள்ள தரும ஊர். பெரிய மனிதர்கள் வசிக்கும் ஊர் என்றால் பிச்சைக்காரருக்கே இடமில்லையென்பார்கள். ஆனால் எங்கள் ஊரில் தங்களைத் தாங்களே பிரசாரம் செய்யும் பெரிய மனிதர்களுமுண்டு. தொந்தி வளர்ந்த அறிஞர்களுண்டு. பிரசங்க மேடையில் எழுதுங் கட்டுரைகளில் பொதுநலம், பொதுநலம் எனப் பொழிவர். வாழ்வில் தன்னை வெறியாட்டம் - இவர்கள் தான் 'பெரிய மனிதர்கள்' என அழைக்கப்படுகின்றனர். போக்கிரிகளா - துரோகிகளா - மனித அட்டைகளா? எப்படியழைப்பது. ஆ! உண்மை தெரியச் சமூகம் - உண்மை தெரிந்தாலும் சொல்பவனைப் பைத்தியக்காரன் என்னும் சமூகம் - ஒரு பகுதி சுகவாழ்வு - உல்லாச போகம். இன்னொரு பகுதி அன்னக்காவடிகள். ஒரு பகுதி மேல் மாடியில், நிலா மன்றத்தில் துயில் - மற்றொரு பகுதி ஓட்டைக் குடிசையில் கிழிந்த பாயில் ஏக்கத்துயில் ஒரு பகுதி படாடோபம் - மறுபகுதி உழைத்து உழைத்து உருக்குலையும் நிலை. ஒரு பகுதி கட்டிலிலும் மெத்தையிலும் கிள்ளை

மொழி இராணிகளுடன் பொழுது போக்கு - ஒரு பகுதிகுடிக்கக் கஞ்சியின்றிக் கொட்டாவி. ஆ! இது தானா சமூகம்! மிருகங்களின் சமூகமா? மனிதர்களின் சமூகமா? என்னே சமூக அமைப்பு.

பலர் முன்னிலையில் தருமவாள் எனப் பெயர் பெறுதற்காக ஒரு ரூபா, வரை கூட பிச்சைக்காரருக்குக் கொடுப்பவர்கள் யாருமில்லாத போது ஒரு சதமாவது ஈவார்களா? இவர்கள் எச்சிற் கையாலாவது காக்கை துரத்துவார்களா? இந்தப் பெரிய பெரிய மனிதர்கள்?

அவள் - அவ்வேளை - பன்னிரண்டு வயது மதிக்கக்கூடியவள். நல்ல சிவப்பு. முகத்தில் தான் எத்தனை எண்ண ரேகைகள். அவளது கிழிந்த அசுத்த ஆடைகளணிந்திருந்தும் கூட அவளோர் அழகி என்பது நன்கு விளங்கிக் கொண்டிருந்தது. இதிலை யாரும் மறுக்க முடியாது.

பன்னிரண்டு வயது. இன்னும் இரண்டு வருடங்களால் பருவமடைந்ததும் அவள் கதி...! பல காமுகர் நினைக்கவே மனம் திகைப்படைந்தது.

ஏனோ தெரியாது. அந்த இளஞ் சிறுமி மேல் எனக்குப் பரிதாபமுண்டா கியது. அவளைப் பற்றியறிந்து அவளை நல்வழிப்படுத்த எண்ணியது என் மனம்.

அடுத்த நாள் அவளிடம் எல்லா விபரமும் கேட்டு விடுவதெனத் தீர்மானித்தேன்.

அடுத்த நாள் அவளைச் சந்திக்கவில்லை நாற்சந்தியில். அவளை - என் குடும்பத்துடன் ஒப்பிட்டால்... பணத்தில் புரளும் நாமெங்கே? எங்களுக்கு எதிர்மறையான அச்சிறுமியெங்கே? எங்களது நாகரீக டம்பாச்சார வாழ்வெங்கே? அவளது இரந்துண்ணும் வாழ்வெங்கே? அவளைச் சந்தித்ததி லிருந்து டாம்பீக வாழ்வு வெறுக்கத் தொடங்கியது. அதற்கேற்றதாற்போல எங்கள் சுவரில் யுத்த காலத்தில் எழுதிய 'டாம்பீக வாழ்வு கொண்டு வருந் தாழ்வு' என்பது நினைப்பூட்டியபடியிருந்தது.

பல தேதிகள் கலண்டரைவிட்டு உதிர்ந்தன.

ஆனால்... அவள் சந்திக்கவில்லை.

தினமும் அலுவலகம் போகச் சந்தியில் நிற்கும் போது அவள் ஞாபகம் வரும். அவளைக் காண ஏங்கும் மனம். ஆனால் - அவள் தரிசனங் கொடுப்பதுமில்லை - பிச்சை வாங்க வருவதுமில்லை. - காரணம் அறிய ஆவல் கொண்டது. மனம் எப்படியறிவது? அவளை விசாரிப்பது தான் எப்படி? இது என் மனப் போராட்டம்.

வழக்கம் போல் பஸ்ஸுக்கு நின்றேன். முப்பத்தைந்து வயது மதிக்கக் கூடிய ஓர் மாது பிச்சையெடுத்தபடி என்னை நெருங்கினாள். ஆம். அந்த ஏழைச் சிறுமிக்கும் இவளுக்குமேதோ தொடர்புண்டு. ஒருவேளை தாயாக

இருக்கலாமோ! ஏன். அவளது முகம் ஒரு மாதிரியிருக்கிறது. கேட்டே விடுவோமே என்றது என்னுள்ளம்.

வந்தாள். 'ஐயா! ஐயா!'என்றபடி, ஐயோ! என்னளவு வயதுள்ளவளா. இல்லை. என் தாயளவு வயதுள்ளவள் ஐயாவாம்.

என் தாயாரையும் அவளையும் ஒப்பிட்டது மனம். ஆனால் ஏன் இந்த வித்தியாசம். இது விடுவிக்க முடியாத ஓர் புதிராகவல்லவா இருக்கிறது. கடவுளையாவது கேட்கலாம். இப்பதான் கடவுள்கள் வாய் திறப்பதில்லையே. ஆதிகாலத்தில் எல்லாம் எத்தனை எத்தனை அற்புதங்கள் செய்த கடவுள் இப்போது எங்கே? ஒரு வேளை கடவுளென்று ஒன்றில்லையோ! அல்லது பிராமணர் உத்தரவைப் பார்த்து நிற்கிறாரோ!... சீச்சீ தெய்வநீதியை நாம் உணரவில்லையாக்கும்.

அவளுடன் கதைத்ததிலிருந்து அந்தச் சிறுமி அவளது மகளென்பதும் பருவமடைந்து விட்டாளென்பதும் தெரிய வந்தது.

ஒரு இருபத்தைந்து சதத்தைக் கொடுத்து விட்டுப் போய் விட்டேன் உத்தியோகத்தலத்துக்கு.

✦ ✦ ✦ ✦ ✦

ஒரு நாள் - என் நண்பன் பரமு தன் காரில் என்னை அழைத்தான் கடற்கரைக்கு.

சிறிது ஆறுதலாக உலாவும் நோக்கமாக அவனுடன் சென்றேன். சென்று பின் திரும்பிக் கொண்டிருந்தோம். ஒரு சந்தால் திரும்பியது நமது கார். வழியில் எமது உத்தியோகத்தலத்து முதலாளியது கார். ஒரு சிறு குடிசைக்க முன் நின்றது. யான், 'இங்கே பரமு நமது முதலாளியின் கார் நிற்கிறது' என்றேன். 'சத்தம் போடாதே. அதுவோர் பிச்சைக்காரியின் வீடு. முதலாளியின் தற்போதைய வேட்டைக்காடு' என்றான் பரமு. 'இது யார் வீடப்பா?' என்றது என் வாய்.

'ஆயிரம் பிச்சைக்காரிகளில் ஒருவனின் வீடு இது. ஒரு சிறு பெண் நல்ல அழகி. ஒரு பிச்சைக்காரனை விவாகஞ் செய்து இருக்கிறாள். அந்தப் பிச்சைக்காரன் தகப்பனென்ற பெயருக்கு பிள்ளைப் பதிவுக்கு இருக்கிறான். நம்ம முதலாளிதான் வைத்திருக்கிறார். அப்பெண்ணை இப்போது அந்தப் பெண் பிச்சையெடுக்கப் போவதில்லை. முதலாளியின் பணந்தான் ஜீவனாம்சம். ஆ! உலகத்தில் இப்படி எத்தனை இரகசியங்கள். நமக்கேன் இந்தக் கதைகள்' என முடித்தான் பரமு.

பின்னர் ஒரு நாள் அதே தெருவால் கால் நடையாக வந்து கொண்டிருந்தேன். அன்று எமது முதலாளியின் கார் நின்ற வீட்டு வாசலில் ஒரு பெண். ஓர் கைக்குழந்தையுடன் நின்று கொண்டிருந்தாள். என்ன? அச்சிறுமி

முன்பு என்னிடம் நாற் சந்தியில் பிச்சை வாங்கினாளே அவள்தான். இப்போது அவள் பிச்சைக்காரியாக சொல்ல முடியாது.

இரண்டு கலண்டர்கள் முடிந்தன. எனக்கு விவாகம் முடிந்து ஒரு குழந்தைக்குத் தகப்பனாகி விட்டேன். ஒரு தினம் என் மனைவி சகிதம் கடற்கரை நோக்கிப் போய்க் கொண்டிருந்தேன்.

ஒரு மர நிழலில் ஒருகுரூரப் பெண் பிச்சை கேட்டபடி உட்கார்ந்திருந்தாள். அவளருகில் இரண்டுகுழந்தைகள் எலும்பும் தோலுமாக உட்கார்ந்திருந்தன. அக்குரூபப் பெண்ணை எங்கேயோ கண்ட ஞாபகம் - ஆம்! முன்பு யான் சந்தித்த அதே பிச்சைக்காரி ... திகைத்து நின்றேன்...

'பாம் ... ம்ம்' என்ற கார் ஹார்ன் சத்தம். தெருக்கரையடைந்தேன். நமது முதலாளியின் கார் - முதலாளியுடன் போய்க் கொண்டிருந்தது.

இம்ம் ... என்னடா உலகம். அவளை இந்நிலைக்குக் கொண்டுவந்து குரூபியாக்கிவிட்ட அந்த முதலாளி அந்த ரோகக்காரன் இன்னும் பெரிய மனிதன். ஆனால் அப்பெண் ... ஐயோ! கண்மூடி உலகம். உண்மை தெரியாத உலகம். திரும்பவும் சில காசைக் கொடுத்துவிட்டுச் சிந்தனையுடன் போய்விட்டேன்.

இப்போது முதலாளி தன் வேட்டை இலக்கை எங்கே வைத்துக் கொண்டிருக்கிறாரோ? அப்பப்பா! இப்படி எத்தனை பெண்களோ? என் செய்வது: பணத்தின் செயலப்பா செயல்! யார் கதைக்க முடியும்? பெரிய மனிதர்களின் விபசார வேட்டைக்காடே இவ்வுலகம். பணங்காட்டிப் பல மாதரைக் கெடுக்கும் உலகம். சமுதாயத்தை நாசமுறுத்த - நாரியர்களைக் கெடுக்கத்தான் பணம் படைத்த முதலாளிகள் பிறந்தார்களா? .... என்றெல்லாம் என் மனம் சிந்தித்தது.

சில நாட்களால் அதே பிச்சைக்காரி வறுமையையும், வாட்டிய நோயையும் தாங்கமுடியாமல் கடலில் விழுந்து இறந்ததாகப் பரமு சொல்லக் கேள்விப்பட்டேன்.

"என்ன உலகமடா இது ஏழைனக்கு நரகமடா" என்பதைத்தவிர வேறு என்ன சொல்ல முடியும்.

(சுதந்திரன்-1962-03-30.)

# தியாகத்தின் சின்னம்

ஏனது மனப்புயலைக் கண்ணீராக்கியபடி வீட்டு முன்றலில் உட்காந்திருந்தாள் கமலா. அவளது முழுப் பெயர் கமலாதேவி.

அவள் அழகிதான். ஆனால் ஆனந்தமில்லை. அவள் அடக்கம் நிறைந்தவள். ஆனால் இலட்சிய வாழ்வில்லை. படித்தவள். ஆனால் பதட்ட வாழ்வுதான் வாழ்கிறாள். உயர் குடும்பத்திலே உதித்தவளாயிருந்தும் விரக்தி வாழ்வே அவள் கண்டபலன். புருஷனைத் தெய்வமாக மதிக்கிறாள். ஆனால் மனப்போர் தான் அவள் கண்ட மிச்சம். இதன் காரணம், முன் பாவ வினையா, தர்மமா, அதிர்ஷ்டயீனமா? அல்லது வேறும் ஏதாவதொன்றா?

அவளுக்குப் பொருத்தமான ஏற்ற கணவன் கிடைத்திருந்தால் பெற்றார் கிடைக்கச் செய்திருந்தால் இந்நிலை வருமா? கண்ணீர் விட ஏதுவாகுமா?

கமலாதேவி அழகி, படித்தவள், அடக்கமிக்கவள்...ஆனால் வாழ்கிறாளா?

தேவியின் கணபதி சபாபதி. குடிகாரன். ஸ்திரீலோலன் சோம்பேறி மடமைதான் அவன் அறிவு..ஆனால் 'வாழ்கிறான்'.

தேவி கண்ணீர் விடுகிறாள். ஆனால் சபாபதி, உல்லாசபுரியில் உலாவுகிறான். தேவியின் மனமோ போராட்டம். சபாபதியின் உளமோ ரச ஓட்டம், தேவி சபாபதியையே நம்பியவள். சபாபதியோ பல பெண்களை நம்பியவன். அவளுக்கு அவனே எல்லாம்! ஆனால் அவனுக்கோ அவள் ஒரு துரும்பு. உணவு செய்து அளிக்கும் வேலைக்காரி.

தேவியும், சபாபதியும் எண்ணெயும் தண்ணீரும் போல. ஆனால் சமுதாயச் சட்டம், பெற்றோரின் பேதமை அவர்களை ஒன்றாக்கியது. அதனால் தேவி களை இழந்து கண்ணீரும் கம்பலையுமாக வாழ்கின்றாள். இந்தக் கண்ணீர் கூரியவளாகிச் சபாபதியின் கழுத்தையே அறுத்து விட்டால்....? பின்னர் நடப்பது என்ன?

கமலா கண்ணியமுள்ள குடும்பத்தில் ஒழுக்கம் மிக்க பெற்றோரிடையில் மானெனத் துள்ளியபடி வாழ்ந்த வாழ்க்கையை எண்ணினால், அவள் கண்கள் நீராகச் சொட்டும், மணம் முடிக்குமுன் வாழ்வு அவளுக்கு இனித்தது. ஆனால் இப்போது....

பெற்றோர் சபாபதியைக் கணவனாக்க யோசித்தனர். கமலாவும் மனமொப்பியே மணந்தாள். உலகமறியாப் பருவம், துயரமணுகாத நேரம். மணம் முடித்தபின் மந்தகாசமுடன், மன நிறைவுடன் வாழலாம் என எண்ணினாள். சபாபதியை மணந்தாள். துயரமே எது என உணர்ந்திராத

கமலா, மணம் முடித்த அடுத்த தினமே துயரத்து ஓவியமாய், கண்ணீர் விடுங்கன்னியாய் விட்டாள். மதுவாயில் நாற, வாய் கெட்ட வசனமிழைக்க கை கமலாவை அடிக்க.... இது தான் வாழ்வா? ஒரு நாளாவது கமலாவுடன் சபாபதி சிரித்துப் பேசியதுண்டா? தினமும் ஏசியதுண்டு, அடித்ததுண்டு. ஆனால் கமலா, கணவனென்ற கடமைக்காக எதையும் தாங்கி இதயத்தை வயிரமாக்கி வாழ்ந்து வந்தாள். 'அவர் திருந்தி விடுவார்' என்ற நப்பாசை அவளிடமிருந்தது.

சபாபதி ஒரு கடை வியாபாரி. சாதாரண வருவாயுள்ளவன். கிடைக்கும் பணத்தை மதுவுக்கும், விலை மாதருக்கும் வாரி வழங்கினான். நாட்டிலுள்ள பரத்தையர்கள் வாழ அவன் வாழ்ந்தான். அவனது பணமும் கமலாவின் நகைகளும் வேறு பெண்களின் உடமைகளாயின. சபாபதியின் இளமை முறுக்கு, உண்மையை விட்டு வெகு தூரம் நழுவியோடி, கமலாவின் கண்ணீர் வாழ்க்கைக்கு வழி வகுத்தது.

இரவு பன்னிரண்டு மணிக்குப் பிறகு வருவான். அல்லது அதிகாலையில் வருவான். தனக்கென ஒருத்தி இருக்கிறாளே; இளமையும் உணர்ச்சியும் உருவாக்கிய அவளையான் கவனியாது விட்டால் வேறு யார் கவனிப்பார் எனச் சபாபதி எண்ணியதே கிடையாது. மதுவே கதியெனத்திரிந்த அவனை உலகு காறியுமிழ்ந்தது. ஆனால், கமலா மட்டும் 'அவர் என் கணவன் தானே' என எண்ணித் தனது கடமையைத் தவறாது செய்து வந்தாள்.

ஆண்டுகள் பல ஓடி மறைந்தன. சபாபதியின் உடற்கட்டுப் பகட்டுக்காரிகளின் நட்பால் வீணானது. வாலிபத்திலேயே கிழவன் ஆனான். அதுமட்டுமல்ல. கெட்ட நோய்கள் பல அவனைப் பீடித்தன. எழுந்து நடக்க முடியாத நிலை. வீட்டிலேயே பாயுடன் பாயாகக் கிடந்தான். வறுமை வீட்டை வெறுமையாக்கியது. கமலத்தின் கழுத்தைக் கைகளை வெறுமையாக்கியது. இந்த நேரத்திலும் அவனுக்கு வேண்டிய உதவிகளை உடனுக்குடன் எவ்வித வெறுப்புமின்றிக் கமலா செய்தாள்.

சபாபதி தான் நடந்து வந்த வாழ்வுப் பாதையைத் திரும்பிப் பார்த்தான்... அங்கே சுகம் சுகம் என வெறி நாயாக உழன்ற மடமை தெரிந்தது. மதுவும் மங்கையும் அவனைப் பேயாக்கியமை புரிந்தது. இளமையையும் பணத்தையும் வாரி வழங்கி, உடலாசையைப் பெரும் விடயமாக்கியதால், குறுகிய கால வாழ்விலே வளமிழந்து இன்பமிழந்து நடைப்பிணமானமை புரிந்தது. காமமெனும் அக்கினியுள் அமிழ்ந்தி அன்பு உணராது, வெறிக்காக வாழ்ந்த வீழ்ச்சி. கண்டதே காட்சி கொண்டதே கோலம்! எனும் வாழ்வு வாழ்வா? அது விளக்கில் வீழும் விட்டிற் பூச்சி நிலைதான்'.

சபாபதியால் இப்போது தான் உணர முடிந்தது. கண்கெட்ட பின் சூரிய நமஸ்காரம் முழுப்பயன் தராதே! ஐயோ! ஐயோ! துரோகி! துரோகி! எனக் கீதமிட்டுச் சபாபதயின் மூச்சுப் பறந்தது. இப்படி எண்ணக் கோவைகளுடன் புரண்ட சபாபதியைக் கமலா கஞ்சி குடிக்குமாறு கேட்டு இவ்வுலகுக்குக்

கொணர்ந்தாள். கமலாவைச் சபாபதி உற்றுப் பார்த்தான். கழுத்தில் மஞ்சள் கயிற்றில் மாங்கலியமாத்திரந்தான் மின்னியது.

கமலா என்றான். அதில் பச்சாத்தாபம், மன்னிப்புக் கோருகை யாவும் கிடந்தன. சபாபதியின் கண்களில் நீர் சூழ்ந்தது. கமலா துடிப்புடன் 'ஏன் ஒரு மாதிரி இருக்கிறீர்கள்?' எனக் கேட்டாள்.

தன் மெலிந்த கைகளால் அவளது கைகளைப் பற்றினான் சபாபதி. கமலா 'என்னை மன்னிப்பாயா'? என்றான். அழுதான்.

கமலத்தாற் பொறுக்க முடியவில்லை. 'என்னிடமா மன்னிப்பு, எப்பவுமே இல்லை? எப்போதோ தந்து விட்டேன் என்னையுங்களிடம். யான் உங்களுடையவள். என்னிடமா தாங்கள் மன்னிப்புக் கேட்டபது?' என்றபடி கமலாவும் கண்ணீர் சிந்தினாள்.

சபாபதி எப்போதாவது வழிக்கு வந்தேயாவான் எனக் கமலா எண்ணிய எண்ணம் ஈடேறியது. ஆனால், உடலை இழந்த நிலையில் தான் அவன் உண்மையை உணர்ந்தான். இப்போதும் இளமையிருந்தால் அது உண்மையை உணர்ந்திருக்குமோவென்பது சந்தேகமே.

'எப்போதே என்னையுங்களிடம் தந்துவிட்டேன்' எனக் கமலா கூறிய வசனம் சபாபதியை மெய்மறக்கச் செய்தது. கமலாவை, பொறுமையின் சின்னத்தை, வாழா வெட்டியாக்கிய தன் துரோகத்தை எண்ணி வருந்தினான். கழிவிரக்கப்பட்டான். கணவனிருந்தும் விதவை போல் வாழ்ந்த கமலத்தின் வாழ்வை எண்ணினான் சபாபதி. பெண்மையின் பெருமையை, தண்மையை, தியாகத்தை, உணர்ந்தான்.

அப்போது வெளியில், தண்ணீர் எடுத்து வரக் கமலம் போனாள்.

சில நிமிடங்கள் ஓடின.

'ஐயோ! ஐயோ!' என்றபடி ஓடிவந்து வீட்டு விறாந்தையில் வீழ்ந்தாள் கமலா.

'என்ன கமலா?' எனத் துடித்தபடி பலமெல்லாம் சேர்த்து எழுந்து ஓடிவந்தான் சபாபதி. கமலாவின் காலிலிருந்து இரத்தம் ஒழுகியபடி இருந்தது. புல்லுக்குள் மறைந்து கிடந்த பாம்பு தீண்டி விட்ட காயமது.

'ஐயோ பாம்பு' என்று கமலா கதறினாள். சபாபதி தாமதிக்கவில்லை. கடிவாயில் தன் வாயை வைத்து நஞ்சை உறிஞ்சினான். சில நிமிஷ நேரங்கள் பறந்தன. சபாபதி நீலம் பாரிக்க அவள் பக்கத்திற் பிணமாகிக் கிடந்தான். அவன் தியாகியாகி விட்டான்.

மூர்ச்சை தெளிந்து எழுந்த கமலா, கணவனைப் பிணமாகக் கண்டாள். கணவனின் தியாகத்தை உணர்ந்தாள். தியாகத்தின் சின்னமானான் அவன். கண்ணீரின் உருவமானாள் அவள்!

(ஈழகேசரி - 1953-11-29)

# புகைந்த உள்ளம்

வாலிப வயதில் நிறைவேறினால் இன்ப மிகுதியும், நிறைவேறாவிடில் துன்ப மிகுதியும் வருவிக்கும் இயல்பூக்கத்தில் முதன்மை பெற்றது 'காதல்!'

காதலில் வெற்றி பெற்றோர் வாழ்வு பூராவும் ஒரு வகை இலட்சிய வெற்றியடைந்தவர்களாகவும், நிறைவேறாது தோற்றோர் வாழ்வில் வரட்சியுள்ளவர்களாகவும் காணப்படுவர்.

காதலுக்கா எதையும் செய்யத்துணியும் பருவம் வாலிபம். எதையும் தாங்குமிதயமான வாலிப இதயத்தில் 'காதல் தோல்வி' மட்டும் தாங்காததாக, தற்கொலைவரை கொண்டு போய்விடுவதாக இருந்து வருகிறது.

ஆனால், நான் புதுமனிதன். படித்த காலத்திலா கட்டும் உத்தியோகத்துக் காகக் கொழும்பு வந்த பின்பாகட்டும். காதல் என்பது என்னை வாட்டவுமில்லை. நான் தேடவுமில்லை. நானுண்டு என் வேலையுண்டு என்றபடி இருபத்தெட்டு வயதையும் கடந்து விட்டேன். என்னுடன் வேலை பார்க்கும் சக நண்பர்கள் அப்பப்பா! எந்த நேரமும் 'லவ்' 'லவ்' என்று வாலி பாடியபடியே இருப்பார்கள். அவர்களது நேரமெல்லாம் காதல் கடிதம் வாசிப்பதிலும் பதில் வரைவதிலும் தான் கழியும். நான் அவர்களுக்காக இரங்கினேன் ஒழிய வேறென்ன செய்யலாம்.

நான் பெண்களில் வெறுப்புள்ளவனல்ல. சுவாமியுமல்ல. ஆனால் காதலில் வெறுப்புள்ளவன். காதலால் தம் வாழ்வையே வரட்சியாக்கிக் கொண்ட நண்பர்களின் பாடம் எனக்கு அனுபவமாயிற்று. காதல் காவியங்களாய் கயஸின் பரிதாப நிலை. அம்பிகாபதியின் அல்லல். ரோமியோவின் வீழ்ச்சி. காலி இஸ்மாயிலின் உண்ணா நோன்பு. அடடா! இந்தக் காதல் செய்யும் அட்டூழியம்! இப்படிப்பட்ட காதல் ஏன்? அக்காதல் ஒழிந்தால் தான் என்ன? காதலாம் காதல். கருத்தில்லாது வாழ்வையாக்குகின்ற எமனின் கைப்பாவை தான் காதல். மகிழ்ந்திருக்கும் மனித மனத்தை துன்பக்காடாக்கி வாழாது நடைப்பிணமாக்கும் நாசம் தான் காதல்.

இப்படியெல்லாம் எண்ணியபடி மூன்றாம் வகுப்புப்பெட்டியில் ஓர் மூலையில் உட்கார்ந்து கொண்டிருந்தேன். யாழ்ப்பாணத்தை நோக்கி ஓடிக்கொண்டிருந்தது புகைவண்டி.

இன்னும் இரண்டு நாட்களில் எனக்கு விவாகம், அதற்காகத்தான் என் சொந்த ஊரான யாழ்ப்பாணம் செல்கிறேன். இன்னும் மணமகள் யார் என்பது எனக்குத் தெரியாது. நான் அதையறிய அவாவுறவுமில்லை. என் தகப்பனார் யாவும் ஒழுங்கு செய்து அறிவித்தார். யாரோ ஓர் ஆசிரியையாம். இன்டர் வரை

படித்தவளாம். நல்லகுடும்பத்தைச் சேர்ந்தவளாம். எல்லாமாக முப்பதாயிரம் வரை சீதனமாம். இவ்வளவையும் தகப்பனார் ஒழுங்கு செய்துவிட்டு எனக்கு எழுதினார். ஒப்புக் கொண்டேன். எனக்கு என்ன தடங்கல் ஒப்புக் கொள்ளாதுபோக. 'கலியாணத்தின் பின்தான் நல்ல காதல் முளைக்க வேண்டும் சொந்த மனைவி மேல்' எனக் கூறும் எனக்கு தடங்கல் இருக்குமா? நாளை போனால் என்னுடன் இன்னோருயிர். நான் சமுதாயச் சட்டத்துக்கு அடங்கிக் கலியாணஞ் செய்து காதலிக்கப் போகிறவன். எந்தவிதத் தடையும் மனைவி மேல் காதலிப்பதற்கு ஏற்படுமா?

பொல்காவலையும் வந்தது. அப்பாடா ஒரு சோடாவாங்கிக் குடித்துவிட்டு ஏறினேன். என் பக்கத்தில் ஓர் வாலிபன். புதுக்க ஏறியிருந்தான். யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவன்தான். சாதாரண உடை தரித்திருந்தான். தலைமயிர்கள் ஒன்றுடன் ஒன்று கொழுவி புரட்சி செய்தபடியிருந்தன. அவன் எதையும் சட்டை பண்ணாதவனாக வெறிச் சென்றிருந்தான். வாயில் புகைந்து கொண்டிருந்தது சிகரட்.

சாதாரண அழகனாக அவ்வாலிபன் முகத்தில் ஒரு வகை விரக்தி. எதையோ இழந்தவன் போலக் காணப்பட்டான்!

அவன் வாயிலிருந்து சுருள் சுருளாகப் புகை போய்க் கொண்டிருந்தது. மற்றச் சிகரட் வாயில் ஏறியது. அதுவும் புகைந்து கொண்டிருந்தது. முடிந்தது சிகரட். மற்றது வாயில் ஏறியது. பின் மற்றது, மற்றது, இப்படியாகச் சிகரெட் பல முடிந்து கொண்டிருந்தன. அவன் நிலை பரிதாபத்திற்குரியதாயிருந்தது. இளம் வாலிபன். பாவம். ஏன் வீணாகப் புகையைச் செலுத்தித் தன்னைத் தானாகவே கொல்லுகிறான். ஏதாவது அதிக துயரோ!

குருணாகலும் வந்து விட்டது. இறங்கிப் போனான் அவ்வாலிபன். 'பவ்வெற்'றில்குடித்தான். வந்தான் திரும்பவும் சிகரட் புகை சூழ.

யான் அவனை உற்றுப் பார்த்தேன். எனக்கும் சிகரட்டை நீட்டினான்.

'மன்னிக்கவும். நான் பாவிப்பதில்லை' என்றேன்.

எனக்கு அவனுடன் பேச வேண்டும் போல் இருந்தது. 'தம்பி! ஏனிப்படி அதிகமாகப் புகைக்கிறாய். அத்துடன் இது உடம்புக்குக் கூடாதே' எனக் கேட்டே விட்டேன். எவரது எந்த விஷயத்திலும் தலையிடாது வாழ்பவனாய நான் கேட்டது எனக்கே ஆச்சரியந்தான்.

மற்றச் சிகரட்டைப் பற்றவைத்தபடி 'புகைந்த உள்ளத்துக்குப் புகையாவது ஆறுதல் தரட்டுமே' என்றான் அவன்.

'இறந்து விடலாம் இந்த உலகத்தில் என்ன உண்டு. உண்மையாக நம்பியவர்களையே ஏமாற்றும் நாசக்காரர்கள் வசிக்கும் உலகம் இது' என்றான் படபடவென.

ஆம்! அவன் மனம் புயலாகிப் புகைந்து கொண்டிருந்தது. ஏதோ மனதில் தாங்க முடியாத துயர் குடிகொண்டுள்ளது. எப்படியும் கேட்டே ஆகவேண்டும் எனத் துணிந்தேன்.

தனக்கு சிறு ஆறுதலாகவாவது இருக்குமெனச் சொல்ல முன் வந்தான்.

அவன் கூறிய கதை:

நான் யாழ்ப்பாணம் மானிப்பாயில் பிறந்தவன். தாய் தந்தையர் சாதாரண வருவாயுள்ளவர்களாக இருந்தும் எஸ்.எஸ்.ஸி வரை படிப்பித்தார்கள். படிப்பில் அதிக கவனமாக இருந்ததால் பத்தொன்பது வயதிலேயே உத்தியோகமாகி விட்டேன்.

எனது எஸ்.எஸ்.ஸி பரீட்சைக்கு யாழ்ப்பாணம் மத்திய கல்லூரிக்குச் சென்றேன். என் பரீட்சைச் சுட்டிலக்கத்துக்கு அடுத்ததாக இருந்தாள் ஒரு யுவதி. கணிதப் பாடம் நடந்து கொண்டிருக்கும் போது மூன்றாவது கணக்கு மறுமொழியைச் சொல்லுமாறு தயவுடன் என் பின் இருந்த யுவதி கேட்டாள்.

பாவமாகவிருந்தது. பயந்தபடியே மறுமொழியைக் கூறினேன். அக்கணக்கு மறுமொழி அவளுக்கும் வந்திருந்தது. மிகமிக மகிழ்ந்தாள். பல 'தாங்ஸ்' கூறினாள்.

இப்படியாகப் பரீட்சையின் போது எனது வாழ்வுப் பரீட்சையும் ஆரம்பமுமாகிவிட்டது. அவள் என்னைப் பற்றிக்கொண்டாள். அதிகம் பேசவும் முடியாது. ஆனால் என்னையறியாது அவளைச் சுற்றியே என் மனம் சுழன்றது.

பரீட்சை நாட்களும் முடிந்தது. நாங்களும் பிரிந்தோம். அவள் யாழ்ப்பாணம் பெண்கள் கல்லூரியில் படித்து வந்தாள்.

மூன்று மாதங்கள் அவள் நினைவிலேயே கழித்தேன்.

பரீட்சை மறுமொழி வந்தது. நான் சித்தியடைந்தேன். பத்திரிகையை உற்றுப் பார்த்தேன். அவள் இலக்கமும் வந்திருந்தது. அவள் சித்தி பெற்றது எனக்கு அதிக சந்தோஷமளித்தது. அன்றே அவள் ஓர் தந்தி அனுப்பியிருந்தாள் எனக்கு. பரீட்சை மறுமொழியைக் கண்டு மகிழ்ந்ததாக. நானும் பதிலாக நன்றிக் கடிதமொன்று அனுப்பினேன்.

அந்த நன்றிக் கடிதத்தைப் புகழ்ந்து ஒரு நீண்ட அன்பு அஞ்சல் அனுப்பினாள் அவள். பின்பென்ன: அன்புக் கடிதங்கள் பல பரிமாறப்பட்டுக் காதலர் ஆனோம்! ஏதாவது பட்டினத்தில் கொண்டாட்டம், திருவிழா என்பவைகள் வந்தால் அறிவிப்பாள். நானும் போவேன்: சந்திப்போம்.

இப்படியாக எமது காதல் வளர்ந்து வந்தது நேற்று வரை. இன்று அது கருத்தற்றதாகிவிட்டது. கருத்தற்றது மட்டுமல்ல ' கயமை' நிறைந்ததாக ஆகிவிட்டது.

அவள் அழகுக்காகவோ, பணத்துக்காகவோ நான் காதலிக்கவில்லை.

அவளை அவளுக்காகவே நேசித்தேன். நான்தான் அவள் என எண்ணினேன். நானும் அவளும் ஒருவர் ஆகவே நினைத்தேன். அவள் இன்டர் படித்துவிட்டாள் என்பதற்காக நான் கூடிய அன்பும் வைக்கவில்லை. தொடங்கும்போது எப்படி அன்பு வைத்தேனோ அப்படியாகவே உறுதியுடன் காதலித்தேன். வாழ்வின் உதவிக்கை அவளாகவே எனக்காவாள் என்றெல்லாம் கற்பனை பண்ணினேன்.

கடிதங்களில் நம் வருங்கால வாழ்வு எப்படி அமையவேண்டும் என்றெல்லாம் திட்டம் போட்டோம். நான்தான் தனது கண்கண்ட தெய்வம் என்றெல்லாம் கூறினாள். ஆனால் இதுவெல்லாம் நேற்று வரை.

நேற்று அவள் ஓர் கடிதம் எழுதியிருந்தாள். அத்துடன் தன் விவாக அழைப்பும் அனுப்பியிருந்தாள். வேறு யாரையோ மணமுடிக்கப் போகிறாளாம்! அவ்விவாகத்துக்கு என்னையும் வரவேண்டுமாம். என்ன படித்த பெண்களப்பா!

திரும்பவும் ஒரு சிகரெட் பற்றியபடி சட்டைப் பையிலிருந்த கடிதத்தை எடுத்து கையெழுத்தை மறைத்தபடி வாசித்தான்.

அன்பரே!

வணக்கம்.

'இந்த உலகத்தில் காதல் நிறைவேறாத ஒன்று. அது படிக்கும் மட்டும் நடமாடும் ஒரு பெலவீனம். ஏனெனில் தாய் தந்தையர் கண்டனம் வாழ்வை வரட்டவே செய்யும். ஆதலால் அவர்கள் கூற்றுப்படியே நடப்பதுதான் நல்லதும் பொருத்தமானதுமாகும். உங்களை மணம் செய்ய முடியாதவளாயுள்ளேன். ஆனால் உங்களை என்றும் காதலிப்பேன். நீங்கள்தான் என் இதய மன்னன். விவாகம் முடிந்ததும் என் கணவர் உத்தியோகஸ்தலம் போய்விடுவார். அப்போதெல்லாம் நீங்கள் என்னை வந்து சந்திக்கலாம். ஊரறிய மனைவியாக உங்களுடன் இருக்காவிட்டாலும் நீங்களறிய நான் உங்கள் உளமனைவி: காதலி. இதை நம்புங்கள்!'

இக்கடிதத்தைக் கண்டு தளர்ந்துவிட வேண்டாம். இத்துடன் எனது விவாக அழைப்பும் உண்டு. கட்டாயமாக விவாக தினத்துக்கு வரவே வேண்டும்.

உங்கள் காதலி

✦ ✦ ✦ ✦ ✦

திரும்பவும் கூறத் தொடங்கினான்.

'பார்த்தீர்களா! காதல் என்று கூறி நேற்றுவரை என்னைச் சிறைபிடித்த அந்தப் பெண் பின்பும் விடுதலை தர மாட்டாளாம். இன்னோர் ஆணையும் ஏமாற்றக் கங்கணம் கட்டிவிட்டாள். ஆங்கிலக் கல்வி கொடுத்த துணிவா? அல்லது பெண்களின் தன்மையா? சொல்லுங்கள் இப்படியான இந்தக்

கருத்தற்ற உலகில் வாழத்தான் வேண்டுமா? அவளுக்கு விபரமாக அறிவித்துவிட்டுத் தற்கொலை செய்வதல்லாது வேறென்ன செய்யலாம்!'

நான் திகைத்தேவிட்டேன்: அவன் புகைந்த உள்ளத்தின் உண்மைக் கதை கேட்டு, வெளியே நோக்கினேன்: ஒரே இருள். பாவம்: இந்த இளைஞனை ஏமாற்றிவிட்டாளே ஒரு தமிழ்ப் பெண் - படித்த பெண். ஏமாற்றியதுமல்லாது இன்னுமொரு ஆணை ஏமாற்றத் திட்டம் வகுக்கிறாளே!

உறங்கிக் கொண்டிருந்தான் அந்த இளைஞன்.

திரும்பிப் படுத்தான். அவன் சட்டைப் பையிலிருந்து ஓர் கடதாசி போன்றது வீழ்ந்தது.

எடுத்தேன். விரித்து வாசித்தேன். அது ஒரு விவாக அழைப்பு அறிவித்தல். அதில்: நாகலிங்கத்தின் புதல்வன் பொன்னுச்சாமிதான் மணமகனாகக் காணப்பட்டது. என்ன? என் விவாக அழைப்பு விஞ்ஞாபனம்! யான்தான் பொன்னுச்சாமி: என் தந்தை பெயர்தான் நாகலிங்கம். எனக்கா அந்த 'அவள்' மனைவியாகப் போகிறாள்.

புகைந்தது உள்ளம்: புயலாகியது மனமெல்லாம்: நரம்பு முறுகியது. எழுந்தேன் - இருந்தேன் - நடந்தேன் - திரும்பவும் உட்கார்ந்தேன். வண்டி ஓடிக்கொண்டிருந்தது. என்ன செய்வதென்றே தெரியவில்லை. ஆச்சரிய உலகமாயுள்ளதே இவ்வைபவம்.

என் வாயில் சிகரெட் ஏறிக்கொண்டது. புகைத்தேன் - புகைத்தேன்: உள்ளப் புகைச்சல் அதிகரித்தது ஒழியத் தீர்ந்ததாயில்லை.

அவள் தந்தை தாய்க்காகக் காதலை வெறுத்து வேறோர் திட்டம் வகுத்தாள். நான் எனக்காக தந்தை தாய் சொல்லை ஏற்க முடியாதவனாய் விட்டேன்.

எப்படி ஏற்பது? அவள் பெண்ணாக இருந்தாலல்லவோ ஏற்க!

அந்த இளைஞன் உறங்கிக் கொண்டேயிருந்தான்.

தட்டி எழுப்பினேன். எழும்பவில்லை. சாவகச்சேரி ஸ்டேசனும் கழிந்துவிட்டது.

இளைஞனைத் தட்டினேன். உயிருடனிருந்தாலல்லவா அவன் விழிப்பான். ஆம்! இறந்துவிட்டான்: விடுதலையடைந்து விட்டான். புகையிரத மலகூடத்துள் போய்ச் சாப்பிட்ட நஞ்சு: அவனை விடுதலையாக்கிற்று! புகைந்த உள்ளத்துக்கு ஆறுதல் இறப்புத்தானா? ஏ இயற்கையே! நீதான் பதில் கூறு!

அவன் சட்டைப்பையுள் ஓர் கடிதம்! பார்த்தேன். அக்கடிதம் 'அவள்' விலாசத்துக்கு.

'உனக்காகச் சாகிறேன்' என வரைந்திருந்தான்.

தற்கொலை எனத் தீர்ப்பளித்தது அரசாங்கம். தற்கொலைக்குக் காரணம் தெரிய முடியாததொன்றாயது!

யான் புகைந்த உள்ளமானேன்! விவாகமே முடியாது பிரம்மச்சாரியாக வாழத் தொடங்கிவிட்டேன்.

அந்த 'இளைஞன்' மறக்க முடியாதவனாய் விட்டான் உள்ளத்தில்!

உலகம் ஓடிக் கொண்டுதானிருக்கிறது. 'அவள்' வாழ்கிறாள் வேறு ஒருவனுடன்.

(சுதந்திரன் - 1952 - 07 - 06)

# காதல் கனிந்தது

புகைவண்டி ஓடிக்கொண்டிருந்தது: கடகடவென ஓடிக் கொண்டிருந்தது. சுதந்திர தின விடுதலை காரணமாக யாழ்ப்பாணம் வந்த உத்தியோகத்தர்கள் கொழும்பு நோக்கிப் போய்க் கொண்டிருந்தனர்.

'மதவாச்சி, மதவாச்சி' என்ற சத்தம் நித்திரை உறக்கத்திலிருந்து என்னைக் கண்விழிக்கச் செய்தது. என் முன் ஒரு யௌவன மங்கை உட்கார்ந்திருந்தாள். அவள் பக்கத்திற் பத்து வயது மதிக்கக்கூடிய ஒரு சிறுவனும் உட்கார்ந்திருந்தான். அம்மங்கையும் அப்பையனுமாக எங்கேயோ போகிறார்கள் என்பது புலனாயிற்று.

அவள், மணம் முடியாத கன்னி. கொழுகொம்பை நாடாத புதுக்கொடி. அவள் முகம் புன்முறுவலின் இருப்பிடம்.

புகைவண்டியிலேதான் எத்தனை புதுச் சிநேகங்கள் உண்டாகி விடுகின்றன. யானும் என் பக்கத்திலிருந்தவர்களுடன் பேசியபடி உட்கார்ந்திருந்தேன். என்னையேயறியாது, என் கண் அவள் சௌந்தரியத்தைப் பார்க்கும். ஆனால் அவளும் பார்ப்பாள், பின் வெளியே பார்ப்பாள். யான் பார்க்கும் போது அவள் பார்க்க மாட்டாள். பெண்கள் சரியான புத்திசாலிகள். ஓர் ஆண் தூர வரும் போது அல்லது அவன் நோக்காத போது அவனைப் பார்த்து விடுவார்கள். அந்த ஆடவன் அவளை நோக்கும் போது வேறு எங்காவது பார்ப்பார்கள்.

அவள் முகம்குழந்தை முகம். அதில் கற்பு,குலம், அடக்கம் பதிந்து கிடந்தன. தமிழ்ப் பெண்மையின் சிறப்பு அதில் ஒளி வீசியது. 'பெண்மையின் பண்பு இது தான்' என்பதை விளக்கியபடியிருந்தாள், என்முன் இருந்த அந்த மங்கை.

அவளை நோக்குந் தோறும், நோக்குந்தோறும் 'ஹேறால்டன்' கூறிய 'கற்பு', அடக்கம், சத்தியம் இம்மூன்றும் தான் பெண்களைப் பாதுகாக்கும் தேவதைகள்' என்ற வசனமே நினைவுக்கு வந்தது. இப்படியே எல்லாப் பெண்களும் திகழ்ந்தால்...!

## 2

நிமிடங்கள் மணியாகச் சென்று கொண்டிருந்தன. அந்தப் பெண்மேல் என்னையறியாமலே ஓர் 'அன்பு' உண்டாயிற்று.

வண்டி ஓடிக்கொண்டிருந்தது. நடுச்சாமம். வண்டியிலிருந்த அநேகர் தூங்கி விழுந்து கொண்டிருந்தனர்.

அவள் ஏக்கமுடன் என்னைப் பார்த்தாள். நானும் ஆவலுடன் பார்த்தேன். அவள் பார்வை என் இதயத்தை ஊடுருவிப் பாய்ந்தது. நரம்புகள் விளங்காத

மொழியிற் பேசின. சிலவேளை அவளை பேச ஆரம்பித்து விட்டாலோ என்று என் உள்ளம் பேசியது.

துணிவு வந்தது. மனம் சந்தர்ப்பத்தைத் தேடியது. சந்தர்ப்பம் தேடுவது தானா கடினம். அவள் கையில் ஒரு புத்தகம் இருந்தது. புத்தகத்தைக் கேட்டேன். புன்முறுவலையும் சேர்த்துத் தந்தாள். அப்புத்தகத்தைத் தொடுவதே இன்பமாக இருந்தது.

அக்கதைப் புத்தகத்தைப் புரட்டிப் பார்த்தேன். அதில் அவள் பெயரும் எழுதப்பட்டிருந்தது. ஆனால் அது தான் அப்பெண்ணின் பெயரோ, என்னவோ?

உள்ளம் உணர்ச்சி வயப்பட்டது. பேனாவை எடுத்தேன். அதில் எனது பெயரையும் விலாசத்தையும் எழுதினேன். பின்பு, புத்தகத்தை அவளிடம் நீட்டினேன். வாங்கினாள். பிரித்துப் பார்த்தாள். அவள் முகத்தில் நாணம், மகிழ்ச்சி, ஆச்சரியம் என்பவை தோன்றி மறைந்தன.

## 3

இனியும் பேசுவதற்குப் பயமா? முடியுமா? 'எங்கே போகிறீர்கள்'? என்றேன். புன்முறுவல் செய்தாள். பேச விரும்பினாள். ஆனால் ஏனோ பேசவில்லை!

'நாணம்' தான் காரணமாயிருக்கும் என நான் எண்ணினேன். 'குருநாகலுக்கு' என்றான் அவள் பக்கத்திலிருந்த சிறுவன்.

'ஏன்?'

'எங்கள் தகப்பனார் அங்கு தான் 'ஸ்டேசன் மாஸ்டர்' அவரிடம் போகின்றோம்' என்றான்.

'சொந்த ஊர் எது தம்பி'!

'யாழ்ப்பாணத்தில் நல்லூர்'

'என்ன நல்லூரா? நான் வண்ணார்பண்ணை தான்' என்றேன்.

'இவர் உன் அக்காவா?'

'ஆம்!' என்றான் அவன்.

அப்போதும் அவள் முறுவலித்தாள். முகத்தில் ஏதோ ஒரு வகைச் சோகம் படர்ந்து கிடந்தது.

ஏன் அவள் இத்தனை கூச்சப்படுகிறாள் என்பது எனக்கு விளங்கவேயில்லை. புன்முறுவல் புரிகிறாள். புத்தகத்தைக் கண்ணில் ஒற்றுகிறாள். அவள் பார்வை அன்பைச் சொரிகிறது. பேசுவதற்கு ஆவல் கொள்வது போலவும் தெரிகிறது. ஆனால், ஏன் இந்த மௌனம். அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு

அவளை விடவில்லையோ!

இதயம் பேசியபோது வாய் பேசவும் வேண்டுமா?

குருநாகல்: வண்டி நின்றது. போய் வருகிறேன் என்றாள். தலையால்: புன்முறுவல் செய்தாள்: போய் விட்டாள். என் உயிரும் என்னை விட்டு அவளிடம் போயல்லவா விட்டது!

மறுகணம் வண்டி புறப்பட்டு விட்டது. வண்டியின் கடா கடாச் சத்தம் அவள் நினைவை எழுப்பியது.

அப்படியே. அவள் நினைவில் அமர்ந்திருந்தேன்.

# 4

அவளின் எண்ணமாகவே கொழும்பில் உலாவினேன். அடுத்த நாள் ஒரு கடிதம் வந்தது. அது அவளுடையதே. அவளது கை எழுத்தே!

அதிற் காதல் உயர்வு, இதயக் கலப்பு என்பன எழுத்தில் அமைக்கப்பட்டிருந்தது.

நாட்கள் பல, மாசங்கள் பல ஓடின. கடிதம் பல பரிமாறினோம். இருவரும் மாசற்ற அன்பு பூண்டோம்.

அவளின் தந்தையுடன் பேசி, மணம் செய்ய முடிபும் செய்தாகி விட்டது. விவாக அழைப்பும் அனுப்பியாயிற்று.

குருக்கள் ஓமம் வளர்த்தார். நான் மணக்கோலத்தில் உட்கார்ந்திருந்தேன். எல்லோரும் என்னைப் பரிதாபமாகப் பார்த்தனர். குசு குசு என ஏதேதோ பெண்கள் பேசிக் கொண்டனர். அம்மி மிதிப்பித்து அருந்ததியும் காட்டி விட்டேன். அன்று இரவு எமது முதல் இரவு. வாழ்க்கையில் ஒரே ஒரு முறை வரும் இரவு.

நான் பேசுவதா? அவள் பேசுவதா? இது பெரிய சிக்கல் ஆகி விட்டது. எங்கும் ஒரே நிசப்தம். கரகரவென புதுப்புடவை கீதமிட வந்தாள் என் மனைவி.

பேசினேன் நான்: அவள் பேசவில்லை. அவள் கைபற்றி பின்னர் சிறிது நேரத்தாற் கண்ணீர் உகுத்தாள். ஆனால், நீண்ட மௌனம். என் மடியில் தன் முகத்தைப் புதைத்தபடி விக்கி விக்கி அழுதாள்.

என்னால் பொறுக்கமுடியவில்லை. யானும் அழுதேன்.

தேற்றினேன். எழுந்தாள், ஒரு கடிதத்தை நீட்டினாள். பின் அறையின் மூலையில் கிடந்து விம்மினாள்.

# 5

பூமியில் இருந்து தவறிப் பாதாளம் நோக்கி வீழ்வது போல இருந்தது எனக்கு. தேகம் பதறியது. பதட்டத்துடன் கடிதத்தை விரித்தேன்.

உங்கள் உடைமையாய் விட்ட, உங்கள் காதலி வணக்கமாக எழுதுவது:

நான் இப்போது உங்கள் அடிமை. காதல் - வேண்டி உங்கள் பாதங்களிற் கண்ணீர் வடித்துக் கூறுகிறேன்!

நான் அன்று புகைவண்டியில் ஏன் பேசவில்லை. போகும் போது கூடப் பேசவில்லை எனப் பலவாறு எண்ணியிருப்பீர்கள். நான் என்ன செய்ய...

முருகனது, இக்கலியுக வரதனது, நல்லூர்த் தலத்தருகில் பிறந்தும், கொடுத்து வையாத பாவியாய் விட்டேன்...! என்று உங்களைச் சந்தித்தேனோ, அன்றே என் உள்ளம் உங்களிடம் சரணடைந்து விட்டது, ஆனால்....?

காதலனா? ஆம் எனவுறுதியளித்து எனது அன்புக்கு உடந்தையானீர்கள். என் தெய்வமாய் விட்டீர்கள். ஆனால்...

என்னைச் சகலருமறிய மணந்தீர்கள். உங்கள் சுகவாழ்வுக்காக இப்போது நான் ஏங்குகின்றேன். எல்லா இன்பமும் என்னிடமிருந்து பெறுவீர்கள். ஆனால்....?

ஒரு பெண் மனம் விரும்பி ஏற்றுக் கொள்ளும் காதலிலேதான் அவளுடைய வாழ்வுங் கற்பும் அடங்கியிருக்கின்றன. அப்படியே உங்கள் காதலைப் பெற்றேன். ஆனால்...?

கல் என்றாலும் கணவன் - கல் என்றாலும் மனைவி எனக் கூறாது போய் விட்டார்கள். அப்படிக் கூறியிருந்தாலாவது எனக்குப் பொருந்தும். ஆனால்...?

ஆனால்....? இதற்குப்பதில்!

நான் ஒரு பாபமூட்டை. பாவத்தின் பிறப்பிடம். வாழமுடியாதவள். காதல் துரையே! அன்பு இதயமே! எப்படி எழுத... ஐயோ! என் அன்பே! எப்படிச் சொல்ல....?

என்னை ஒதுக்கித் தள்ளி விடாதீர்கள்! உங்கள் வீட்டு நாய் போலவாவது என்னை உங்கள் பக்கத்தே வைத்திருங்கள்! என்னை மன்னியுங்கள்! என் பாவத்தில் பங்கு பற்றுவீர்களா...? சிறிது எழுதப் பயின்றதால் இதையறியத் தர முடிந்ததே பெரும் பாக்கியம். மார! உங்கள் விடையெதோ!

நான் பேசமுடியாதவள்... ஊமை!

உங்கள்

அபாக்கியவதி

# 6

எனக்கு உயிர் நின்று விட்டது போன்ற உணர்ச்சி. பூமி சுற்றுவதை அன்றே உணர்ந்தேன்.

... இது என்ன விதியா, சதியா?

என் நினைவுகள், கற்பனை மாளிகைகள் யாவுமே மண்மேடு ஆவதா?

என் நண்பர்கள் மணம் முடிக்கும் போது நான் செய்த கேலிகள் எத்தனை, ஆனால் நான்? என் மனைவி...? சந்நியாசி ஆவோமா? மனம் புயலாயது!

புயலில் மரக்கலமாகி, என் மனம் தத்தளித்தது. கரை...? கரையே கிடையாதா?

அவள் அழுகை, உள்ளத்தைத் தொட்டது. இலட்சியம்: தியாகம்: இது கருதி வாழலாகாதா?

இவளை நான் ஒதுக்கினால் அவள் வாழ்வைப் பாழ் செய்த கடனாகவல்லவா ஆகிவிடுவேன்.

'உமை' வாழ்வு வாழ யோக்கியதையில்லையா? உணர்ச்சி ஆசையாகவும் அவளுக்கும் உண்டு தானே!

ஒழுக்கமுள்ள ஒரு பெண் கணவனுக்கு மணிமகுடமல்லவா? உண்மைக் காதல் ஒன்றே போதுமே, வாழ்வுப்பாதை மலர்ப்படுக்கையாக, பெண்மை நிறைந்த பெண்ணை விட வேறு எது வாழ்வுக்கு வேண்டும்... வாய் பேசாவிட்டாலும், உள்ளங்கள் பேசும் தானே! அவளது கற்பும் அடக்கமும் காணுமே, வாழ்நாள் முழுவதும் நான் மகிழ.

'அழகு பெண்களுக்குப் பெருமை தருகிறது. கற்பு அவர்களுக்கு அளவற்ற மதிப்புத் தருகிறது. அடக்கம் அவர்களைத் தெய்வங்களாகக் காட்டுகிறது'... என்பது ஷேக்ஸ்பியரது கூற்று. இது இவளுக்குத்தான் அப்படியே பொருந்தும். இந்தப் பெருமை என் வாழ்வை அருமையாக்காதா?

அப்படியெல்லாம் உள்ளம் எண்ண அலை எறிந்தது. முடிவு பெற்றது.

உடனே ஒரு கடிதமெழுதிக் கொடுத்தேன் அவளிடம் அதில்,

காதற்கனி!

'ஒன்றுக்கும் கலங்காதே! நான் உன்னைக் கடைசிவரை மனப்பூர்வமாக ஏற்றுக் காதலிப்பேன். காப்பாற்றுவேன், இது சத்தியம்!'

அவள் எழுந்தாள். முகத்தில் அமைதி குடிகொண்டிருந்தது. அதில் எதிர்காலத்தின் நம்பிக்கை ஒளி காட்டியது. கீழ்த்திசையிற் கதிரவன் உதித்தான். அவள் முகத்திலும் அதன் ஒளி பிரகாசித்தது.

(ஈழகேசரி 1964-01-24)

# வாழ்க்கைச் சுழல்

புகையிரதம் வேகமாக ஓடிக்கொண்டிருந்தது. வண்டியின் வேகத்தைப் போலவே முருகேசனின் உள்ளமும் ஓடியது. முருகேசன் அவ் வண்டியில் மூன்றாம் வகுப்புப் பெட்டியில் உட்கார்ந்திருந்தான். அடிக்கடி வெளியே எட்டி எட்டிப் பார்த்தான். அவனது உள்ளம் பழமை வாழ்வை - அவன் இளமைக் காலத்திலே கண் கொள்ளா நிலை வாழ்ந்த வாழ்வை - எண்ணி எண்ணிப் பார்த்தது. அப்போது வாலிபனாக இருக்கையில் வாழ்ந்த காலம். வாழ்வின் மேடு பள்ளங்களை, இன்ப துன்பங்களை உணராத, அனுபவம் பதியாத காலம். உள்ள முறுக்குடன், இளமைத் துடிப்புடன் கட்டில்லாக் காளையாக மகிழ்வு சூழ வாழ்ந்த முருகேசனை இப்போது பார்த்தால் பரிதாபமாகத்தான் இருக்கும்.

காலை எழுந்தால் மாலை வரை தன் உத்தியோகம். பின்பு சினிமா, நாடகம் இப்படியாக அவன் காலம் கழிந்தது. அவனுத்தியோகம் போகிறபோக்கு இழுக்கல்தான். இதனால் இறுகிப் பலமெல்லாம் கூட்டாகியிருந்த முருகேசன் ஒரேநேரத்தில் மூவரைக்கூடச் சாதாரணமாக இழுத்து ஓடுவான் றிக்ஷோவில். முருகேசன் முழுப்பொலிவுடன் வாலிப அழகுடன் முறுக்கு மீசையுடன் காணப்படுவான். அடிவயிற்றின் கீழே, ஒரு வேட்டி. தோளிலே ஒரு துண்டு. இது அவனது தோற்றம். அத்தோளுங் கூட கட்டிளங்காளையான அவனை வசீகரமானவனாக்கியிருந்தது. ஒருநாள் பொழுது வானத்திற் சூரியன் பல வர்ணத்தால் ஓவியம் வரைந்த கலைஞன், ஓவியம் உற்சாகப்படுத்தும் மாதிரிப் பொழுது கழிந்தது. அன்று உழைத்த ஐந்து ரூபாயுடன் வாயிற்பீடி புகைய றிக்ஷோவை இழுத்தபடி தன் குடிசைக்குப் போய்கொண்டிருந்தான். அவ்வழியே வந்து கொண்டிருந்த முருகேசனை ஒருவர் கூப்பிட்டது போல் இருந்தது.

அது பெண் குரல். அந்த மெல்லிய குரல் 'ஐயா! ஐயா!' எனப் பரிதாபமாக அழைத்தது. மரத்துக்குப் பக்கத்தே றிக்ஷோவை நிற்பாட்டி விட்டு ஓடிப் போனான்.

அது ஒரு தனிக்குடிசை. அங்கு வந்த முருகேசன் 'என்னம்மா' என்றான்.

'தயவு செய்து ஓர் உதவி செய்வீங்களா?' என்றாள். முதல் கூப்பிட்ட அப்பெண்.

'என்ன'? என்றான் முருகேசன்.

'ஐயா, என் தாய் மரணத்துடன் போராடுகிறாள். ஓடிப்போய் வைத்தியரை அழைத்து வருகிறேன். அதுவரை கொஞ்சமிப்படி அவவைப் பார்த்திருக்கி றீர்களா? இதோ வருகிறேன். யாருமற்ற அநாதை ஐயா...' என அழுதபடி அவள்

கேட்டாள்.

இயற்கையிலேயே இரக்கம் உள்ள முருகேசன் 'ஓம்' எனத் தலை ஆட்டினான். உடனே வைத்தியரை அழைத்துவர அப்பெண் ஓடினாள். முருகேசன் குடிசையில் நுழைந்தான். ஒரு பழைய ஓலைப்பாயில் விழி மிரள கிழவி கிடந்தாள். பக்கத்தே சில மருந்துப் போத்தல்கள். அக்குடிசை மூலையில் ஓட்டையும், ஓடிசலுமான பெட்டி, பானை, சட்டி, அடுப்பு என்பவை. அது தான் சமையற்பக்கம். அந்த ஒரே குடிசைதான் உறங்க, உணவு சமைக்க எல்லாவற்றுக்கும். இவற்றை முருகேசன் பார்த்தான்.

வறுமையின் நிலையை அக்குடிசை ஏழ்மையெனும் சினிமா போல அவனுக்குக் காட்டியது. பார்த்தான். அவன் மூச்சு ஒரு சூடான பெருமூச்சைத் தள்ளியது. அவனும் ஏழைதான். ஆனால் இக்குடிசையுடன் ஒப்பிடும்போது அவன் பாடு குற்றமில்லை. அவன் ஒரு கணம் சிந்திக்கலானான். இவர்கள் யார்? இந்தக் கிழவிக்கு அவள் மகள் தானே? வேறு எவருமே இனத்தவர்கள் கிடையாதா? இப்படிப் பல எண்ணங்கள். அதனிடையில் அந்தப் பெண் இளமை எவ்வறுமையிலும் துளிர்த்தபடி காட்டும் அழகு பிம்பமாய்க் கிடக்கும் அந்தச் சிறு பெண் அவன் சிந்தனைச்சிகரத்தில் நின்றாள்.

'யோகம்' "யோகம்" அக்கிழவியின் வாய் கூப்பிட்டது. முருகேசன் 'என்னம்மா' என்றான்.

'யோகம்' என்று அழைத்தபடி அக்கிழவி அழுதாள். கண்கள் நீரைக் கக்கின. விழி புரண்டது. 'கவனமாக...' எனக் கிழவி தொடங்கினாள் ஏதோ கூற ஆனால் அவளால் கூறமுடியவில்லை.

கிழவியின் அந்திய காலம் கடைசி நேரம் என்பதை அவள் முகம் பளிச்சென முருகேசனுக்கு உணர்த்தியது. துயரமுடன் கிழவியின் முகத்தைப் பார்த்தபடியிருந்தான்.

வைத்தியரை அழைக்கப் போன அவள் மகள் யோகம் தனிமையாக வந்தாள்.

'என்ன பிள்ளை, எங்கே வைத்தியர்? எனப் படபடப்புடன் கேட்டான் முருகேசன்.

யோகம் அழுதாள். விக்கி விக்கி அழுதாள்.

'சொல்லு பிள்ளை, என்ன நடந்தது?' என முருகேசன் முகமெலாம் பல நிலை கொள்ளக் கேட்டான்.

'வைத்தியருக்கு முன்பு வாங்கின மருந்துக்காசு கொடுக்கவில்லை. அத்துடன் இப்போதும் கொடுக்கக் காசே கிடையாது. அதனால் வைத்தியர் வரமுடியாது என்று விட்டார்.'

'என்ன? மனிதன் இறக்கும் போது இன்னொரு மனிதனின் பழங்கணக்குப்

பார்ப்பதா? அந்நிய காலத்தில் உதவி செய்யாமற் பணவேட்டை: நல்ல மனிதர்கள், வேடிக்கையான உலகம், கடவுள் கண் திறப்பதே கிடையாதா?' என முருகேசனின் பார்வை உணர்த்தியது.

முருகேசனுக்கு உடனே தன் மடியிலிருந்த அன்றைய ஊதியமான ஐந்து ரூபாயும் ஞாபகம் வந்தது. 'இந்தா பிள்ளை! ஓடிப்போய் வைத்தியரைக் கையுடன் கூட்டி வா' என்று கூறி அப்பணத்தை யோகத்திடம் கொடுத்தான்.

ஏழைக்க ஏழைதான் எப்போதும் உதவி செய்கிறான். பணக்காரன் பகட்டுக்காட்டி இன்னுமின்னுமல்லவா ஏழையை ஏழையாக்கிறான். அறிவு உலகமாமே, கல்வியுள்ள மனிதனாமே. என்றாலும் முருகேசு போன்ற ஏழைகளில்லாவிடில் ஏழைகளுக்கு வாழ்வே இல்லை என யோகத்தின் முக நிலை கூறியது. வாய் பேசவில்லை. மௌனமாக அப்பணத்தை மிக்க மரியாதை பயக்க வாங்கிக் கொண்டு வைத்தியர் வீட்டை நோக்கி ஓடினாள்.

கிழவி அனுங்கினாள். ஒருமுறை புரண்டாள். 'யோகம்' என உரத்துக் கூப்பிட்டாள்.

அணையும் விளக்கில் உண்டாகும் ஒளி போல 'நீ கவனமாக வாழு, நம்பி மோசம் போயிடாதை. எங்கேயாவது வேலை செய்து கூழ்குடி. என் கடனை எப்படியும் கொடுத்து விடு. அதுவரை கலியாணமே செய்யக் கூடாது' எனக் கிழவி பேசினாள்.

பின்பு, கண்ணீர் ஓடியது. வாயால நுரை எழும்பியது. வாயைத் திறந்தாள். ஏதோ கூறினாள். ஒன்றும் விளங்கவில்லை. பாயைப் பிடித்தாள். எழுந்து விழுந்தாள். பின்பு அவள் பேசவில்லை. மீழா உறக்கமானாள்.

முருகேசனின் கண்களிலிருந்து கண்ணீர் பொலு பொலு என ஓடியது. அவன் உள்ளம் வெறிச்சிட்டுக் கிடந்தது. கிழவியின் வாயைப் பொத்தினான். சேலையால் பிணத்தை மூடினான். அப்போதுதான் வைத்தியர் மூக்குப் பொடியை உறிஞ்சியபடி வண்டியிலிருந்து இறங்கினார்.

யோகம்குடிசையுள் ஓடிவந்தாள். 'ஐயோ! ஐயோ! எனத் தலையிலடித்தபடி கத்தினாள். துயரெலாம், குடிசையெலாம் யோகத்தின் ஒலியில் கிடந்தது. வைத்தியர் வண்டியில் திரும்பிப் போய்க்கொண்டிருந்தார்.

'யோகம் நீ கொடுத்து வைத்தது அவ்வளவுதான். விதி யாரை விடும்' என முருகேசன் பேச ஆரம்பித்தான்.

'கடைசி நேரத்தில் கூட யான் இல்லாமற் போனேனே. அந்த வைத்தியன் சாப்பிட்டு வெற்றிலை போடாது வரமாட்டேன் என்றிட்டானே, அல்லது என் தாயாரின் முகத்தையாவது கண்டிருப்பேனே' என்று யோகம் அழுதபடி தலையை மரத்துடன் அடித்தாள். அரற்றினாள். துயரத்தின் உருவமானாள்.

முருகேசன் தன் கைப்பணத்தைச் செலவழித்துப் பிணத்தை அங்கிருந்து அப்புறப்படுத்திச் சுடலை கொண்டு போய்க் கடைசிக்கடன்களைத் தானே

மகனாகச் செய்தான். யோகத்திற்கு ஆறுதல் கூறி உதவியும் செய்து வந்தான். முருகேசனின் அன்பு உதவியினால் யோகம் ஒருவாறு தேறி வந்தாள்.

காலம் ஓடியது. யோகம் முருகேசனின் வீட்டிலேயே வசித்து வந்தாள். முருகேசனின் தாய் மிக நல்லவள். அவள் யோகத்தை மகள் போலக் கண்ணும் கருத்துமாக வளர்த்து வந்தாள். முருகேசனுக்குத் தாயைத் தவிர வேறு ஒட்டுறவு கிடையாது. இப்போது யோகம் அவனின் அன்பு முழுவதற்கும் உரித்தானாள்.

கொஞ்ச நேரங்கூட யோகத்தைக் காணாது, பேசாது, இருக்க முருகேசனால் முடியாது. இறக்கும் போது யோகத்தின் தாய் கூறியது எப்போதும் நினைவுத் திரையில் முருகேசனுக்கு வரும். ஏனோ அதை யோகத்திடம் அவன் கேட்கவில்லை. 'கடனைக் கொடுக்கும் வரை கலியாணமே செய்யாதே' என யோகத்தின் தாய் ஏன் கூறினாள். என்ன கடன் உண்டு. அது கொடுக்கும் வரை யான் யோகத்தை மனைவியாக்கவே முடியாதா? அப்படியானால் இதைச் சொல்லாமலே விட்டு விடுவோமா? சொன்னால் யோகம் இப்போது என்னைக் கலியாணமே செய்ய மாட்டாளே, என்று முருகேசன் அடிக்கடி சிந்திப்பான்.

ஒரு நாள் தாய் இறக்கும் போது கூறியதைக் கொஞ்சம் மாற்றிப் பின்வருமாறு கூறினான்.

'கவனமாக வாழ், நம்பி மோசம் போகாதே, எங்கேயாவது தக்கவனைக் கட்டிக் கூழ்குடி, என் கடனைக் கொடுத்துவிடு. இதுதான் எனது கடைசிக் கோரிக்கை'.

'யோகம்! உன் தாய் கூறியபடி எல்லாம் சரிதானே' என்றான்.

'எப்படி?' என்றாள்.

'தக்கவன் இருக்கிறானே!'

'எங்கே சொல்லுங்கள்'

'இதோ! என்றபடி தன்னையே சுட்டிக் காட்டினான்.

யோகம் முகம் சிவப்புடன், முறுவலுடன் காணப்பட்டது.

ஆனால்...!

'என்ன ஆனால் ஓ! கடனா? அதுபற்றிக் கேட்க இத்தனை நாட்கள் மறந்திட்டேனே. என்ன கடன் யோகம்' என ஆவல் ததும்ப முருகேசு கேட்டான்.

'என் தகப்பனார் உயிருடன் இருந்த போது வாங்கிய கடன். அக்கடன் வாங்கி ஆண்டுக் கணக்காகி விட்டது. வட்டிக்கு மேல் வட்டியாக வளர்ந்து இப்போது இரண்டாயிரம் ரூபாயாகி விட்டது. எங்களிடமிருந்த ஒரு துண்டு நிலத்தையும் நகையையும் விற்று ஆயிரம் ரூபாயைக் கட்டி ஆறுமாசம் வரையாகிறது. அதனால் கடன்காரன் பேசாதிருக்கிறான். இன்னும் ஆறு

மாசத்தால் மற்ற ஆயிரமும் வட்டியுடன் கட்டிவிடுவதாகப் பேச்சு. ஆனால் எப்படிக் கட்டுவது. கொஞ்சமா? ஆயிரம் ரூபாய் அல்லவா? இக்கடனால்தான் நாம் ஏழையின் உச்சியையடைந்தோம். அல்லது இத்துணைக்கெதியில் துடிதுடித்து அமைதியே இல்லாது என் தாய் இறந்திருக்க மாட்டாள். கடன்காரன் எனது மாமா தான். ஆனால் பணமுள்ள போது யான் மாமா என்றால் பொருத்தமாம். இப்போது யான் அநாதை. அவரைப் பொறுத்தமட்டில் யாரோ. பணம் தான் உறவு. வறுமையின் பிரிவு. பணத்தில் வாழ்வு உண்டு. வறுமையில் வீழ்ச்சி உண்டு. உலகமே பணத்தைச் சுற்றியோடுகிறது. அந்த ஓட்டத்தில் வறுமைப் பிணியிலே பசியின் துணையிலே கிடைக்கும் யாம் பின் தங்கிவிட வேண்டியவர்கள் தான்'... எனக் கூறிய யோகத்தின் கண்களில் இரண்டு சொட்டு நீர் விழுந்தன. அதில் ஒரு துளி பறந்து முருகேசனின் நெஞ்சிற் பதிந்தது.

முருகேசன் எதுவுமே பேசவில்லை. யோசனை சூழ உட்கார்ந்திருந்தான். அவன் வாய் ஆறுதலாக 'ஆ-யி-ர-ம் ரூபாய்' என்றது. உடன் ஒரு முடிபுக்கு வந்தான்.

'யோகம்! பதறாதே யான் சேர்த்து வைத்துள்ள முந்நூறு ரூபாயையும் தருகிறேன். அதையும் நாளை கடனுக்குக் கொடுத்து விடு. இன்னும் மீதியை உழைத்து யானே கட்டுவேன், பயப்படாதே. இந்தக் கையும் வலிய தேகமும், றிக்ஷோவும் உழைக்கும்! கடனையடைக்கும்' எனத் தீர்மானமிட்டுக் கூறினான் முருகேசு.

'நீங்கள் தான் என் கண்கண்ட கடவுள்' என்றாள் யோகம். வேறு எதுவுமே அவள் பேசவில்லை. அத்தனை உள்ள நெகிழ்ச்சி.

காலம் கடுகி நடந்தது. யோகம் - முருகேசனின் அன்பு. பாசம், காதல் யாவுமே 'மணம்' எனும் பூட்டுள் அடக்கப்பட்டது. தம்பதிகள் தளரா அன்பு ஊஞ்சலுடன் கவலையையறியாது வாழ்ந்தனர்.

ஆறுமாசங்கள் உருண்டோடின.

பணத்தை எல்லாம் பெட்டியிற் பூட்டி, அதனால் ஏழைகள் பலரை வாட விட்டு வாழும் சீமான் கோபாலபிள்ளை ஒரு நாள் முருகேசுவைக் கூப்பிட்டார்.

'ஏன் கூப்பிட்டீங்க' எனக்குழைந்தான் முருகேசன்.

'பணம், முருகேசு பணம், காலம் எத்தனை ஆண்டாச்சு. இன்னுந்தான் அதற்கு முடிவில்லை. இனிப் பொறுக்க முடியாது. யோகத்தால் முடியாது, யான் தருவேன் என்றாயே. எங்கேயப்பா?' எனக் கேட்டார் கோபாலபிள்ளை.

'ஐயா தயவு செய்து இன்னும் ஒரு மூன்று மாசம் தாருங்கள். வட்டியுடன் எப்படியும் தந்து விடுகிறேன்' எனத் தாழ்மையுடன் கேட்டான் முருகேசு.

'நிச்சயமாகத் தந்துவிடு. இதுதான் கடைசித்தவணை. ஆமா, எனக் கோபாலபிள்ளை கொஞ்சம் இரங்கினார்.

இதை முருகேசன் யோகத்திடமும் கூறவில்லை. எப்படியும் மூன்று

மாசத்துக்குள் கொடுத்து விட வேண்டும் என்பதற்காக முழுநேரமும் றிக்ஷோவுடன் அலைந்து ஓடினான். உடல் அலுத்துவிடும் அவனுக்கு. இரவு பகல் என்ற பேதமில்லாது உழைத்தான். ஆனால் அவனின் தாயாருக்கு வந்தது சுகயீனம். கையிலிருந்த பணத்தைக் கட்டியழுதான் வைத்தியர் வீட்டில். வெயர்வைச் சொட்டிற் பெற்ற அந்தப் பணம் வைத்தியர் வீட்டிற் சேர்ந்தது. முருகேசனுக்கு அமைதியேயில்லை. ஒரு மாசமும் ஓடி விட்டது. இன்னும் இரண்டு மாசங்களுள் எப்படித்தான் பணம் சேர்ப்பது? முருகேசுவின் மூளை நன்கு வேலை செய்தது. அவன் யோசித்தான். ஆனால் எந்தவித வழியும் திறக்கவில்லை. எப்படித் திறக்கும். அவன் ஏழையல்லவா?

இந்த நேரத்திற் பலர் இலங்கைச் சீமைக்குப் போவதைக் கேள்விப்பட்டான். 'இலங்கையிற் பணம் அதிகமாம். அங்கு பிச்சைக்காரரே கிடையாதாம். அங்கு போனாற் பணக்காரன் ஆகி விடலாமாம்' எனக் கேள்விப்பட்டான். இரண்டு மாசத்துக்குள் பணத்துடன் திரும்பலாம் என்ற எண்ணத்தில் றிக்ஷோவை விற்ற பணத்தில் இலங்கை வந்தடைந்தான்.

அக்கரைக்கு இக்கரை பச்சை என்பதன் கருத்து நன்றாகப் புலப்பட்டது முருகேசனுக்கு. வேலை தேடி அலைந்தான். கடைசியில் ஒரு கடையில் சமையற்காரனாகச் சேர்ந்தான். மாசம் இருபது ரூபாய் சம்பளத்தையும் சேர்த்தான். யோகத்துக்கு விரைவில் வருவதாக ஒரு கடிதம் எழுதியனுப்பி விட்டு யோகத்தின் எண்ணமாகவே கண்டியில் உள்ள அக்கடையில் இருந்தான். ஒரு வருடமோடியது. கடையில் அவன் கணக்கில் இருநூறு ரூபாய் இருந்தது மிச்சமாக. இருநூறு காணாதே. இன்னுமோர் வருடமிருந்து நானூறு ஆக்கிவிட்டால் என அவனுள்ளம் யோசித்தது. பின்னும் ஒரு வருடம் தங்கிவிட்டான். கவலையுருவாயிருந்தான். எப்போது தன் சொந்த நாட்டை, இந்தியாவை அடைவேன் என்று ஒரே ஏக்கமுடன் உலாவினான். இந்த நிலையில் வேறொரு பெரிய 'ஹோட்டலில்' வேலை கிடைத்தது. அங்கு சம்பளம் சிறிது கூட. ஆதலால் அங்கு சேர்ந்தான். இரண்டரை வருடமும் ஓடிவிட்டது. ஒருவாறு முருகேசனின் கையில் அறுநூறு ரூபாய் வந்து சேர்ந்தது.

யோகத்துக்குத் தந்தி கொடுத்துவிட்டுப் புறப்பட்டான் ஊருக்கு. "இந்தியா எக்ஸ்பிரஸ்" ஓடிக்கொண்டிருந்தது. அதில் முருகேசு உட்கார்ந்திருந்தான். உளமெல்லாம் களிகூர அடிக்கடி எட்டி எட்டிப் பார்த்தான்.

கதையின் ஆரம்பத்திற் கூறியதுபோல வண்டியும் முருகேசுவின் உள்ளமும் ஓடிக்கொண்டிருந்தன. பழைய எண்ணங்கள் அலைமோதின.

விருதுநகர் என்ற சத்தம்! அவனிறங்கவேண்டிய இடம் வந்துவிட்டது. கொண்டுவந்த மூட்டை முடிச்சுடனிறங்கினான். வேகமாக நடந்தான் வீட்டை நோக்கி. தன் வீட்டுக்குப் பக்கத்தே வந்தான். அமைதி நிறைந்து கிடந்தது. உள் நுழைந்தான். சாலையில் ஒரு தொட்டில். அதில் ஒரு பாலன் உறங்கிக் கிடந்தது.

"இது யார் குழந்தை?" முருகேசனின் உள்ள வெடிப்பு இப்படிக் கேட்டது. அக்குழந்தையின் முகத்தில் யோகத்தின் சாயல் தெரிந்தது. உளம் வெருண்டபடி, 'அம்மா, அம்மா' என்றான்: பதிலில்லை. 'யோகம், யோகம்' என்றான்: பதிலில்லை. கதவைத் திறந்தான், அங்கு யோகமிருந்தாள்: ஆனால் உயிரில்லை. அவள் கயிற்றில் தொங்கினாள். அவளிறந்து சில மணிகள்தானிருக்க வேண்டும். மாடிப்படி முருகேசனின் தலையையடித்தது. மயங்கி வீழ்ந்தான். பின்பு எழுந்தான். தொங்கும் யோகத்தைப் பார்த்தான். பதறினான். அழுதான்: கண்ணீர் வற்றுமட்டும் அழுதான். கயிற்றை வெட்டிப் பிணத்தையிறக்கினான். யோகம், யோகம் உனக்காகத்தானே பணத்துடன் வந்தேன்: இக்காட்சியைக் காணவா வந்தேன் என உளம் அரற்றியது. அவன் உளத்தில் சூறாவளி, எரிமலை, துயரக்கடல் யாவுமே சேர்ந்து புரண்டன. யோகத்தின் மடியில் நீண்டதோர் கடதாசி - அது கடிதம். கடிதத்தை விரித்தான். கண்ணீர் ஓடஓட முருகேசன் படித்தான்.

'என் கண்கண்ட தெய்வத்துக்கு அடியாள் வணக்கம்'

என்னவெல்லாமோ சந்தோசக் கற்பனைகள் எண்ணியபடி வருவீர்கள். யான் உங்களை வரவேற்க வேண்டிய நிலையிலில்லை. அதலால் ஒரே வழி இறப்பதுதான். பலவும் எண்ணுவீர்கள். நீங்கள் பிரிந்திருந்த இரண்டரை வருட வாழ்வில் யான் சிரித்தது இல்லை. என் வாழ்க்கைப் பாதையிலே உறுமும் புலிகள், காலைக் கவ்வும் முதலைகள், பாயும் சிங்கம், பதம் பார்க்கும் ஓநாய், கடிக்கும் நாய், நெளியும் பாம்பு, யாவும் வந்து என்னையே துளைத்தன. கண்ணீர் உருவாக்கின. காட்டில் வாழலாம், மனிதர்கள் மத்தியில் பணமில்லாது வாழ்வதுதான் கத்தியில் நடப்பதுபோல.

வாழ எண்ணினேன், விட்டதா மனிதர்குழாம். மானம் பெரிதாக்கி, நேர்மை உரித்தாக்கி, கற்பு உரிமையுடன் வாழவிருந்த என்னை, தவறு என்ற பாதைக்கு இழுத்தன பல. எதிர்ப்பட்டு இழுத்தேன், இழுத்தேன், அல்லது சந்தர்ப்ப சதியா? எதுவோ வீழ்ந்தேன் யான்.

'வீழ்ந்தேன்' என்பதில்தான் என் தூய்மை கறையுற்றது. என் தூய்மையை உங்கள் தாய்மைக்காகத்தான் இழந்தேன். தூய்மையை இழந்ததுமல்லாது வாதமிடுகிறாள் என எண்ணாதீர்கள். கேளுங்கள் என் கண்ணீரை! அது கூறுங் கதையை: என் உயிர் அன்பரே: பணம் இல்லை. பசியிருந்தது. உழைப்பில்லை, பசியிருந்தது. வருவாய் கிடையாது, பசியிருந்தது. பசித்தது என்பதற்காகப் பதறவில்லை. கையை உயர்த்தி உழைப்புக் கேட்டேன். பெரிய வீடுகளில் கூலி வேலை கிடைத்தது. யானும் உங்கள் தாயும் அரை வயிற்றுக்கு உதவியாயமைந்தது. ஏதோ வாழுவதற்காக உண்டு வந்தோம். நீங்கள் வருவீர்கள், எதிர்காலம் நன்றாக வாழுவேன் என்ற நம்பிக்கை கொண்டு வாழ்ந்தேன். இந்நிலையில் உங்கள் தாயார் படுக்கையில் விழுந்தார். அவருக்கு நோய் வந்த காரணம் வறுமைதான். பசிக்கொடுமை காரணமே அவரின்

நோய்க்கு மூலகாரணம். வீட்டிற் கிடந்த யாவையும் விற்று மருந்துக்கு இறைத்தேன். சுகமேயில்லை. அவர் நிலையை எழுதலாம் உங்களுக்கு. ஆனால் விலாசம் தெரியாது. நீங்கள் எழுதிய கடிதம் எதுவும் எனக்கு வரவில்லை. யாவையும் நமது கடன்காரன் வாங்கியிருக்கிறான். பணக்காரனுக்குத் தபால்காரன் மடங்கிவிட்டான். யான் கடிதமெழுதாத காரணம் அதுதான். இப்போதுதான் யாவையும் அறிந்தேன்.

ஒருநாள், 'பணமெங்கே யோகம்' என்றபடி அந்தக் கடன்காரன் கோபாலபிள்ளை வந்தான். நீங்கள் வந்ததும் தருவதாகக் கூறினேன். அப்போது மாமிக்கு ஒரே சன்னி. அதைக்கண்ட அவன் பத்து ரூபாயைத் தந்தான். அந்த நிலையில் மாமியின் பரிதாபத்தைத் தாங்கமாட்டாது கடனாகப் பெற்றேன். அவனின் உள் நினைவை யான் அப்போது உணரவில்லை. பின்பு அடிக்கடி வருவான் அவன். கடனைத் தரவேண்டாம் என்றான் ஒருநாள்.

"ஏன்?" என்றேன்.

'உன்னால் முடியும் கடனையடைக்க' என்றான்.

'எப்படி?" என்றேன்.

என் அழகைத் தன் கடனுக்கு விலை பேசினான். ஏசினேன். அழுதேன்! அவன் சிரித்தான்!!

'யோகம்: நாக்கு வரளுதே' என மாமி கத்தினாள். பால்கூட வாங்கப் பணமில்லை. பழம் வாங்கப் பணம் இல்லை. அவன்தான் தந்தான். பிழையோ சரியோ மாமியாரின் நிலை வாங்கச் செய்தது. யான் யானாகவில்லை அப்போது. மாமியார் மரணவாயிலில் போராடினாள். என் தாய்க்கு முன் இறக்கும்போது நீங்கள் இருந்தீர்கள். யான் உங்கள் தாய்க்கு முன் இருந்தேன்: முருகேசு என்றபடி இறந்தார். தந்தியடிப்பதாக அவன் கூறினான். உங்களையும் பின்னரே அறிந்தேன்.

சிறிது துணையாயிருந்த மாமியும் போய்விட்டாள். தனிமையானேன். அனாதையாகிவிட்டேன். ஒருநாள் இரவு தனியே படுத்திருந்தேன். கோபாலபிள்ளை வந்தான். முன் இருந்த நிலையில் யானில்லைதான். வறுமை வாட்ட பசியின் வேதனை என்னை மாற்றித்தான் விட்டது. மாறியேவிட்டேன். வீழ்ந்துவிட்டேன். தூய்மைகளை அழித்துவிட்டேன். அந்தக்கறையை குழந்தையுருவில் அதோ தொட்டிலிலிருக்கிறது. அக்குழந்தையைக் கொல்ல எண்ணினேன். மனம் கேட்கவில்லை. இந்த நிலையில் எந்த முகத்துடன் உங்களைக் காண்பது. தினமும் இறக்கும் நாளை எதிர்பார்த்திருந்தேன். நேற்று உங்கள் தந்தி வந்தது. காலம் வந்துவிட்டதோ, என்னமோ இந்தத் துரோகி இறக்கிறாள். அன்புடன் என்னைக் கைப்பிடித்தீர்கள். துரோக மிழைத்தேன். துயரக்காரியாகிவிட்டேன். நான் என்ன செய்ய. எனக்கு எதுவுமே தெரியாது. ஏன் பிறந்தேன் என்றே தெரியவில்லை. இதோ

போகிறேன். அந்த உலகிலாவது அமைதி கிட்டுமா?

தங்களுக்குத் துரோகமிழைத்த யோகம்.

முருகேசனின் கன்னத்தில் கண்ணீர் காய்ந்து கிடந்தது. அவனது வாழ்க்கையின் மருட்சி போல் பின் அவன் அழவில்லை. யோகத்தின் பிணத்தைக்கூட அவன் பார்க்க விரும்பவில்லை. எழுந்தான்: நடந்தான்: நடந்து கொண்டேயிருந்தான்.

கோயில் மணியடித்த அந்த ஒலியை நோக்கிப் போய்க் கொண்டேயிருந் தான். உயிர் ஏன் - வாழ்வு ஏன் - எல்லாமேன் - உணவேன் - என்னன்பேன் - பிணி ஏன் - என்றெல்லாம் என அவன் உள்ளம் வினாத் தீட்டியது போலும். துயரத்தின் ஓரத்துக்குப் போய்விட்டான். கையில் ஓடு, அரையிலே சிறுதுணி, கோயிலே துணை. அந்நிலை முருகேசனுக்கு. அடியாரைக் கண்டாலும் ஓடப் போகிறாய் - மனிதர்கள் விடமாட்டார்கள் என்பது எல்லாம் அவனது அனுபவமாகிவிட்டது. சுழலுமுலகில் சிறு சுழல் அந்த முருகேசு.

(ஈழகேசரி - 1953 - 09 - 13)

# கழுத்தில் மாங்கல்யம்

யாழ்ப்பாணம் ஸ்டேசனிலிருந்து வண்டி புறப்பட ஆறு நிமிடங்களிருந்தன. பிரயாணச் சீட்டைப் பெறக் கையைக் 'கவுண்டரில்' வைத்தேன். அப்போது 'தயவுசெய்து எனக்கும் ஒரு பிரயாணச் சீட்டு எடுத்துத் தருகிறீர்களா?' என்றகுரல் கேட்டது.

திரும்பினேன். வளையலணிந்த கரம் ஒன்று. கையிலிருந்த பையிலிருந்து பத்து ரூபாவை எடுத்து நீட்டியது.

"எங்கே போகிறீர்கள்?" நான் கேட்டேன்.

'கோட்டைக்கு'

'எக்கோட்டையைப் பிடிக்கவோ அல்லது தூளாக்கவோ' என் மனம் குறும்பாக இப்படி எண்ணியது. வெளியாகக் கூறியிருப்பேன். ஆனால் பழக்கமற்ற ஒரு பெண் முன் கேலியா? என்ற நினைப்பில் சும்மா இருந்துவிட்டேன்.

மணி ஒலித்தது. விசை வண்டி நகரவும் ஆரம்பித்துவிட்டது. அவள் ஓடினாள் ...! சேலை கொடியாகப் பறந்தது: அவசரம் வேகமிட்டது! பாவம், அந்நேரம் அவள் முகபாவம் ...!

யான் ஏறிவிட்டேன். அவள் பெண். அவசரமிருந்த அளவுக்கு அவளால் செயல்பட முடியவில்லை ...

வண்டி சிறிது வேகமாக நகரத் தொடங்கியது.

அப்பொழுது ... அங்கே ...!

"இதைப் பிடியுங்கள் தயவுசெய்து" என்றாள்.

அது ஒரு 'சூட்கேஸ்' வாங்கினேன். அத்துடன் அவள் கையைப் பிடித்து அவளை வண்டியில் ஏற்றியும் விட்டேன். 'படார்' அவள் கரத்து வளையல் ஒன்று என் கைப்பிடியில் அகப்பட்டு முறிந்து வீழ்ந்தது.

வண்டி வேகமாக ஓடியது. மூன்று மணிநேரம் கழிந்தது.

இம்மூன்று மணிநேரத்தில் என் உள்ளமும் பம்பரமாகச் சுழன்று வேறு உலகஞ் சென்றது. 'புது உலகமே' என்னை விட்டுப் போகாதே! என் மனக்குரல் கதறியது. புத்துணர்ச்சி, பூரிப்பு ... இது ஏன்? என் முன் ஒரு இளைஞன் இருந்தால் இப்படி ஏற்படுமா? அந்த அவள், என் கரம் பற்றி வண்டியிலேறிய அவளிருப்பதால் மட்டுமே ஏற்படக்கூடிய உணர்ச்சிச் சுழலா அல்லது இயற்கை ஓட்டமா இது?

'மாகோ!'

விசை வண்டி நின்றது. கைப்பையைக் கீழே வைத்துவிட்டு, உடலை நெளித்து, வளைத்து அலுப்பைப் போக்கிக் கொண்டாள். அப்போது என் கண் வழி புகுந்து கருத்தில் பதிந்த அந்த 'அழகின் அசைவுகள்' இன்பத்தை உதிர்த்துக் கொட்டின.

மெல்ல என் பக்கம் முகத்தைத் திருப்பினாள். எதிர்பாராது மின்னிய மின்னல் பார்வையைப் பறித்தெடுத்து ஓடி மறைந்த அடுத்த வினாடியில் என்னென்ன உணர்ச்சிகள் என் மனதில் ஏற்பட்டன! வார்த்தையால் கோர்ப்பது கடினம்.

இதுவரை வெறுமனே அவளைப் பார்த்துக் கொண்டிருந்த எனக்கு அவளிடம் பேச ஆவல் பிறந்தது.

'உங்கள் பெயர்...?'

அவளுடன் பேசுவதில் ஒரு இடைஞ்சல்: என்றாலும் அதில் ஒரு இனிமை!

பக்கமெல்லாம் நித்திரை மயம்

'பெயரா...? விநோதினி'

'விநோதினியா? அழகான பெயர்!'

'தெய்வானைப்பிள்ளை என்று கூறியிருந்தாலும் இப்படித்தானே கூற வேண்டும்!'

'ஊர்'

'யாழ்ப்பாண நகரம்'

'எதற்காகக் கொழும்பு செல்கிறீர்கள்?'

'இப்பொழுது அங்கே தான் வசிக்கிறேன்.' வண்டி நின்றது. பொல்காவலை வந்து விட்டது.

பேசினோம்! பேசினோம்! ஊர், பேர், தொழில் எல்லாவற்றைப்பற்றியும் பேசினோம்.

கள்ளங் கபடில்லாது, தனிமையிலே தயக்கமேதுமின்றி, அழகுப்பதுமை அமைதியுடன் பிரயாணஞ் செய்கின்றதே. ஆகா, தமிழ் மகள் தன்மையே தனி நிகரானதுதான் என்று எண்ணிப் பெருமிதமடைந்தேன்.

அவளுடன் எதையெதையோ பேச மனந் துடிக்கிறதே. ஆனால் அவளுடன் கலந்துரையாடும் போது அவைகளைக் கூறவியலவில்லை.யே! ஆமாம்! பெண்மையின் தன்னேரில்லாத்தன்மை ஆண்களின் வீண் ஆபாச எண்ணங்களையுந் திருத்துமோ!

விநோதினி விநோதமான பெண்தான். பெட்டியைத் திறந்தாள். கண்ணாடியைப் பார்த்துக் கேசத்தை ஒழுங்கு செய்து கொண்டாள். பவுடரைச்

சிறிது பூசினாள்...!

மருதானை கழிந்து வண்டி ஓடிக்கொண்டிருந்தது. இன்னும் கணநேரத்தில் 'கோட்டை' ஸ்தானம் வந்துவிடும். ஆனால் என் ஆகாயக் கோட்டையின் கதி....?

அதோ 'கோட்டை' பெட்டியுள்ளிருந்ததை எடுத்துக் கழுத்திலணிந்தாள் - அது தாலிக்கொடி.

ஆச்சரியமுடன் பார்த்தேன். தாலிக்கொடியுடன் அவள் வதனம் பெருமை கொண்டு திகழ்ந்தது. அவள் அகம் பூரித்தோ என்னவோ முகம் மலர்ந்தது!

வண்டி கோட்டையை அடைந்து விட்டது. அவளுக்காக அங்கே காத்திருந்தவன் அவளிடமிருந்து பெட்டியை வாங்கினான். சேமம் கேட்டான். அவள் விழியாலும் மொழியாலும் எல்லாம் பேசினாள். கணவனோடு பேசுவதற்கு என்ன கட்டுப்பாடா இருக்கிறது!

மஞ்சள் கயிற்றின் மகிமை தான் என்னே? எந்த நேரமும் கழுத்தைவிட்டு அகலாதிருந்து அணிபவளைச் சுமங்கலியாகக் காட்டிக் கொண்டிருக்கிறது. தங்கத்தாலி இதைச் செய்கிறதா என்ன? தூங்கும் நேரத்தில் திருடர் பயம் ஏற்படும் வேளைகளிலெல்லாம் எங்கோ போய் ஒழிந்து கொள்கிறதே! இதனால் எத்தனை ஆண்களின் புத்தி பேதலித்து. விபரீதத்தில் முடிந்து விடுகிறது. இருபதாம் நூற்றாண்டு நாகரிகம் நாசமாகப் போக!

ஒரு முறை காறி உமிழ்ந்தேன். அந்தச் சனியோடு என் ஆசைக் கிருமியும் பறந்தது.

(சுதந்திரன் 1957-03-10)

# கௌதமி

2000 வருடங்களுக்கு முன்பு....

மூன்றடுக்கு மாளிகை. மங்கும் வெயிலுக்கு அற்புத ஓவியம் போல மின்னலிட்டுக் கம்பீரமுடன் உலகைப் பார்த்தபடியிருந்த அம்மாளிகை வாழ்வு ஓர் இன்ப வீடு. துயரம் என்பது அணுகமுடியாத இடம் யான். சொகுசு அதிகாரம், எதையும் செய்யும் ஆற்றல் இங்கே உண்டு. சிர்ப்புண்டு, கேளிக்கை உண்டு, சாகசமுண்டு, சல்லாபம் உண்டு, இன்பத்தை நீராக்கிப் பருகுவோம். அதிலே நீச்சலடிப்போம். ஆனால் மனம் துயரத்தைக் கண்டதுமில்லை, கேட்டதுமில்லை. ஏழ்மை எமது எதிரி மட்டுமல்ல, காணவும் விடோம். கண்டால் எம் கண் பார்வை காததூரம் துரத்திவிடும் எனப்பேசாமற் பேசியது.

அம்மாளிகையில் .....

இரத்தினக் கம்பளங்கள், அழகு வர்ண ஓவியக் கலை சிற்பங்கள். கருங்காலி மேசைகள், கதிரைகள், கண்ணாடி பீரோக்கள், தொடவே கூசும் பணத்தின் பவிசுநிறை அழகு சாதனங்கள், அழகு காட்டியபடி இருந்தன. பணமெனும் பண்டிதன் அழகெனும் இலக்கியத்தை மாளிகை எனும் பெரிய காவியத்தைக் கலையாக்கியிருந்தான்.

அங்கே....

அம்மாளிகையின் சொந்தக்காரன் வாழ்ந்தான். அவன் பெயர் ஆலாலசுந்தரன். சிவபக்தி அளவுக்கு மீறியுண்டு என்பது மட்டுமல்ல: அடிக்கடி 'சிவா சிவா' எனக் கூறியே எதையும் செய்பவன். மாளிகையிலே அந்தப் பணக்காரனுடன் 'மனைவி' என்ற பெயரில் ஒருத்தி வாழ்ந்தாள். ஆனால் கால் பிடிக்க, கைபிடிக்க, சாமரம் வீச, பானம் பருகப் பல பாவையர்களைக் காணலாம். பணம் தந்த நிலை அந்தப் பணக்காரனை 'பவிசு' காட்டியது. 'மயக்கம்' காட்டியது. மதுவிலும் மங்கையிலும் மயங்கினான். மயக்கத்தைவிட அவனாலியலவில்லை. முடியவில்லை. நூறு ஆண்டுகள் வாழ்ந்தாலும் அவனிடமிருக்கும் செல்வத்தில் ஓர் ஆயிரத்தில் ஒரு பங்குகூடச் செலவுபடாது. அத்தனை அதிக பணம் அவனை நாடியது. அந்த ஊரில் அரசனிலும் பார்க்கச் செல்வன். அரசன் கூட அவனிலடக்கமெனில் பொருந்தும் வார்த்தையே.

மாளிகையிலோர் இரகசியச் சுரங்கம். அங்கே மூடை பல அடுக்கப்பட்டிருந்தன. அவை அரிசியல்ல. தானிய வகைகள் அல்ல. அத்தனையும் தங்கக் கட்டிகள்.

வாழ்வின் ஒவ்வொரு செக்கனையும் அணுஅணுவாக இன்பத்துக்காகச் செலவு செய்வதே ஆலாலசுந்தரனின் தொழில். தொந்தியின் பூரிப்பு உணவின்

சத்தையும், கண்களின் செம்மை மதுவின் பருகலையும், முகத்தின் வீக்கம் இன்ப இரவுகள் விழிப்புடன் கழிந்தன என்பதையும் சினிமாபோற் காட்டும். அவனிடம் சிந்தனைக்கிடமில்லை. சிரிப்பிலே தான் ஒவ்வொரு அணு நேரமும் கழிகிறதே. அம்மாளிகையும் அங்குள்ள மங்கையரும் மதுவும் அவன் உலகம். வெளியே ஓர் உலகம் உண்டு என்பதையே அவனறியான். அறிய நேரமில்லை.

ஒருநாள்.

சுரங்கத்தைத் திறந்தான். தங்கக் கட்டிகள் கட்டிய மூட்டைகளின் அடுக்கைப் பார்த்தான். என்னாச்சரியம்.... தங்கக் கட்டிகள் ஒன்றுமே கிடையாது. அம்மூட்டைகளில் சாம்பல்.... ஒரே சாம்பல் மட்டும் தான் கட்டியபடியிருந்தது.

தலையில் கைவைத்தான். துன்பமென்ற தன்மை அன்றுதான் அவன் மனதில்குடிவந்தது. கண்கள் நீரை நிறைத்தன.

சாய்வு நாற்காலியில் சாய்ந்தபடி, மனதிலே துன்பப் புயல் வீச உட்கார்ந்திருந்தான் ஆலாலசுந்தரன்.

ஒட்டிய உயிரும், கூனல் முதுகும், அரையிலே கந்தலும், முகத்திலே துயரச் சாயலும், கஞ்சிக்கும் வழியற்று பசி பசி என பகலெல்லாம் சுற்றிவிட்டுப் பலன் காணாது கட்டாந்தரைப் பாயாக ஆகாயம் கூரையாக மழையும் வெயிலும் விருந்தாளியாக - இது ஏழ்மையின் வீடும், வாழ்வும் - என்பதற்கு அத்தாட்சி காட்டுவது போல ஒரு கூட்டம். மாளிகையைச் சூழ உள்ளதே. அந்த நல்லவன் வாழ என் தங்கக் கட்டிகள் செலவாகியிருந்தால்... தர்மம் தலைகாக்குமே. காத்திருக்குமே. கண்கெட்ட பிறகு சூரிய நமஸ்காரம். மரணம் சம்பவித்த பிறகு மருந்து ஊட்டல். பயனற்ற பிதற்றல்கள். யான் மட்டும் வாழ எண்ணினேன். ஏமாந்தேன்.

அன்று அவளிட்ட சாபம் தானே. ஆம்! ஏழையின் கண்ணீர் கூரிய வாள் மட்டுமல்ல. எதையும் செய்யும் ஆற்றல் கொண்டதுதான்.

'கீஸா கௌதமி' அவளது பெயரிதுதான். பரம ஏழை. தனிமையின் ஏக பிரதிநிதி. ஏழ்மை அவளை வதக்கியது. வாட்டியது. சக்கையாக்கியது. ஆனால் இளமையும் பருவமும் சேர்ந்த ஒரு நல்ல ரோஜா. அவள் தந்தையும் தாயும் அவளை அநாதையாக்கிவிட்டு 'வான் வீடு' போய்விட்டனர். அதனால் அவள் உலகைப் பார்த்து வேலை கேட்டாள். கிடைக்கவில்லை. ஆலாலசுந்தனை நாடி வந்தாள். நயந்து, இரந்து. 'ஐயா' என்றாள்.

ஒரு நீண்ட கட்டிலில் படுத்திருந்தபடி, யாழ் ஒலியை ஒரு மங்கை இன்னிசை செய்ய காலை இரு மங்கையர் வருடல் புரிய, தலையை ஒரு தையல் மடியிலேற்றிச் சாமரம் வீச, பக்கத்தேயிருந்து பானத்தை - மதுவை - பாவையொருத்தி பருக்கியபடியிருக்க, ஆலாலசுந்தரன் ஆனந்த சயனத்தில் உட்கார்ந்திருக்கும் போதுதான் கீஸா கௌதமி 'ஐயா' என்றாள்.

'யாரது?' என ஆலாலசுந்தரன் கேட்ட ஒலியில் அதிகாரம் சப்தித்தது.

கீஸா கௌதமியின் உடல் ஒருமுறை நடுங்கியது. மனம் திக்கென அடித்தது.

'ஐயா யான் ஓர் அநாதை' என்றாள் கௌதமி.

'அநாதையா அநாதை என்றால் அர்த்தம், விளங்கச் சொல்லடி' என்றான் அவன்.

'பசிதானையா எனதுதோழன். சாப்பிட்டு இரண்டு நாட்கள். ஏதாவது கூலிவேலையாவது தந்தால் செய்து தருவேன். தாங்கள் தான் இந்தப் பரதேசியைக் காப்பாற்ற வேண்டும்' என இரக்க ஒலியெழக் கௌதமி கேட்டாள்.

ஆலாலசுந்தரன் ஒருமுறை தலையை நிமிர்த்திப் பார்த்தான். போதையும் அவன் தன்மையும் அவன் கண்களிலே நிழலாடின. அந்நிழலிலே கௌதமியின் பால் வதன ஒளி அழகு காட்டியது. அவன் ரசனை, வேட்கையுடன் அவளுடலைப் பார்த்தது. எழுந்து துடிப்புடன் உட்கார்ந்தான்.

'உன் பெயர்' என்றான்.

'கீஸா கௌதமி'

'வயசு'

'பதினாறு'

வயசு பதினாறு. அழகி. இளமையின் வண்ண வடிவு. நல்லது. அவனது மன அரங்க நிகழ்ச்சியிது.

'இங்கே வா'

சமீபமாகப் போனாள் கௌதமி.

'உட்கார்'

தயங்கியபடி நின்றாள் கௌதமி.

பரவாயில்லை இங்கே உட்கார் எனத் தன் கட்டிலைக் காட்டினான் ஆலாலசுந்தரன் ஆவலுடன்.

திகைப்புடன் கல்போலக் கௌதமி நின்று கொண்டிருந்தாள்.

'இன்றிலிருந்து நீ அநாதையல்ல. என் ஆசைப் பொருள். இனி நீ ஏழையல்ல. என் இன்ப ஏந்திழை.. நீ பசியுடன் உலவவேண்டியதில்லை. என் பசிக்கு ஓர் இன்ப உணவு. கூலி வேலை உன் அழகுக்கு யான் தருவேனா. தாலியற்ற என் ஆனந்த மனைவிகளில் நீயும் ஒருத்தி. வா பெண்ணே வா.... வார்த்தைகளை நாடக பாணியில் கூறியபடி பார்த்தான்.

கௌதமி திகைத்தாள். உடலெல்லாம் பல ஆயிரம் ஊசி சேர்ந்து குத்திய வலி. உளமெல்லாம் சுற்றி வீசும் சூறாவளியின் ஒலி. அறிவெல்லாம் அலையெறியும் ஆழ் சமுத்திரச் 'சுழி....'

நிமிர்ந்தாள். சிரித்தாள் அது கோபநகை. பக்கத்தே பல பாவையர். அவர்களில் யானும் ஒருத்தி. பெரிய பசிகாரன். பணம் செய்யும் பவிசு. ஆகாகா. என்ன துணிச்சல். என்ன அக்கிரமம். என்ன வேகம்.

மதுரையை எரித்த கண்ணகி ஒரு பெண். எனது இனம் தானே. கற்பைப் பொற்புடன் காப்பாற்றினாள். அதனாலுண்டான அநீதி மறைவு - நீதி உயர்வு. கௌதமியின் உளம் சிந்தனையை இப்படிப் பின்னியது.

கௌதமி ஒரு 'கண்ணகி' ஆனாள்.

'ஐயா' என இரந்தேன். அதற்கு அணையவா என்கின்ற பதரே. பாவையர் மனம் மண்கட்டியல்ல. உதிர. அது வைரித்த உருக்கு இரும்பு. கற்புநெறி பிறழ முடியாதவள் தான் பெண். அந்த இனம் யான். பசியால் வாடி வதங்கி, மரணமடைந்தாலும் மாசுடன் வாழாள் 'நல்லவள்'. தன் உடல் பெரிதல்ல மானமே பெரிதெனக் கௌதமி பார்த்த பார்வை பேசியது. 'உணரும் காலம் வெகு தூரத்தில் இல்லை' அக்கிரமம் அனந்த காலம் வாழ்வதில்லை. துரோகம் நிலைத்து நிற்க வலியற்றது. இன்று உன்னால் உணர முடியாது. உன் பணம் மறைப்பிடுகிறது. ஆனால், உன் வீழ்ச்சி அதன் பாதாள வீழ்ச்சிதான். மனித உடல் போர்த்த மிருகமே உணர்வாய் அண்மையில்' எனக் கௌதமி படபடப்புடன் பேசினாள். படாரெனத் திரும்பிப் போனாள். போய்விட்டாள்.

ஆகாகா எனச் சிரித்தான் அவன். அவனது போதை நேரமாதலால் கௌதமி ஏசியது கூட ஏதோ ஒரு ரசனையாகவிருந்ததே ஒழிய, ஆத்திரம் தரவில்லை.

கௌதமியின் சாபம் தானா? பசிக்கு ஒரு கவளம் உணவு கொடாது என் தன்மையை அல்லவா காட்டினேன். ஆம். அவளிட்ட சாபமேதான். என்று எண்ணக்கோவை சுழல ஆலாலசுந்தரன் உட்கார்ந்திருந்தான்.

ஒருகுச்சு வீடு. ஊரின் ஒதுக்குப் புறமாகவிருந்த அவ்வீட்டைத் தட்டினான் 'கமலவண்ணன்' அக்குடிசை கௌதமியினுடையதுதான்.

'யார்' என்றாள் கௌதமி.

'யாரா' என்றான் கமலவண்ணன்.

ஓலையால் செய்யப்பட்டிருந்த குடிசைக் கதவைத் திறந்தாள் கௌதமி. அப்போது குடிசை முன்பு உள்ள சந்திரனைக் கண்டதால் ஆகாயச் சந்திரன் மேகச் சேலையால் போர்த்துக் கொண்டான்.

'பார்த்தாயா கௌதமி' என்றான் கமலவண்ணன்.

'எதைக் கூறுகிறீர்கள்'

'அங்கே பாரேன். ஆகாயத்தில் ஒரு கௌதமி.

'ஆகாயத்திலா'

'உன் முகவழகின் பிம்பம் தானே ஆகாய மதி'

'போங்கள்' என்றாள் கௌதமி. அதில் அன்பும் ஆவலும் லஜ்ஜையும் கிறுக்கும் பின்னிக்கிடந்தன.

கௌதமியின் பின்னலைப் பிடித்துத் தன் முகத்துடன் ஒற்றியபடி, கமலவண்ணனும் கௌதமியும் குடிசையுள் புகுந்து அங்கே கிடந்த ஒரு பாயின் மேலே உட்கார்ந்தனர்.

குடிசையின் இருளை ஓட்ட முயன்ற குப்பி விளக்கு கறையான் துளைத்த அழகு செய்த ஓட்டைக்கூரை கமலவண்ணன் கண்களில் பட்டன. வெகுவேகமாகக் கமலவண்ணன் அகத்திலே தன் சுகத்தின் மேன்மை தோற்றியது.

அவனகத்திலே....

மாளிகை - குடிசை, செல்வம் - ஏழ்மை, பசி - சீரணமில்லலாமை. இன்பம் - துன்பம், சுகம் - துக்கம் என்ற எதிர் எதிர்த் தன்மைகளையிட்டு விடுகதை பின்னியது. அதை மாற்ற வழி. எண்ணிக்கொண்டிருந்தான் கமலவண்ணன். கமலவண்ணனால் முடியும். முடியும். ஆனால் தந்தை சம்மதிப்பாரா.

'ஓகோ, எந்தக் கோட்டையைப் பிடிக்கத் திட்டமிடுகிறீர்கள்' எனச் சிந்தனையைக்குழப்பினாள் கௌதமி.

எமது மணம் பற்றி எண்ணிக்கொண்டிருந்தேன் கௌதமி. இன்னும் உன்னை இக்குடிசையிலேகுந்தியிருக்க விடுவதா. இன்றே தந்தையிடம் கேட்டு விடுகிறேன். ஒரு முடிபு...' என்றான் கமலவண்ணன்.

'உங்கள் தந்தை இந்தப் பராரியை ஏற்க மறுத்தால்...'

'யானும் உன் இனம் ஆகிவிடுவேன் கௌதமி...'

கௌதமியின் உள்ளத்திலே துருவப் பகுதிப் பனிக்கட்டியை இட்டது போலக்குளிர்ச்சி.

கமலவண்ணன் ஆலாலசுந்தரர் பெற்றெடுத்த செல்வப் புதல்வன். ஆனால் குப்பையிலேகுன்றிமணி போல. பெரிய மாளிகையில் பிறந்தாலும் மனிதனாக இருந்தான் கமலவண்ணன். தந்தையின் குணங்களிலே அணுக்கூட இல்லாத தூய்மையுடன் திகழ்ந்தது ஆச்சரியம்தான். புத்திரனாயிருந்து தந்தையைத் திருத்த முடியாது என்பதாலோ கமலவண்ணன் தன்பாடும் தானுமாகவிருந்தான். அறிவுக்குரிய புத்தகங்களுடன் தன் காலத்தை நன்றாகவும் அமைதியாகவும், மகிழ்வாகவும் கழித்து வந்தான்.

மாலையொன்றில் கடற்கரையிலமர்ந்து ஆகாயச் செந்நிற அழகுக் கோலத்தை பார்த்தபடியிருந்த அவனைக் கௌதமி வருகை திசைமாற்றியது.

ஏழ்மையும் இளமையும் அழகு செய்து கிடக்கும் பருவ எழிலைக் கண்டான் கமலவண்ணன். கௌதமியும் கண்டாள். பார்வைகள் ஸ்பரிசித்தன. உள்ளங்கள் பிணைப்புற்று உறவாடின. காதல் உயிருடன் உறவாட ஆரம்பித்தது. மாளிகையையும் குடிசையையும் காதற் பாசம் ஒன்றுசேர்த்தது. ஆனால் ஆலாலசுந்தரர் சம்மதிப்பாரா?

தங்கக் கட்டிகள் சாம்பல் ஆக மாறியதால் மனமெல்லாம் அக்கினிச் சுவாலையாக ஆலாலசுந்தரர் உட்கார்ந்திருந்தார். அவரது அளவிலே அன்றுதான் துயரத்தை உள்ளத்தில் கீறிக்கிடந்தது. பெருமூச்சுக்கள் ஒன்றையொன்று துரத்தியபடி ஓட்டப் பந்தயம் செய்துகொண்டிருந்தன.

அந்நேரம் ஆலாலசுந்தரரின் அன்பு மகன், கமலவண்ணன் உள் நுழைந்தான். தந்தையின் வதன வாட்டத்தைக் கண்டான். துயரடைந்தான். கேட்டான்.

ஆலாலசுந்தரர் கூறினார் துயரத்தை. சிந்தனை ரேகை முகமெல்லாம் கீறலிட உட்கார்ந்துகொண்டிருந்த கமலவண்ணன் தந்தையைப் பார்த்துப் பேசினான்.

'அப்பா, தங்கம் சாம்பலாகிவிட்ட காரணம் ஏதோ ஒரு சாபம்தான். யாருக்கோ நம் செய்த துரோகம் தான் இப்படி நடந்துள்ளது. முற்பகல் செய்யின் பிற்பகல் விளைவு என்பது பொய்யாகுமோ. மெலியாரை வலியார் வருத்தின் வலியாரைத் தெய்வம் வருத்தும் என்பது அர்த்தமுள்ள வார்த்தை தானே. என்னவாயிருக்குமென எண்ணிப் பாருங்கள். அன்று நீங்கள் கீஸா கௌதமியை.... எனப் பேசி முடிக்கவில்லை கமலவண்ணன்.

'கமலம். நீ கூறுவதிலும் உண்மையுண்டுதான். வயிற்றுப் பசியுடன் இரந்து வேலை கேட்ட உத்தமியை யான் பெருமையுடன் நடத்தவில்லைதான். அதற்கு இப்போது என்ன செய்வது' என்றார் ஆலாலசுந்தரர்.

'மன்னிப்புக் கேளுங்கள்'

'கேட்டால் சாம்பல் தங்கக் கட்டிகள் ஆகுமா'

'ஆகலாம்'

கௌதமியை மரியாதையுடன் வரவேற்றார் ஆலாலசுந்தரர். அன்றே சாம்பல் மூட்டைகள் தங்கக் கட்டிகளாகின. அதனால் கௌதமியின் பெருமை இன்னும் மெருகு பெற்றது.

கௌதமிக்குச் சன்மானமாகக் கமலவண்ணனின் காதலை நிறைவேற்றிச் செய்து தன் மருமகளாக்கியும் விட்டார் ஆலாலசுந்தரர்.

பங்களாவிலே பழைய மதுக் கேளிக்கைகள். மங்கையர் மானப் பறிப்புக்கள் இப்போதில்லை. அது நாட்டின் முக்கிய முதுகெலும்பாக மிளிர்ந்தது. ஏழைகளுக்கு ஆறுதல் தரும் ஒப்பற்ற வீடாகியது. கௌதமி

அப்பங்களாவில் கால்வைத்த அன்றே சாம்பல் தங்கக் கட்டியாகியது. அதுபோலப் படாடோபம். அதிகார மமதை சாம்பலாயின.

ஆலாலசுந்தரர் அன்பு உள்ளங்கொண்ட உத்தமராக நடமாடினார். நாடு அவரை மதித்தது. பெருமைப்படுத்தியது.

திகதித் தாள்கள் சில உதிர்ந்தன. மேல்மாடியிலேயுள்ள பக்கச்சுவரைப் படித்தபடி கௌதமி நின்றுகொண்டிருந்தாள்.

ஏழ்மையிலே சூழ்ந்து, துயரம் ஆழ்ந்து, வேதனையில் வாழ்ந்து கொண்டிருந்த வாழ்க்கையும் பின்பு பங்களாவில் மகிழ்வுடன் தன் உயிர்ச்சிலை கமலவண்ணன் பக்கத்திலே உறவாடி உளம் மகிழ வாழும் வாழ்க்கையும் கௌதமியின் உள்ளத்திலே ஓவியமாகிக்கொண்டிருந்தன.

அப்போது கமலவண்ணன் கௌதமியின் பின்புறமாக வந்து அவளது கண்களைப் பொத்தினான்.

உளம் தொட்ட கமலவண்ணன் தானே உடல் தொட முடியும். அறிந்த பழகிய கரங்கள் தானே.

மௌனமாகவிருந்தாள் கௌதமி.

செல்லாமகக் கன்னத்தில் தட்டினான். அந்தத் தட்டிலிருந்த மென்மை அன்புடன் உளத்தையும் தட்டியது.

திரும்பினாள் கௌதமி. பின்பு அவன் செய்யும் ஆனந்தம். வாழ்வின் பிடிப்பு அங்கே உறவாடின.

'கௌதமி, என்ன கடுமையான எண்ணச்சுழல் சூழ நின்றுகொண்டிருந்தாய்'

'எண்ணச் சுழலா என் வாழ்வு சுழியிட்டது'

'விளங்கக் கூறேன்'

'ஏழ்மையும் செல்வமும் காதல் என்னும் அமுதத்தால் சேர்ந்தன. அந்த எண்ணம்தான் என் உள்ளத்திலே சுழியிட்டது.

'அதுமட்டுமல்ல கௌதமி, தந்திரமும் எமது காதலை வாழச் செய்தது'

'தந்திமா'

'நீயறியமாட்டாய். உனக்கே தெரியாது. கேள். இருந்தால் போல் அப்பாவின் செல்வத்தின் அஸ்திவாரமாகச் சுரங்கத்திலேயுள்ள தங்கக் கட்டிகள் சாம்பலாக மாறினவே. பின்ப உன் வருகை தங்கக் கட்டியாகியதே. யாவும் என் தந்திரமே. இரவோடு இரவாகத் தங்கக் கட்டிகளை அப்புறப்படுத்திவிட்டு அங்கே சாம்பல் மூட்டைகளை அடுக்கினேன். பின்பு உன் வருகையின்போது திரும்பவும் தங்கக் கட்டிகளை அங்கே சேர்த்தேன். அதனால்தானே என் தங்கம் நீ என் மார்பு அணியாக முடிந்தது' எனக் கமலவண்ணன் கூறினான்.

'அன்பு சேர்ந்து உறவாட முடிந்ததற்கு அந்தத் தந்திரம் வாழ்க. வாழ்க' கௌதமியின் வாய் கூறவில்லை. மார்பு பூரித்துத் தாழ்ந்த தன்மை கூறியது.

கௌதமியும் கமலவண்ணனும் வாழ்வை அன்பு என்ற உயர் பாதை வழிச் செலுத்தி இன்பம் என்ற மலர் மணத்தை ருசித்துக் கிடந்தனர். அன்பின் மறுபதிப்பு. இரத்தப்படைப்பு.குழந்தை பிறந்தது.

'பத்மசேகரன்' குழந்தைக்குக் கொடுத்த நாமம். கமலவண்ணன், கௌதமி, பத்மசேகரன் மூவரும் முறுவலுடன் வாழ்வின் தன்மை மட்டுமே மிளிர வாழ்ந்தனர்.

அன்பினுச்சியில் துயரம் சேர்ந்தால் மனிதன் பொறுமையிழக்கிறான். லைலாவுக்காக கயஸ் பைத்தியமானதன் காரணம் யாது. காதலுச்சியின் பிரிவு வேதனை. எந்த விடயமும் உச்சிவரை சென்றால் உச்சி மகிழ்வுதான். தவறினால் அதள பாதாள வீழ்ச்சிதான்.

அதுபோல...

இதய அன்புப் பூரிப்புடன் பத்மசேகரனின் புன்சிரிப்பில் புதுவாழ்வு மலர வாழ்ந்துகொண்டிருந்த தம்பதிகள் தளர நேர்ந்தது. வேதனையின் சுழியில் சிக்கிப் புரள நேர்ந்தது.

பத்மசேகரன் மரணமானான்.

அன்றிலிருந்து கமலவண்ணன் படுத்த படுக்கையானான். கௌதமி நடைப்பிணமானாள்.

குழந்தையைத் தூக்கியபடி வீடு வீடாகப் போனாள். மரணத்தை மாற்றும் மருந்து உண்டா.குழந்தை இறந்ததால் கௌதமியின் மனம் பேதலித்து விட்டது என மனித மனங்கள் இரங்கின.குழந்தையைத் தோளில் போட்டபடி பலரயும் நாடினாள் கௌதமி. தன் குழந்தை உயிர்பெற வேண்டும் என்ற கடைசி ஆசைதான் கௌதமியை அலையச் செய்தது.

'ஒரேயொரு வைத்தியனால்தான் குழந்தையை உயிர்ப்பிக்க இயலும்' என்றான் ஒருவன். 'யார்' என ஆவலுடன் விசாரித்தாள் கௌதமி.

'கௌதம புத்தர்' என்றான் அவன். புத்தரை நாடி வேகநடை போட்டாள் கௌதமி.

காடுபல சுற்றி இயற்கை ஆசிரியன் போதனையில் போதம் கண்டு ஞானம் எனும் பேரறிவுடன் புத்தன் அரச மர நிழல் ஒன்றில் உட்கார்ந்திருந்தான். தோளிலே இறந்தகுழந்தையுடன் கௌதமி கௌதமன் முன் வந்து நின்றாள்.

'பெண்ணே என்ன வேண்டும்' என்றார் புத்தர்.

'ஐயா இவன் என் ஒரே புத்திரன். பத்மசேகரன். மரணமாகிவிட்டான்.

எப்படியும் உயிர் பெற அருள் செய்யுங்கள்' என்றாள் தாழ்மையுடன் கௌதமி.

புத்தர் செய்த முறுவலில் உண்மை கட்டியமிட்டது. இயற்கையின் நீதி ஒளி செய்தது. வாழ்வின் மையம் தளிர்விட்டது.

புத்தர் மௌனத்தைக் கலைத்தாள் கௌதமி.

'உங்களால் முடியாவிட்டால் யாரால் முடியும்' என்றாள் கௌதமி.

முடியும், முடியாது இரண்டு வார்த்தைகளிலுள்ள மனித அர்த்தம் புத்தர் மனதில் ஊஞ்சலாடின.

'பெண்ணே என் மருந்துக்கு ஒரு பிடி கடுகு வேண்டுமே'

'இதோ பெற்று வருகிறேன் ஐயா' எனக் கௌதமி வேகமுடன் பேசினாள். எதிலே இயலும் என்பது கட்டியமிட்டது.

கடுகு பெற்றுவரக் கௌதமி திரும்பினாள். புத்தர் பேசினார்.

'பெண்ணே அந்த ஒருபிடிக் கடுகு வாங்கும் வீட்டில் ஒருவருக்காவது குழந்தை, புருஷன், தாய், தகப்பன் அல்லது சிநேகிதன் இறந்திருக்கக் கூடாது. மரணமே காணாத வீட்டில் மரணமே அறியாத மனிதனிடம் வாங்கி வா. அந்தக் கடுகுதான் நான் செய்யப்போகும் மருந்துக்கு வேண்டியது' என்று புத்தர் கூறி முடித்தார்.

கீஸா கௌதமி தோளிலேகுழந்தையின் உடலைச் சாத்தியபடி வீடு வீடாக நுழைந்தாள். ஒரு பிடி கடுகு கொடுக்க யாரும் தயங்கவில்லை. மரணமறியா மாந்தரோ வீடோ ஒன்றுமில்லை. யாவரும் பழைய துயரத்தால் தலையில் கைவைத்து அழுதனரே ஒழிய மகிழ்வுடன் கடுகு தர முன்வரவில்லை.

'இருந்தவர் சிலர், இறந்தவர் பலர்' ஒருவரும் இறக்காத வீடு இல்லவே இல்லை.

கௌதமி நம்பிக்கையிழந்து தளர்ச்சியுடன் தெருவோரம் ஒன்றில் உட்கார்ந்தாள். அப்போது மாலையும் மாய்ந்து இரவு சூழ்ந்தது.

தெருவோர விளக்குகள் எரிந்தன. படீரென அணைந்தன. இரவின் அந்தகாரம் சூழ்ந்தது. கௌதமிக்குப் புதுப்பாடம் புரிந்தது. ஒளிவிட்ட விளக்கொளி இருளிடுவதும் உண்மைதான். இதுதான் மனிதரது வாழ்வ நியதி.

மலரும் வாழ்வு மங்குவது நியதி. வாழும் மனிதன் மரிப்பது நியதி. மரணம் என்பது எல்லோருக்குமுள்ள ஒரு நியதி. அதில் தப்ப முடியவே முடியாது. சுயநலக்காரி யான். சுயநலம் விட்டால் மரணபாதை கூட மலர்ப் படுக்கையாகுமே என்றெல்லாம் கௌதமியின் அறிவு போதனை செய்தது.

புத்திர வாஞ்சை என்ற திரை கௌதமியின் முன்பு இருந்தது. துன்ப ஏந்திழையானாள். அறிவு எனும் கத்தி அத்திரையை வெட்டியது. உண்மையைப் புரிந்தாள்.

உடனே பிள்ளையின் பிணத்தை அடக்கம் செய்தாள். அறிவுக் கண்ணைத் திறக்கச் செய்த புத்தரை நாடி ஓடினாள்.

புத்தரினடியில் வீழ்ந்தாள். புத்தர் பேசினார். உண்மை அங்கு விளக்கொளி செய்தது.

'மானிடர்கள் வாழ்வு சஞ்சலம் மிக்கது. காலத்தில் குறுகியது. கஷ்டம் மிகுதியாகவுள்ளது. எந்த வழியினாலும் மரணத்திலிருந்து தப்ப முடியாது. வயது நிறைந்த பின்பு மரணம் வந்தேயாகும். பிணியும் கொணரும். வாழும் பிராணிகளின் இயற்கைத் தத்துவம் இதுதான். பழுத்த பழம் மரத்திலிருந்து இன்றோ நாளையோ விழும். அதுபோல மனிதனும் இன்றோ நாளையோ இறக்க வேண்டும். மட்பாண்டம் உடைவது இயல்பு. அதுதான் மனித வாழ்வுமாகும். இளமையிலுஞ்சரி முதுமையிலுஞ்சரி கெட்டிக்காரனாக இருந்தாலுஞ்சரி, பைத்தியக்காரனாக இருந்தாலுஞ்சரி அறிஞனாயிருந் தாலுஞ் சரி, யோகியாயிருந்தாலுஞ் சரி எல்லோருமே மரண தேவனின் கட்டளைக்குப் பணிந்துதான் ஆகவேண்டும். ஆக்கமும் அழிவும் தேய்வும் வளர்ச்சியும் இந்த உலகத்தின் நியதி. ஞானிகள் அதற்கு வருந்துவதில்லை. அழுவதினாலோ துயரப்படுவதினாலோ மனிதன் சாந்தி பெற முடியாது. அப்படிச் செய்தால் கஷ்டந்தானதிகரிக்கும். நினைப்பது நடவாது. ஏமாற்றமடைவது உலகத்தின் சாதாரண சம்பவம். நூறு வருடம் ஒருவன் வாழ்ந்தாலும் அதற்குமேல் வாழ்ந்தாலும் கடைசியில் சுற்றத்தாரை விட்டுப் பிரிந்து மரணமடையத்தான் வேண்டும். சாந்தி வேண்டுமானால் மனிதன் துயர்படுவதை விடல் வேண்டும். பிறரைக் குறை சொல்வதைத் தவிர்க்க வேண்டும். அவா என்ற முள்ளை எவன் பிடுங்கி எறிந்து விட்டானோ எவன் சாந்தி எனும் நிலையை அடைந்து விட்டானோ எவன் துயரம் எனும் கடலைத் தாண்டி விட்டானோ அவனே தன்யனாவான். சாந்தி மனிதனாவான்'

புத்தர் போதனையில் கௌதமி உண்மையை உணர்ந்தாள். வாழ்வு மையத்தை அறிந்தாள். புத்தனின் நல்ல சிஷ்யை ஆனாள்.

கௌதமியிடம் மகிழ்வும் துயரமுமில்லை.

ஆனால்

சாந்தி உண்டு.

(ஈழகேசரி 25.4.1954, 2.5.1954)

# உறவு பலத்தது

புகையிரதம் முக்கிமுனகி 'கூ' ஒலியுடன் ஓடிக்கொண்டிருந்தது. நாளை இரண்டாந்திகதி. அரசினர் பாடசாலைகள் யாவும் ஆரம்பமாகும் தினம். ஆகையால் புகையிரதப் பெட்டிகளை ஆசிரியர்கள் நிரப்பிக் கொண்டு இருந்தனர். 1980 ம் ஆண்டு தொடங்கி எட்டு மாதமும் கழிந்து விட்டது.

ஓர் 'கம்பார்ட்மென்ரின்' ஓர் மூலையில் தூங்கி விழுந்து, தலையைப் பெட்டியுடன் மோதிக் கொண்டிருந்தார் ஆசிரியர் சுப்பிரமணியம். 59 வயது கொண்ட அவர் நித்திரையில் ஆட்டப்படாது என்ன செய்வார்? அவர் தலையில் வெள்ளி போன்ற கேசங்கள், நெற்றிச் சுருக்கம் அநுபவ முதிர்வை மட்டுமல்ல, அறிவுத் திண்மையையும் உணர்த்திக் கொண்டிருந்தது.

சுப்பிரமணிய ஆசிரியர் இதே புகையிரதத்தில் எத்தனையோ முறை பிரயாணம் செய்திருப்பார். அரசினர் பாடசாலையில் 30 வருடமாகக் கடமையாற்றும் அவர், புகைவண்டிக்குப் பேசுமாற்றலிருப்பின் அவருடன் தோழமை பூண்டு உறவாடுமே! அவர் இருந்த இடத்திற்கு முன்னால் ஒரு வாலிபன் கோர்ட்டும், சேட்டும் பூட்சுமாக - நாகரிகம் பெற்றவனாக உட்கார்ந்திருந்தான். அந்த வாலிபனது காலடியில் ஒரு சூட்கேஸ் கிடந்தது. அதில் 'சந்திரமோகன்' சர்வ கலாசாலை, பேராதெனிய என்ற விலாசமிட்டுக் கிடந்தது.

கால் செருப்பை மாட்டக் குனிந்த ஆசிரியர் கண்களை, சூட்கேஸ் எழுத்துக்கள் கவர்ந்தன. கண்களில் பட்ட எழுத்துக்கள் ஆசிரியர் உள்ளத்தை தட்டி விட்டது. ஆசிரியர் வாலிபனை ஊடுருவி நோக்கினார் - வாலிபன் ஊடாகப் பார்த்தார். அவனது கன்னக்கதுப்புக்கள் மொழி கூறும் விழி இரண்டு. சிறிது நீண்டகன்ற அழகுவாய், பொதுநிறம்.... அந்தக் கவர்ச்சிகரமான உரு ஆசிரியர் உள்ளத்தை உருட்டியது. பழமை காட்ட உதவியது. எண்ணங்களை அங்குள்ள ஏக்கங்களை நினைவுத் திரையிட்டது.

உள்ளம் வேகமாக உருண்டது... பின் நோக்கி உருண்டது.முப்பது வருடங்களுக்கு முன் போய்த் தாமதித்தது.

அங்கே ... அந்த ... நேரம் ... அவர் வாழ்வு ...! இந்த வாலிபன் அந்தக் காலத்தைக் கண்ணாடியாகக் காட்டுகிறானே! அவன் தோற்றம் ஒரு பெண்ணாக இருந்தால்: ஆசிரியர் உள்ளத்தை உருட்டாது, முடியாது, வாலிபன் வண்ண வதனத்தில் ஆசிரியர் வேறோர் வதனத்தை - அவருயிருடன் ஒன்றிச் சேர்ந்து கொண்ட - இன்னோர் வதனத்தையல்லவா கண்டார்?

ஆசிரியரால் வாலிபனைப் பார்க்காது இருக்க முடியவில்லை. வாலிபனும்

அடிக்கடி பார்த்தான். வாலிபனுக்குப் புதிராக இருந்தது அவரது பார்வை.

வாலிபன் கரத்திலே ஒரு 'நாவல்' இருந்தது. அந்நாவலின் நாமம் " நிலவும் பெண்ணும்". இந்நாவலை எழுதிய கதாசிரியரது புகைப்படம் முதற் பக்கத்தில் அழகாக அச்சிட்டுக் கிடந்தது. அப்புகைப்படத்தை அவ்வாலிபன் உற்று நோக்கினான்: பிறகு ஆசிரியருடன் ஒப்பிட்டு நோக்கினான். ஆனால் அப்புகைப்படம் ஒரு வாலிபனுடையது. சுப்பிரமணியம் ஆசிரியரது முகத்துடன் ஒப்புமை உண்டே. ஆசிரியர் வாலிபனானால், அப்புகைப்படம் போல இருக்குமே இப்படியெல்லாம் வாலிபனது உளமேடை ஆடியது.

இளமைத் துடிப்புடைய அழகிய முகம்: தலையில் சிறு சுருள். எதையும் தாங்கும் பழக்கமுடைய அமைதி நயனங்கள்: பார்க்கப் பரவசம் தரும் வாலிபம் ... இப்படித் தோன்றியது புகைப்படம். இப்புகைப்படத்தை முதிர்ச்சியடையச் செய்தால் ...! தலை நிறைந்த வெள்ளிக் கேசம் முகத்தில் சில சுருக்கங்கள்: அனுபவக் கோடுகள்: கட்டாயம் சுப்பிரமணிய ஆசிரியர் போன்றிருக்கும்!

அப்படியானால் சுப்பிரமணிய ஆசிரியர் இளமையில் எழுதிய நாவல்தானா? ... இப்படியான எண்ணக் கோவைகள் வாலிபனது உளப்பாதையில் புகைவண்டி போல ஓடிக்கொண்டிருந்தன.

விலகிப்போன ஸ்டேசன் போல ஆசிரியரது உளமும் முப்பது வருடம் முன்பு போய்க் கிடந்தது.

பன்னிரண்டுமணி ஆயது. நடு இரவு வண்டியிலுள்ள பிரயாணிகள் "காட்டூன்" படங்கள் போலத் தூங்கி விழித்துக் கொண்டிருந்தனர். பொதுவுடைமைச் சொத்தாய நித்திரை யாரைத்தான் விடும். ஆனால் ஆசிரியரை மட்டும் நித்திரை அணுகவில்லை: ஆனால் எண்ணங்கள் அல்லவா அணுகிப் பிரளயம் புரிந்து கொண்டிருந்தன.

'தம்பி என்ன புத்தகம்?' எனக் கேட்டார் ஆசிரியர்.

'நிலவும் பெண்ணும்'

' யார் எழுதியது?'

'பல சிறுகதைகள், பல தொடர் கதைகள் தீட்டிய யாழ்ப்பாணத் தமிழ் மகன் யாரோ அவர்தான்' என்றான் வாலிபன் புது முறுக்குடன்.

'நல்ல மதிப்புரைதான். ஆனால் யான் கேட்டது கதாசிரியரது பெயரை மட்டும் தானே' இப்படிப் பேசினார் ஆசிரியர்.

'கதாசிரியரைத் தெரியாது. அவர் உள்ளம் தெரியும்'

'நிலவும் பெண்ணும்தானே! சுத்த மோசம்: கயிறு திரிப்பு. ஒரு அனுபவமற்ற வாலிபனின் பிதற்றல் ... வெளிவந்தபோதே வாசித்த ஞாபகமுண்டு" என்றார் ஆசிரியர்.

வாலிபன் இடைமறித்தான்.

'பெரியவராக இருக்கிறீர்கள். அல்லது எனது கோபம் என்னவாக இருக்குமோ தெரியாது! ஒரு போதும் ஒரு ஆசிரியரைக் கண்டபடி கூறக்கூடாது. குறைமட்டும் சொல்லிவிடலாம். ஆனால் அதையே செய்ய யாராலும் முடியாது. இது தமிழ்ப் பரம்பரையின் சாபத்தீட்டுத்தான்' எனச் சிறிது உரத்தே பேசிவிட்டான் வாலிபன்.

ஆசிரியர் முறுவல் செய்தார். கண்கள் வாலிபனை அளந்தன.

'என் அபிப்பிராயம் கூறக்கூடாதா - அதுவா சாபத்தீட்டு'

'சரி உங்கள் அபிப்பிராயம்தான் யாது ஏன் பிதற்றல் ...' ஆவலும் கோபமும் அணி செய்யக் கேட்டான் வாலிபன்.

"நிலவும் பெண்ணும் ஒரு கதை: காதற்கதை, கலைச் செறிவே கிடையாத இளமையின்பத்தின் படப்பிடிப்பு. அது மட்டுமல்லாது காதல் பற்றி உண்மை தெரியாது வரைந்த ஒரு கண்மூடி நாவல்'... என ஆசிரியர் முறுவலிட்டபடி பேசினார்.

'இல்லை! இல்லை!! காதலை வாழ்க்கைக் கலையாக்கி, நிலவாக்கிக் குளிர்ச்சி காட்டுகிறார். இந்நாவலில்' என வாலிபன் கூறினான்.

'அப்படியா?' ஏளனமாகக் கூறினார் ஆசிரியர் இப்படி.

'உங்களுடன் கதைக்க விரும்பவில்லை' என்றான் படீரென வாலிபன்.

சிரித்தபடியிருந்தார் ஆசிரியர்! சில நிமிடங்கள் கரைந்தன.

'தம்பி - கதை பற்றி வேண்டாம் அபிப்பிராய பேதம் கொண்டவர்கள் நாம் - எங்கே போகிறீர்?'

'பேராதனை சர்வகலாசாலைக்கு'

'சொந்த ஊர்'

'யாழ்ப்பாணம்'

'பெயர்'

'சந்திரமோகன்'

'கூ' ஒலியுடன் புகையிரதம் நின்றது. அது ஒரு ஸ்டேசன். அப்பொழுது சந்திரமோகன் மடியிலிருந்த நாவல் பெட்டியின் இழுவலால் ஆசிரியரது காலடியில் போய் வீழ்ந்தது. புத்தகத்தை எடுத்து விரித்தார் ஆசிரியர்.

முதல் பக்கத்தில் மையினால் எழுதப்பட்டிருந்தன. சில வாக்கியங்கள். யாரோ அன்பளிப்புச் செய்த நாவலது. அவ்வாக்கியங்களை ஆசிரியர் வாசித்தார்.

'இதயச்சோர்வே வாழ்வின் உயர்வு. அதுவே ஆனந்த கீதம். இறந்தும் மாறாத இதய ஒட்டுறவே இன்னிசை யாழ் நாதம். எனது அன்பு இதயம் வாழ்க! பலமுடன் பல்லாண்டு வாழ்க... என் என் காதல் இதயத்தால் முரசு

கொட்டி, தங்கள் பிறந்ததினப்பரிசாக': என் அன்புயர் தந்தையின் அற்புத நாவலை அன்பளிப்பு ஆக்குகிறேன்.

'தங்களிதயம்'
எஸ். மல்லிகா

(15-05-1980)

'மல்லிகா'... சந்திரமோகன் பிறந்ததின அன்பளிப்பு: காதல் இதய முரசம்....'

ஆசிரியரை ஆச்சரியம் முழுக்காட்டியது. அந்தக் கையெழுத்துக்கள்.... ஆசிரியரைக் குண்டுக் கட்டாகத் தூக்கிக் கொண்டு மேலே மேலே போயின. ஆச்சரியம் என்ற மலை மேலே நின்றார். ஆசிரியர் ஓர் புதுக்கதை படித்தது போல் எண்ணக் கம்பிகளுள் சிந்தனை உணவை உண்டு கொண்டிருந்தார்!

'தம்பி இந்தக் கையெழுத்துக்களின் சொந்தக்காரி மல்லிகாதானே!

'ஆமாம்'

'யார் அப்பெண்?'

'ஒரு ஆசிரியை. ஏன் என் காதலி. என் எதிர்காலத் 'திருமதி' என்றான் தயக்கமின்றிச் சந்திரமோகன், தயக்கமேயில்லாத 1980ஆம் ஆண்டல்லவா?

'மல்லிகாவின் பெற்றோரும் உங்கள் காதலை ஒப்புக்கொண்டு விட்டார்களா?'

'தாய் கிடையாது. தந்தை மட்டுமே. அவரும் ஒரு முற்போக்குவாதி. காதலைக் கண்ணியத்துடன் மதித்துப் போற்றுபவர். இந்த நிலவும் பெண்ணும் எழுதிய கதாசிரியர் தந்தையானால் கேட்கவும் வேண்டுமா?' என மகிழ்வு உறவாடக் கூறிக் கொண்டிருந்தான், சந்திரமோகன்.

'எழுதலாம், பேசலாம், சீர்திருத்தம் செயலில் செய்யத்தான் தயங்குவார்கள்?'

'அது உங்கள் காலம்! இது 1980 ம் ஆண்டு. இரபதாம் நூற்றாண்டின் கடைசிக் கூறு. சாதியும் ஆச்சாரமும் இன்று கேலிமொழிகள், பைத்தியச் செயல்கள் இது காதலைக் கண்ணெனக் கருதும் பொற்காலம்' மகிழ்வில் பேசினான் சந்திரமோகன்.

'ஓகோ! மாமாவின் நாவல் என்றதால் தானே அப்போது எத்தனை ஆத்திரம் அடைந்தாய்' எனக் கேட்டார் ஆசிரியர் முறுவலுடன்.

'அதுதான் போக, உனது பெற்றோரின் சம்மதம் உண்டா?' என்றார் ஆசிரியர்.

'சிறுவயதிலேயே தந்தையை இழந்தவன். தாய் இருக்கிறார். என் தாயும் என் எண்ணத்திற்கு ஒரு போதும் குறுக்கே வரமாட்டார். புதுமையுள்ளம் கொண்டவர் என் அன்னை, அறிவு மிக்கவர் என் அன்னை. என் அன்னை கூடப் பல புதுமைக் கதைகள் எழுதியவர்...' என சந்திரமோகன் கூறினான்

பெருமை கட்டியமிட.

'தாயாரது பெயர்...?'

'சந்திராவதி' என்றான் சந்திரமோகன்.

'சந்திரா!... இந்த நான்கு எழுத்துக்கள் உயிருடன், மூச்சுடன், வாழ்வுடன் ஒவ்வொரு எழுத்தும் கலந்து ஆசிரியனாகத் தூக்கி நிறுத்தியது! ஆசிரியர் எழுந்தார்! அங்கும் இங்கும் நடந்தார்! உள்ளத்திலே எண்ணச் சுழல்கள் சுற்றிய வேகம், உள்ளத்தை உருட்டியது, உளச் சுழலிலே 'உலக வாழ்வு' புரண்டது. ஆசிரியரால் தாங்க முடியாத பழமை எண்ணச்சிதைவுகள், சிதறல்கள், ஏக்கங்கள்...! தலையைக் கையினால் பொத்தியபடியிருந்தார். கண்களிலே நீர் முட்டின. கன்ன வழி உருண்டன.

'ஏன் கலக்கமடைகிறீர்கள்' எனத் துயருடன் பிரச்சினையுடன் சந்திரமோகன் கேட்டான்.

புகைவண்டி டிக்கரி வீழ்ந்து விட்டது வழியில் என ஆசிரியர் புழுகினார்.

புகைவண்டி நின்றது. ஆசிரியர் இறங்க வேண்டியிருந்ததால் இறங்கி விட்டார். ஆவலுடன் சந்திரமோகனைப் பார்த்தபடி பிரிந்தார்.

கால முள் சுழன்றது...!

பாடசாலை லீவு ஆரம்பம். சந்திரமோகன் வீடு போனான். ஆனால் சுப்பிரமணியம் ஆசிரியரை அவனால் மறக்க முடியவில்லை. அவர் ஒரு புதிராகவே அவனுக்குத் தோன்றினார். தாயாரிடம் மோகன் கூறினான் - ஏனம்மா உங்கள் பெயரைக் கேட்டதும் அவர் கண்கலங்கினார்' எனவும் கேட்டான்?

சந்திராவின் உள்ளம் படபடத்தது. ஆச்சரியமூட்டியது. வீட்டுள் புகுந்தாள். பெட்டியைத் திறந்தாள். ஒரு போட்டோவை எடுத்தாள். கொண்டு வந்து மோகனிடம் காட்டினாள். 'இப்போட்டோதான் அவரது வாலிப காலத்தோற்றம்' - இப்படியா இருந்தார் எனக் கேட்டாள் ஆவலுடன்.

'இந்தப் போட்டோவில் உள்ளவர் முதியவரானால் அப்படித்தான் இருப்பார் அம்மா' என்றான் மோகன்.

'சந்திரா விக்கினாள். அழுதாள், 'அண்ணா' என்றாள்...... என் அண்ணா...!'

'அம்மா! அம்மா! என் அம்மா! விளங்கத்தான் சொல்லுங்களேன்'

'மோகன் கேள் - பதினெட்டு வயதுடன் மகிழ்வுடன் இளமைத் துடிப்புடன் நானிருந்த பொழுது யான் கல்லூரியில் படித்துக் கொண்டிருந்தேன். எனக்கு அவர் பாடம் சொல்லித் தந்தார். பாடத்துடன் அறிவுமிகு - வாழ்க்கைக்கு அவசியமான யாவற்றையும் நன்றாக விளக்குவார். நல்ல அறிவாளி. கூர்ந்த மதி கொண்டவர். எனக்குக் கூடப் பல கதைகள் எழுதும் ஆற்றலும் அளித்த பெருந்தகை அவர்தான். எங்கள் குடும்ப நண்பனாக மாறிவிட்டார். எனது

உயிர்ச்சகோதரன் ஆனார். ஒரு நாளைக்கு அவரைக் காணாவிடில் என் கண் நீர் காணும். சந்திரா - சந்திரா என்று அழைத்தபடி வீட்டில் நுழைந்தால் யான் மானாகித் துள்ளுவேன். அண்ணா அண்ணா என அடிக்கடி அழைத்தபடி அவருடன் சம்பாஷிப்பதில் பெரிய மனத்திருப்தி. அற்புத ஆனந்தம். அவர் வாயில் இருந்து உதிரும் சொற்கள் தானடா தமிழின் இனிமைக்கு எடுத்துக்காட்டு. என்தாய் கூட அவரை மகனாகவே எண்ணினார். அன்பு செய்தார். என் தாய் பெற்றுத் தராத குறை ஒழிய என் இதயச் சகோதரன் ஆனார். அக்காலம் இன்று போலல்ல. ஆணும் பெண்ணும் கதைத்து விட்டாலே பலவாறாகக் கதையளக்கும் பொல்லாத காலம். 1950ம் ஆண்டு பழைமையற்ற புதுமையுமற்ற காலமல்லவா? வீண் வதந்திகள் பறந்தன. எமது சகோதர பாசம் வேறு மாதிரிப்பட்டது. சமூக நாக்குகளுக்கு. பேசித் தீர்த்தன. நாம் காதல் புரிகிறோமாம். எனக் கயவர்கள் பிதற்றினர். நாடெல்லாம் இதே வதந்தி. யான் கண்ணீர் விட்டேன். எதையும் புதுமையுடன் நோக்கும் அவர், என் துயரத்தைத் தன் அறிவுச் சாதுரியப் பேச்சால் மாற்றி வந்தார். காலம் நகர்ந்து ஓடியது. யான் விவாகம் புரிந்தேன். மணமும் முடிந்து ஒரு மாசமும் கழிந்தது. வழக்கம் போல அவருடன் யான் உறவாடினேன், நடமாடினேன், கதைத்தேன், மகிழ்ந்தேன். ஆனால் என் கணவர் அறிவுவிட்டு உணர்வுக்கு மட்டுமே இடம் கொடுத்தார். சந்தேகப்பட்டார்.குடும்பத்துள் புயல் அடிக்க ஆரம்பித்தது. உடனே அவர் - என் அன்புயர் அண்ணன் உன் நன்மைக்காகப் பிரிகிறேன் எனக் கூறிப் பிரிந்தார். பிரிந்தே விட்டார். அவர் காலைப் பிடித்தபடி கடைசியாக அழுதுவிட்டு பிரிந்தேன். பின்பு சந்தித்ததே கிடையாது' எனச் சந்திரா கூறி முடித்தாள்.

'நிலவும் பெண்ணும்' என்ற நாவலை சந்திராவின் கைகள் எடுத்தன. அதிலிருந்த படத்துடன் தாய் கொடுத்த படத்தையும் ஒப்பிட்டுப் பார்த்தான். ஒரே படங்கள். தாயிடம் கேட்டான்.

'ஆமடா! இந்த 'நிலவும் பெண்ணும்' அவர் எழுதியது தானடா. இது கூட அவர் கூறக் கூற யான் எழுதிக் கொடுத்தேனடா' என சந்திரா பெருமூச்சுடன் கூறினாள்.

'அவருக்கொரு மகள் உண்டல்லவாம்மா' என்றான் சந்திரமோகன்.

'உனக்கெப்படித் தெரியும்'

அவள் பெயர் மல்லிகாம்மா. அவளும் யானும் ....என்று இழுத்தான் மோகன்.

சந்திராவின் கண்களில் கண்ணீர். அது ஆனந்த நிலை தந்த கண்திவலைகள்? சந்திரா உயர் மங்கை போல உடலில் புது உற்சாகம் கொண்டாள்.

'பின்பென்ன....'

'இதய அன்பு மாற்றங்களின் மாமருந்து' - ஒருவன்.

(சுதந்திரன் 1967-05-16)

# மிஸ் பாமா - 1956

கல்லூரி மணி அடித்தது. பாடசாலை அறையிலே மிஸ் பாமாவும், மிஸ் விமலாவும் இருந்தனர். அன்று கல்லூரியின் கடைசித்தவணை முடிவுநாள். அடுத்தநாள் தொடக்கம் விடுதலை.

'விமல்! இந்த லீவுக்கு சிவனொளிபாதமலை யாத்திரை செய்ய எண்ணம் - நீயும் வருகிறாயா?' என்றாள் பாமா.

'இல்லைப்பாமா. இந்த லீவில் எங்கும் போகும் எண்ணமில்லை'

'ஏன்! உனது 'லவ்வர் வருவாரோ!'

'வரக்கூடும்'

'ஓகோ! அதுதானே கேட்டேன். கண்ணில் புக்கு, கருத்தில் நடனமிட்டு உள்ளத்தைக் குலுக்கி, உடலையசைத்து, எண்ணமெல்லாம் ஒன்றாகி விடும் காதல். பார் விமல்... ஆமாம்! எப்படி என்னுடன் வருவாய்? சினேகிதியிலும் பார்க்கக் காதலன் உயர்ந்தவன் தானே! ம், நீ வரவே வேண்டாம்' என்று சிறு கேலி கலந்த கோபமுடன் பாமா கூறினாள்.

'பாமா! ஆறுமாதமாகிறது அவரை நான் கண்டு. இம்முறை தான் இரண்டு வார லீவில் வருகிறார். ஆகவே தான் உன்னுடன் வரமுடியவில்லை. குறை எண்ண வேண்டாம்' என்று அமைதியாகக் கூறினாள் விமலா.

'சரி, சரி கல்லூரி மணியடித்துப் பத்துநிமிடம் ஆகிவிட்டது. அதோ றிக்சாவும் வந்து விட்டது' எனக் கூறியபடி பாமா புறப்பட்டாள். விமலாவும் புறப்பட்டாள்.

பாமா றிக்சாவில் போய்க் கொண்டிருந்தாள். பாமாவின் தந்தையளவு வயது கொண்ட ஒருவன் வியர்க்க வியர்க்க இழுத்து ஓடிக் கொண்டிருந்தான். பாமாவின் மனம் மிக வேகமாக ஓடியது. தினமும் சந்தியில் றிக்சா திரும்பும் போது நேரேயுள்ள பெரிய பங்களாவின் யன்னலிலே ஒரு முகம் எதிர்பார்த்திருக்கும். பார்க்கும். விழியால் மொழி பேசும். ஆணின் வதனம் - இளமை வதனம் - அழகு வதனம் - அவ்வதனத்தையன்றும் கண்டாள். கண்கள் உறவாடின. மனம் களித்தது...!

'இன்னும் ஒரு மாதம் சென்று விடுமே, இனி இவ்வழகு வதனம் காண' என அவள் எண்ணினாள். ஏனெனில் ஒரு மாதம் லீவு. ஆதலால்...!

றிக்சா ஓடிக்கொண்டிருந்தது. அடுத்த தெரு, ஒரு சைக்கிளை எதிர்பார்த்தாள். தினமும் மாலை அவள் வரும் நேரம் அச்சைக்கிளிலே ஒரு வாலிபன் வருவான். கறுத்த ஆங்கிலேயனாக. நீண்ட காற்சட்டை, மடிப்புக் கலையாத சட்டை, கறுப்பு வர்ணக் கண்ணாடி, இருக்கிறதா? இல்லையா?

என்று கூறக்கூடிய மீசை... இப்படியான அலங்கார உருவம். சைக்கிளில் பாமாவைப் பார்க்கும், பல்லைத் திறக்கும். கண்கள் கடைக்கோடு வரை ஓடும். துடிக்கும். உள்ளம் நிமிரும்...!

'இன்னும் ஒரு மாசம் சென்று விடுமே இனி இவ்வழகுவதனம் காண' என அவள் எண்ணினாள். ஏனெனில் ஒரு மாதம் லீவு ஆதலால்.

பாமா சாதாரண குடும்பத்தில் பிறந்தவள். தனிப்பிள்ளை. எனவே பெற்றோரின் செல்லப்பிள்ளையாக வளர்ந்தாள். படித்தாள். ஆசிரியையுமாகி விட்டாள். பட்டதாரிப் பரீட்சையிலும் தேறி விட்டாள். அழகியல்ல. ஆனால் மெல்லுடையும் கடைச்சரக்கும், கண்வெட்டும் கண்மையும், சொண்டுமையும், சொண்டில் புன்சிரிப்பும் அவளிடம் இருந்தன. ஆகவே கவர்ச்சியானவளாகக் காணப்பட்டாள். உடுத்திருக்கும் வர்ணச் சேலை, மைகள், தூள்கள், இல்லாது அவளைப் பார்த்தால் கிழவன் கூடச் 'சீ' என்பான். பாலன் கூட வெறுப்படைவான். ஆனால், இன்றைய உலகம் வசீகர அலங்கார மருந்துகள் எவ்வளவை உற்பத்தி செய்துள்ளது. அதனால், படித்த பெண்கள் தமது உடலை எத்தனை விதமாகவெல்லாம் அலங்காரஞ் செய்கிறார்கள். மற்றவர் கவர்ச்சிப்பட வேண்டுமென்பதற்காக வெட்கத்தை விட்டும் உடை பல அணியும் அரிவையரைப் படித்த உலகம் பாருக்கு அளித்துள்ளதே!

உடை மட்டுமா? குணமே மாறி விட்டதே. கணமெல்லாம் மோகபாடமாச்சே. ஆமாம் அதுதான் 1956ம் ஆண்டு 'மொடல்!' பாமாவும், 1956ம் ஆண்டு 'மொடல் பெண்'.

சிரிக்கும் போது குலுங்க வேண்டும். அப்போது அவளுடன் சேர்ந்து அவள் கட்டிக்காக்கும் கொங்கைகளும் குலுங்க வேண்டும். முகம் முறுவலிட வேண்டும். மாறி மாறி அம்முறுவல் நெளிய வேண்டும். அதிகம் பேச வேண்டும். சினிமா போக வேண்டும். நண்பர் பலர் வேண்டும். காதல் செய்ய வேண்டும். என்னமோ, நாளெல்லாம் இனிக்க வாழ வேண்டும்? இதுதான் 1956 ம் ஆண்டு மொடல் நங்கையர் போக்கு. பாமாவும் மிஸ் 1956' தான்!

விமலாவும், பத்மாவும் ஒரே கல்லூரியில் படித்தவர்கள். ஒரே கல்லூரியில் ஆசிரியைகளாகக் கடமையாற்றுபவர்கள்.

விமலா இளமை தொட்டே கணேசனை அன்புடன் நேசித்தாள். பருவம் காதலாக்கிற்று. கணேசன் கண்டியிலுள்ள தபாற் கந்தோரில் உத்தியோகம். அதனால் அவனால் விமலாவை அடிக்கடி சந்திக்க முடியவில்லை. இந்த லீவில் 'கட்டாயம் சந்திப்பேன் விமல்' என்று வரைந்திருந்தான் கணேசன், விமலாவுக்கு. எதிர்பார்த்தாள். உள்ளம் மகிழ எதிர்பார்த்தாள்.

'நாளை வருகிறேன்' எனக் கடிதம் கிடைத்தும் விட்டது. விமலா துள்ளினாள். மகிழ்ந்தாள். கும்மாளமிட்டாள்.

மிஸ் பாமா கண்டியிலுள்ள தன் சிநேகிதி ஒருத்திக்கு எழுதிவிட்டுத்

தனிமையிலே கண்டி போய் அச்சினேகிதி வீட்டில் தங்கினாள்.

சினேகிதி வீட்டின் ஓர் அறையிலே ஒரு வாலிபன் வசித்து வந்தான். அவன் தான் கணேசன். கணேசனின் வாலிபம் பாமாவின் உள்ளத்தில் கதை பேசிற்று. உணர்ச்சி கூத்து ஆடிற்று. 1956ம் ஆண்டு மொடல் பெண் அல்லவா பாமா? ஆகவே கணேசனின் அறைக்குப் போனாள். முறுவலிட்டாள். அடிக்கடி மார்புச் சேலையின் வலது புறத்திலே இடைக்கும் மார்புக்கும் இடையே விட்டிருந்த வளையமான நிர்வாணச் சதையை தன் வளைக்கரத்தால் மறைப்பது போல ஏதேதோ செய்தபடி பேசினாள். கண் கவ்விற்று... கருத்துக் கலங்கிற்று. அதனாலே ஒரு கண நேரமே காதல் பேசி விட்டது. பின்பு கணேசனும் பாமாவும் சிவனொளிபாத யாத்திரை புறப்பட்டனர்.

மலையிலே, குளிரிலே, தனிமையிலே, இளமையிலே 1956ம் ஆண்டு வழமையிலே... அவர்கள் காதலராகி விட்டனர்.

கணேசன் 1956ம் ஆண்டு பெற்றெடுத்த வாலிபன். ஆகவே தனது பெயரை 'ஆனந்தன்' என்றான். பொய்கள் பெற்றெடுக்கும் குழந்தை தானே காதல்.

யாத்திரை முடிந்தது. பலன் பாமாவுக்கு மட்டும் இருந்தது. அவள் வயிற்றிலே 'சின்னக் கணேசன்' உருவாகிக் கொண்டிருந்தான்.

கல்லூரி தொடங்கி விட்டது. பாமாவும் விமலாவும் சந்தித்தனர்.

'எப்படி லீவு நாட்கள்?' எனக் கேட்டாள் பாமா.

'பறவாயில்லை'

'பறவாயில்லையா? ஏனடி விமல் உன் 'அவர்' வரவில்லையா?'

'கடைசிவரை வருவதாகவே எழுதினார். பின்பு, ஏதோ அவசர உத்தியோகம் காரணமாக வேறு ஊர் போவதால் வரமுடியவில்லை என நேற்று அறிவித்தார்' என்றாள் விமலா.

'ஆண்களிப்படித்தான் விமலா...' என்று பாமா கூறி வாய் மூடுமுன், 'இல்லை கணேசு அப்படியானவரல்ல. எனக்கு அவரைத் தெரியாதா என்ன?' என்றாள் விமலா.

'ஆமாம் காதலைக்குறை கூறினாலும் காதலனைக்குறை கூறப் பெண்கள் விடுவதில்லை. எனக்கும் இப்பொழுது தானடி காதல் தெரிகிறது' என்றாள் பாமா.

'ஏது காதல் தொடங்கி விட்டதோ'

'ம்... என்றாள் பாமா.

'உனக்கு நண்பர்கள் தானே பலர்... காதலர்கள் ஏற்படமாட்டார்களே'

'அதுதான் மாறிவிட்டது'

'எப்படி?'

'எனது சிவனொளிபாத யாத்திரையும் காதலும் ஒன்றாகக் கிடைத்தது'

'யார் அந்த...?'

பாமா அடிக்கடி உமிழ்ந்தபடி இருந்தாள். 'வாய் கசப்பாக இருக்கிறது' எனவும் கூறினாள்.

'அவர் ஆனந்தன்'

'ஆனந்தனா?'

'இதோ' என ஒரு போட்டோவைப் பாமா காட்டினாள்.

இவரா....?' விமலா கத்திவட்டாள்.

கணேசனுக்குத் தெரியாமலே அவனது சட்டப் பையிலிருந்து பாமா திருடிய போட்டோ அது.

'என் விமல்!'

விமலாவின் உள்ளத்திலே நெருப்புக்கோலம்! பிரமை பிடித்தவள் போல அப்படியே உட்கார்ந்திருந்தாள்.

'விமல்! காதல் மட்டுமல்லடி. அதன் பலனும் கிடைத்து விட்டதடி. நமது இன்பத்தின் உருவமும் வளர்கிறதடி' எனப் பாமா பேசிக் கொண்டிருந்தாள்.

உடனே விமலா வீடு போய் விட்டாள்.குரலெடுத்து அழுதாள்,குமுறினாள்.

பாமா றிக்சாவில் போகும் போது இப்போதும் தெருவில் காணும் வழமையான கண்களை முன்போலப் பார்க்கிறாள். சிரிக்கிறாள். வழமை மாறவே இல்லை.

காலம் ஓடியது.

கணேசன் கண்டியை விட்டு வரவேயில்லை. அங்கேயே ஒரு சதியை அடைந்து கொண்டான்.

பாமா ஒரு குழந்தையுடன் பலருடன் - அதாவது பல ஆண்களின் துணையுடன் வாழ்கிறாள். ஆனால் அவளிடமும் மகிழ்வில்லை.

விமலா கண்ணியமுடன் கண்ணீருகுத்தபடி தானும் தன் ஆசிரியத் தொழிலும் எனக் காலம் கடத்துகிறாள்.

ஆமாம் 1956ம் ஆண்டு மொடல்....!

கண்ணியம் விரும்புபவள் கண்ணீருகுப்பதும், சிரித்தவள் சீரழிவதும் இயல்பு.

மறந்து விடாதீர்கள். இது 1956ம் ஆண்டு மொடல்.

# மிஸ் செல்லம் - 1956

அன்றைய தபால்களைப் பிரித்தேன். இரண்டு விமரிசனக் கடிதங்கள். 'கலைவாணி' என்ற மாத இதழில் 'மிஸ் பாமா - 1956' என்ற தலைப்பில் நான் எழுதியசிறுகதை பற்றிய விமரிசனங்கள் அவை. ஒன்றை ஒரு பெண் எழுதியிருந்தாள். மற்றதை ஒரு ஆண் எழுதியிருந்தான்.

எழுத்தாளருக்கு விமரிசனத் தபால் படிப்பதில் ஆவலதிகம். தமது கதைகளைப்பற்றி வாசகர்கள் என்ன எண்ணுகிறார்கள் என்பதை அறிய கதாசிரியர்களுக்கு ஆவல் இருப்பது ஒன்றும் அசாதாரணமானதல்லவே. ஆகவே அவசர அவசரமாகத் தபாலைப் பிரித்தேன். பெண்ணின் கடிதத்தை முதலாவது வாசித்து விடுவோமே! ஏனெனில் நான் 'மிஸ் பாமா - 1956' எழுதி வெளியான பிறகு, நானறிந்த பெண் சகோதரிகள் எல்லாம் என் மேல் 'பாய்ந்தார்கள்'

'பெண்களை இழிந்துரைப்பதுதானே கதாசிரியர்கள் வேலை' என்றாள் ஒருத்தி.

'பெண்மையைச் சரியாக உணராது சடார் புடார் என ஏதாவது எழுதிவிடுவதா? என்ன?' இன்னொருத்தியின் கோப உரை இது.

'பெண்ணைப் பற்றிய தன்மைகளை மணம் முடியாத உங்களால், நேர்மையாக ஆராய்ந்தறிய முடியவில்லை. அதனாலேயே மிஸ் பாமாவை ஒரு வேசியாக சிருஷ்டித்து விட்டீர்கள்' என்றாள், ஒரு ஆசிரியச் சகோதரி.

இப்படியான 'மதிப்புரைகள்' நேரிலும் கடித மூலமும் கிடைத்தன. கதையின் கருத்துத்தான் அவர்களை ஆகர்ஷித்தது, ஆபாசமாகச் சில வாக்கியங்கள் அமைந்து விட்டன எனவும் கூறினர் சிலர். எனவே இக்கதையை நான் ஏன் எழுதினேன் என்று என்னையே நான் கேட்டுக் கொண்டேன்.

நான் இக்கதையில் சிருஷ்டித்த பெண் பாத்திரங்கள் உலகில் இல்லை. தமிழ் பேசும் மக்கள் வாழும் நாட்டில் கிடையாதா? சமுதாயத்தின் வாழ்வுக் கோணங்கள் தானே கதையாகின்றன. அப்படியானால் இக்கதை என் கற்பனையில் உண்டாகக் காரணமென்ன? இந்தச் சமுதாயமா அல்லது நானா? நானும் சமுதாயத்தின் ஓர் அங்கம் தானே!

அடடா! அப்பெண்ணின் கடிதம் கையில் இருந்தபடி, யோசனையிலாழ்ந்து விட்டேனே. படித்து விடுவோம். படிக்க முன்பு 'மிஸ் பாமா - 1956' ஐ ஓர் முறை முன்னே கொண்டு வர வேண்டும். அதாவது கதையைத்தான்.

'மிஸ் பாமா - ஒரு ஆசிரியை, அலங்காரி, கடையிலேயுள்ள நாகரிகப்

பொருட்கள் யாவும் சூடிக் கொண்ட ஒய்யாரி, அதாவது 1956 ம் ஆண்டு மொடல் பெண். அவள் லீவு காலத்தை மகிழ்வுடன் கழிப்பதற்குச் சிவனொளிபாதமலை யாத்திரை செய்தாள். ஓர் ஆணின் கைப்பாவையானாள். குளிரும் தனிமையும் பருவத்துடிப்பும் அவளை இளமை ஆசைக்கு இழுத்தன. அதனாலே, அவள் கர்ப்பமுற்றாள். சொந்த ஊர் வந்த பின்பு தான் தான் கர்ப்பமுற்றிருந்ததை உணர்ந்தாள். அவள் கர்ப்பந்தரிக்கக் காரணமான 'திடர்க் காதலன்' வேறு யாருமல்ல. அவளுடைய பாடசாலை ஆசிரியத்தோழி செல்வி விமலாவின் காதலன். கடைசியில், அந்தக் கதாநாயகன் மிஸ் பாமாவையோ, செல்வி விமலாவையோ மணஞ் செய்யவில்லை. வேறு ஒரு செல்வியைத் திருமதியாக்கிக் கொண்டான். மிஸ் பாமா பல ஆடவர் துணை கொண்டு வாழ்கிறாள். செல்வி விமலா கண்ணீர் விட்டபடி காய்ந்த வாழ்வு வாழ்கிறாள்... சிரித்தவள், சீரழிவதும், கண்ணியம் விரும்புபவள் கண்ணீர் உகுப்பதும் '1956ம் ஆண்டு மொடல்' - எனக்கதை முடிகிறது.

கதையிலே 'கலைவாணி' ஆசிரியர் அறியாமலே, நான் எழுதாமலே இன்னோர் பிழையுமுண்டாகி விட்டது. 'சிவனொளிபாத மலையிலே குளிரிலே...! என நான் எழுதியிருக்க - அச்சிலே சிவனொளிபாத மலையிலே குளியிலே....' என வந்து விட்டது. 'குளி' என்பது பிழை. 'குழி' என்றாவது வரவேண்டியது. 'ரி' தவறியதால் ஏற்பட்ட விபரீதம் இது ஆபாசம் எனப் பலரைக் கூறச் செய்தது. இன்னொன்று 'கொங்கை அசையச் சிரிப்பது' என்ற வசனம்! கையசைய நகைப்பது, உடலாடச் சிரிப்பது, என்பது போலத்தான். 'கொங்கையசையச் சிரிப்பது'ம் என்று ஏன் கொள்ளக் கூடாது? தமிழிலக்கியங்கள் படித்துப் பரீட்சை சித்தியடைந்தவர்களுக்கா 'கொங்கை' புதிய ஆபாசச் சொல். எது ஆபாசம்? சொற்கள் மட்டும் ஆபாசமா? அவை ஆபாசமெனில் இன்று எத்தனை எத்தனையோ ஆபாசங்களுண்டே! அது போகட்டும். தெளியும் போது தெளியட்டும்!

அப்பெண்ணின் கடிதம் படிக்க முன்பு 'கதாசிரியமனம்' எங்கெல்லாம் ஓடுகிறது. ம்! கடிதத்துக்கு வருவோம்.

மருதூர்

31-01-57

அன்புள்ள கதாசிரியர் அவர்கட்கு,

வணக்கம். தாங்கள் அண்மையில் எழுதியிருந்த 'மிஸ் பாமா 1956' ஐப் படித்தேன். தங்களுடைய கதைகளை மிகவும் ஆவலுடன் படிப்பவர்களுள் நானுமொருத்தி. ஆனால், மிஸ் பாமாவைப் படித்ததும் உங்கள் மேல் ஆத்திரம் தான் பீறிட்டு வருகிறது. பெண்மையை இழிவுபடுத்த உங்கள் பேனாமை செலவாக வேண்டுமா? உங்களை நான் நேரிலறியாதவள். ஆனால், உங்கள் கதைகள் மூலம் உங்களையறிந்திருக்கிறேன்.

நல்லதொரு சமுதாயம் உருவாக வேண்டுமென்ற கனவு கொண்ட இலட்சியக் கதைகளையே நீங்கள் எழுதுவது வழக்கம். 'மிஸ் பாமா - 1956' புதிய வேண்டாத கருத்தையல்லவா தருகிறது. மிஸ் பாமா போலப் பெண்கள் வேறு எங்காவது இருக்கலாம். தமிழ் நாட்டில் கிடையாது எனத் துணிவாகக் கூறுவேன். ஆனால், பாமாவையும், விமலாவையும் ஏமாற்றுகின்ற ஆண்களை இன்று, இச்சமுதாயத்தில் ஆயிரம் ஆயிரம் காணலாம். அப்படிப்பட்ட ஆண்கள் மத்தியிலும் தன்னை, தன் நெறியை இன்றைய தமிழ்ப் பெண் நன்கு காப்பாற்றியே வாழ்கிறாள். கண்ணியத்தை உயிராகக் கொண்டு, மனம் நிறைய வாழவே அப்பெண்ணும் விரும்புவாள். நீங்கள் கற்பனை செய்த பாமா போன்றோர் கிடையவே கிடையாது. அறியாமையால், பெற்றோரின் பாதுகாப்பின்மையால் சில வேண்டாத பழக்கங்களை போதிய கண்காணிப்பின்மையால் பழகி விட்டோம். தனிமையிலே புதிய மோக உணர்வில் சிவனொளிபாத மலை யாத்திரை செய்யலாம். ஆனால், நெறி தவறுவாளென்பதை என்னால் நம்ப முடியவில்லை. தமிழ்ப்பெண்மை அப்படியானது. நான் ஒரு பெண். பெண்மையைப் பற்றி என்னால் நன்கு கூற முடியும். ஆகவே, தயவு செய்து பெண்களைக்குறையாக எழுதும் கதைகளைச் சிருஷ்டித்துப் பெண்ணுலகுக்கு அம்பெய்யாதீர்கள். தீமையம்பு நன்மைப் பக்கம் சாயாது. தீமைப் பக்கமே சாயும். ஆண்கள் சரியாகப் பெண்களை உணர முடிவதில்லை. கதாசிரியரும் ஆண் தானே! அதனால் வந்த வினைதான். 'மிஸ் பாமா 1956' குற்றமிருந்தால் மன்னியுங்கள். நான் கூறுவதையம் எண்ணிப் பாருங்கள்.

உண்மையுள்ள,

செல்வி. செல்லம்

கடிதத்தை திரும்பவும் ஓர் முறை படித்தேன். செல்வி செல்லம் இவ்வளவு ஆத்திரமடையக் காரணம் ....? முதுகில் புண் கொண்டோர். சிறு துவார வேலியால் புகுந்து செல்லப் பயந்து, நியாயம் பேசுவதும் உண்டு. அதிகமாக, முடியாததை நியாயமெனப் பேசித் தமது பெலயீனத்தை மறைப்பது அகநிலையின் ஒரு தன்மை. செல்லத்தின் ஆத்திரத்துக்கு இதுதான் காரணம். ஒருவேளை அவள் கூறியதெல்லாம் உண்மைதானா?

"நான் எழுதிய கதை வழுத்தானா?" என்னைத் திரும்பவும் நான் கேட்டேன்.

அடுத்த கடிதத்தையும் படித்து விடுவோமே! அது ஆணின் கடிதம்.

சோலைநகர்

31 - 1 - 57.

கதாசிரியர் அவர்கட்கு,

வணக்கம். தாங்கள் எழுதிய 'மிஸ் காமா 1956' ஐப் படித்தேன். உண்மையாக

மகிழ்ந்தேன். ஏனெனில் இன்றைய 1956ம் ஆண்டில் உலாவுகின்ற பெண்களை அப்படியே படம் பிடித்துவிட்டீர்கள். முழுவதும் உண்மை. இப்படியாகத் தாம் செய்வதைப் பிழையென்றே அவர்கள் ஒப்புக் கொள்வது கிடையாது. 'மிஸ்' என்று கூறிக்கூறி அவர்களில் சிலர் செய்யும் அட்டகாசம் - படித்தவர்கள்தானா இவர்கள் என எண்ணச் செய்கிறது நம்மை.

உங்களுடைய கதையிலே வருகிறாளே பண்பில்லாத மோகவெறி கொண்ட பாமா. அதே போன்ற ஒரு பெண்ணினால் நான் படும் அல்லல், அப்பப்பா! என் உள்ளமே கற்பாறையாகி விட்டது. உங்களுக்கு எனது கதையைக் கூறினால் என் வேதனை ஒரு அளவுக்குக் குறையும் என்று நம்புகின்றேன். எனவே சுருக்கமாகக் கூறுகின்றேன் படியுங்கள்.

நான் எஸ்.எஸ்.ஸி படிக்கும் போது எனக்குக் கற்பித்தாள் ஓர் ஆசிரியை. எனக்கு அப்போ இருபது வயது. பலமுறை எஸ்.எஸ்.ஸி யில் தங்கிவிட்ட 'கெட்டிக்காரன்' நான். அவளோ எஸ்.எஸ்.ஸி தராதரப் பத்திர ஆசிரியை. அவளுக்கு இருபத்திரண்டு வயசுவரையிருக்கலாம். ஆசிரியையும் மாணவனும் தான் நாங்கள் இருவரும். என்றாலும் இவற்றையா பார்க்கிறது? காதலரானோம் மணம் முடிப்பதாக வாக்கு மாற்றிக் கொண்டோம். எனக்கு உத்தியோகம் கிடைத்ததும் இருவரும் திருமணம் என்று திட்டம் தீட்டினோம். ஓராண்டு மறைந்தது. எனக்கே தெரியாது எங்கள் கல்லூரி ஆசிரியர் ஒருவருடன் இந்தியாவிலுள்ள மைசூர் சென்று வந்தாள் ஆசிரியை. அதாவது என் காதலி. இது நியாயமானதா என நான் காதல் உரிமையில் அவளைக் கேட்டேன். அவள் ஆத்திரப்பட்டாள். ஐயம் கொண்டவன் என்றாள் என்னை. கடைசிக் கடிதமே எழுதி விட்டாள். அக்கடிதத்தையும் இத்துடன் இணைத்துள்ளேன். தயவு செய்து அதையும் சிரமத்தைப் பாராது படியுங்கள்.

அன்புள்ள
சி. செல்வராஜன்

மருதூர்
5-7-56

சந்தேகப் பிராணியே!

கூடப் படிக்கும் ஆசிரியருடன் பிரயாணம் செய்தால் சந்தேகப்படுவதா? ஆணின் பெலயீனமே சந்தேகமாகித்தானே புறப்படுகிறது. இப்படிப்பட்ட காதல் எதற்கு? நான் தான் ஆளையறியாது தவறு செய்து விட்டேன். எனது சுதந்திரத்தில் கைவைக்கும் எந்த ஆணும் எனது காதலனாக முடியாதவன். இனிமேல் நமக்குள் இருந்த தொடர்பு யாவுமே அறுபட்டு விட்டது. வீண் தொல்லை தர வேண்டாம்.

இப்படிக்கு
செல்வி. செல்லம்

சுதந்திரமே நீ வாழ்க என நான் எண்ணினேன். என்ன செல்வி செல்லமா? எனக்கு இன்று எழுதிய விமர்சனக் கடிதமும் அவளுடையது தானே. அதே அவள் தானா இந்தச் செல்லம். எழுத்துக்களை ஒப்பிட்டுப் பார்த்தேன். சந்தேகமே இல்லை. ஒரே எழுத்துக்கள். அவள் தான் இவள்! இவள் தான் அவள்!

நான் நன்றாகச் சிரித்தேன். பெண்கள் பலே கைக்காரிகள். புதிர் என்று பலரும் இதைத்தான் பெண்மேல் சுமத்திக் கூறினரோ! அறிந்தும் அறியாதது போல வாழ்வது சில பெண்களின் இயல்பா, என்ன? எ...ன்...ன?

நியாயம் பேசும் அதே செல்லம், பாமா செய்த அதே பிழையைத் தானும் செய்திருக்கிறாள். பெண்மையை இழக்காதிருக்கலாம். வேற்று ஆடவருடன் தனிமையில் பயணஞ் செய்வதும் உல்லாசமாக உலாவுவதும் பிழையில்லையா? பிழை விடுவது மட்டுமல்ல, பிழைக்கு வழிதரக்கூடிய பாதையில் தூய உள்ளத்தோடு செல்வதும் பிழை தான்!

இந்த உண்மையை மிஸ் பாமா போன்ற பெண்மணிகள் உணர முடியாது. ஏனெனில் அவர்கள் எண்ணும் உலகம் வேறானது. வாய்ச்சொல்லும் - செயலும் அவர்களைப் பொறுத்தமட்டில் வெவ்வேறானவை. பரிதாபத்துக்குரிய பாமாக்களுக்காக நான் ஒரு சொட்டுக் கண்ணீர் விட்டேன்.

(சுதந்திரன் - 1957-07-28)



கலட்டி வண்ணார்பண்ணையில் 1929 ஆம் ஆண்டு பிறந்த புதுமைலோலனின் இயற்பெயர் வேலுப்பிள்ளை கந்தையா கந்தசாமி. புனைகதைத் துறைக்குரிய சிறுகதை ஆசிரியராக இவரை உரு வாக்கி விட்டவை ஈழகேசரியும் சுதந் திரனுமாம். பெரியாரின் பகுத்தறிவுக் கொள்கை இவரை ஆக்கிரமித்திருந்தது. ஐம்பதிற்கும் மேற்பட்ட சிறுகதைகளை எழுதியுள்ளார். ஏமாற்றம், தாலி, நிலவும் பெண்ணும் என்பன இவரது நவீனங்க ளாகும். ஈழத்தில் பேச்சுக்கலை கைவரப் பெற்றவர்களில் புதுமைலோலன் முக்கிய மானவர். ஈழத்தின் சிறுகதை இலக்கியத் திற்குப் புதுமைலோலனின் பங்களிப்பு ஒரு காலகட்டத்தின் சிறுகதை வரலாற் றில் முதன்மையானது.